


## 1

அந்த நீண்ட பாதையில், தன் மலர்களை மவுனமாய் உதிர்த்திருந்தன, கொன்றை மரங்கள்.

பூமியிடம் விடைபெற்றுச் செல்ல தொடங்கியிருந்த அஸ்தமனச் சூரியன், இரவின் வருகையை வாழ்த்து அட்டை போல் அழகாக அறிவித்துக்கொண்டிருந்தது.

அந்தப் பொறியியல் கல்லூரி பேருந்தின் ஜன்னலோரம் அமர்ந்து வெளியே வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த தாராவை, தோழி நித்திலாவின் குரல் கலைத்தது.

"என்னடி? காலையிலேருந்து என்னவோ போலிருக்கே? *உடம்பு சரியில்லையா?*"

பரிவுடன் கேட்ட நித்திலாவைத் திரும்பிப் பார்த்த தாராவின்

விழியோரங்களில் கண்ணீர்த்துளிகள்.

"ஏன்டி அழறே? வசந்த்கூட ஏதாவது பிரச்சினையா?" பதறிப் போய் கேட்டாள்.

"இல்லை! வீட்டிலே பாட்டிக்கு உடம்பு சரியில்லாம ஆஸ்பத்திரியிலே சேத்திருந்தோமில்லையா? அவங்களைப் பாக்கறதுக்கு, நேத்து எங்க அத்தையும், மாமாவும் வந்திருந்தாங்க" சோகத்துடன் கூறினாள்.

"அவங்க வந்தா, அதுக்கேன்டி நீ அழறே?" கேலியாகக் கேட்டாள்.

"சும்மா கிண்டல் பண்ணாதே நித்தி! நான் சின்னவயசா இருக்கும்போதே அப்பாவுக்கும், அத்தைக்கும் ஆகாது. தொடர்பு விட்டுப்போச்சு! ஏதோ சொத்துப் பிரச்சினை... எங்க தாத்தா தரேன்னு சொன்ன சொத்தை அப்பா தரலையாம்... அதனால அவங்க எங்க வீட்டுக்கு வர்றதே இல்லை...

பாட்டி மட்டும் எப்பவாவது தன் பொண்ணுக்கு கடிதம் போடுவாங்க... இப்ப பாட்டிக்கு 'சீரியஸா' இருக்கிறதாலே அப்பா தந்தி குடுத்திருக்காங்க. அவங்களும் திருச்சியில்தான் இருக்காங்க... அத்தையும், மாமாவும் உடனே கிளம்பி வந்துட்டாங்க. இப்போ பாட்டிதான் பெரிய பிரச்சினையைக் கிளப்பிவிட்டிருக்காங்க" வேதனையுடன் நிறுத்தினாள், தாரா.

"அப்படி என்ன பெரிய பிரச்சினை... நீ இப்படி 'டைட்டானிக்' கப்பல் கவிழ்ந்த மாதிரி கவலைப்படுற அளவுக்கு!"

சூழ்நிலையை இதமாக்க முயன்றாள், நித்தி.

"அத்தைக்கு ஒரு பையன். அவன் 'பி.இ.' முடிச்சிட்டு, கம்ப்யூட்டர் என்ஜினீயரா இருக்கான். அவனுக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சிடணும்னு திடீர்னு முடிவு எடுத்திருக்காங்க. நான் வசந்தைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். அவரை என்னால மறக்க முடியாது. இப்பப் புரியுதா என்னோட பிரச்சினை என்னன்னு?" ஆத்திரத்துடன் கேட்டாள், தாரா.

"புரியுது... பேசாம வீட்டில உன் காதலைப் பத்தி சொல்லிட வேண்டியதுதானே?"

"ப்ச்... முன்னாடி சொல்லி இருந்தாக்கூட ஏத்துட்டிருப்பாங்க... இப்ப ரெண்டு குடும்பமும் இணையறதுக்கு என்னைப் பாலமாக்கிடலாம்னு முடிவு பண்ணி இருக்காங்களே!



இப்போ சொன்னா நிச்சயமா ஏத்துக்கமாட்டாங்க... என்ன பண்ணுறதுன்னே புரியலை. வசந்த் வேற தொழில் விஷயமா வெளியூர் போயிருக்காரு..." தாரா தவிப்புடன் கூறினாள்.

"என்னைக் கேட்டா இந்த விஷயத்தை நீ வீட்டில சொல்லிடறதுதான் சரி. உங்கம்மாகிட்ட முதல்லே சொல்லு. அப்படி சொல்ல தைரியம் இல்லைன்னா, அவங்க சொல்றபடி நடந்துக்கோ."

இயல்பாகக் கூறியவளை, தாரா கோபத்துடன் முறைத்தாள்.

"காதல்னா என்னன்னு தெரியுமாடி, உனக்கு? காதலைப்பத்தி ஒண்ணுமே தெரியாத ஜடத்துக்கிட்ட போய் பேசிட்டிருக்கேன் பாரு... அது என் தப்புதான்! முதல் காதல் எப்பவுமே மனசுல ரொம்ப ஆழமாப் பதிஞ்சுடும். அதை அழிக்கிறது ரொம்பக் கஷ்டம்! என்னால, எங்க காதலையும், வசந்தையும், யாருக்காகவும் விட்டுத் தரமுடியாது" அழுத்தமாகக் கூறினாள்.

ஒரு பெருமூச்சுடன் உடனே மவுனமாகிவிட்ட நித்திலாவிற்குள் பழைய நினைவுகள்!

தன் மனதிற்குள்ளும் முதல் காதல் துளிர்விட்ட அந்தக் காதல் காலம், மனதில் சுகமான எண்ண அலைகளுடன் தளும்ப-மனம் அந்த நினைவுகளில் இனிதாக் மிதக்கத் தொடங்கியது.

**அ**ப்போது அவள், பத்தாவது படித்துக்கொண்டிருந்த நேரம்!

அவர்களுடைய குடும்பம் கோயம்புத்தூரில் இருந்தது.

பக்கத்து வீட்டில் குடியிருந்த சங்கரனின் குடும்பம் இவர்களுடன் நட்பாய் இணைந்திருந்த காலம்.

நித்தியின் தாய் காஞ்சனாவும், சங்கரனின் மனைவி ரேவதியும் இணைபிரியாத் தோழிகள்!

இருவரும் ஒன்றாகக் கோவிலுக்குச் செல்வதும், சமையல் வகுப்பிற்குப் போவதும், ஓய்வு நேரங்களிலும் ஒன்றாகவே இருப்பதும் அந்தத் தெருவிற்கே தெரியும்.

ரேவதிக்கு நரேந்திரனும், விந்தியாவும் செல்லப் பிள்ளைகள்!

நித்திலாவைவிட விந்தியா ஒரு வயது சிறியவளென்றாலும்,



இருவரும் அன்பான தோழிகள்!

நரேன் அவர்களைவிட நாலைந்து வயது பெரியவன்!

அவர்கள் மூவரும் விடுமுறை நாட்களில் ஒன்றாக சதுரங்கம், கேரம் என்று ஏதாவது விளையாடிக்கொண்டிருப்பார்கள்.

அப்படி மூன்று ஆண்டுகளாக ஒரே குடும்பமாய்ப் பழகி வந்தபோதுதான், நித்திலா ஒரு நாள் பூப்படைந்தாள்.

ஒரே பெண் என்பதால் தியாகராஜன் மிகவும் விமரிசையாக மஞ்சள்நீராட்டு விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்தார்.

ஆனால், காஞ்சனாவிற்கு அண்ணன் என்று யாரும் இல்லாததால், சங்கரனே முன்னின்று சீர் செய்தார்.

ஓலைமுடைந்து வைப்பது முறைப் பையனின் வழக்கம் என்பதால், அவர்களுடைய பையன் நரேந்திரனை விட்டே எல்லா முறைகளையும் செய்ய வைத்தாள், ரேவதி.

நரேன் அப்போது 'பி.இ.' படித்துக்கொண்டிருந்தான்.

முதல் நாள் வரை அடித்துப் பிடித்து விளையாடிய நித்திக்கோ, அந்த ஓலைத் தடுப்பின் சாளரங்களின் வழியே கூர்மையான அவன் விழிகளைக் கண்டதும், மனதில் புதிதாய் ஒரு படபடப்பும், வெட்கமும்!

நலங்கு வைக்கும்போது, மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், அவனுடைய மென்மையான பார்வையால் முதன்முதலாக தன் உயிர்வரை சுவாசித்தாள்.

அந்த நிமிடம், புரியாத ஒரு உணர்வில் மனம் சிலிர்த்துத் தவித்தது.

அவளுக்குள் ஏதோ ஒரு மாற்றம் வர, அன்றிலிருந்து அவனைக் கண்டாலே அடிவயிற்றிற்குள் ஆயிரம் தும்பிகள் படபடத்தன.

முகம் சூடாகிச் சிவப்பதை உணர்ந்தபோது, அது தவறோ என்று மனம் இடித்துரைக்க, தன் உணர்வுகளைத் தனக்குள்ளே புதைத்துக்கொண்டாள்.

ஆனால், அவனும் சிறிது ஒதுங்கியே இருந்தான். இருவருக்கிடையேயும் கண்ணுக்குத் தெரியாத ஒரு மெல்லிய நூலாய் நேசம் இழையோடுவது போல் அவளுக்குத் தோன்றியது.

பிறகு வந்த நாட்களில் அவனுடனும், விந்தியாவுடனும் சதுரங்கம், கேரம் என்று விளையாடும்போதெல்லாம் அழையா



விருந்தாளியாய் ஒருவித வெட்கமும், விலகலும் அவளை ஆட்கொண்டன.

சில நேரங்களில் நரேனே அதைக் கேலி செய்ய தொடங்கினான்.

"எம்மா... இந்த விந்தியாவும்தான் பெரிய பெண்ணாயிட்டா... இன்னும் அடங்கறாளா பாருங்க! வாய் சிறுவாணி ஆறு மாதிரி நீண்டுகிட்டே போகுது. நித்தியைப் பாருங்க! எவ்வளவு அமைதியாயிட்டா!"

வேண்டுமென்றே தங்கையைச் சீண்டுவான்.

"ஆமாம்... நான் அடங்கமாட்டேன். கல்யாணம் பண்ணிக்கிட்டு வேற வீட்டுக்குப் போனாலும் இப்படித்தான் இருப்பேன். ஏன்... பொண்ணுங்கன்னா பேசவேகூடாதா? ஆம்பிளைங்க நீங்க சொல்றதைக் கேட்டுக்கிட்டு 'சரி... சரி'ன்னு தலையாட்டிக்கிட்டே இருக்கணுமா?" விந்தியா படபடவெனப் பொரிவாள்.

"பாவம்டி உனக்கு வரப்போற புருஷன்! இப்பவே அவனுக்காக நான் வருத்தப்படுறேன்... எவன் உன்கிட்டே மாட்டிட்டு அவஸ்தைப் படப்போறானோ?" போலிப் பெருமூச்சுடன் கூறுவான், நரேன்.

இந்தச் சண்டையை குறுகுறுப்புடன் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கும் நித்திக்கு, தனக்கு இதுபோல் ஒரு அண்ணன் இல்லையே என்று ஏக்கமாக இருக்கும்.

ஆனால், தன் மனதில் நரேனுக்கு அண்ணன் ஸ்தானத்தைத் தரவும் முடியாமல், மனம் தடுமாறும்.

நரேனின் ஒவ்வொரு அசைவுகளும் அவளுக்குள் கனவுகளை விதைக்க தொடங்கி இருக்க, அதை வெளியில் காட்டிக் கொள்ளவும் முடியாமல் அவள் தவித்த காலம், அது!

அப்போதுதான், அவள் பத்தாவது வகுப்பில் தொண்ணூறு சதவீதம் மதிப்பெண் வாங்கித் தேறினாள்.

அவர்களுக்கெல்லாம் இனிப்பு வாங்கிக் கொடுத்து, மகிழ்ச்சியை பரிமாறிக்கொண்டாள். அவளுடைய கையைப்பற்றி நரேன் குலுக்கியபோது அவன் எப்படி உணர்ந்தானோ? அவளுக்குள் மெலிதாய் ஒரு வீணை மீட்டப்பட்டதும், புத்தகம் மூடிய மயிலிறகாய் மனம் அவன் காதலை மறைத்து வைத்ததும் உண்மை.

அவள் 'பிளஸ்-1' படிக்கையில் ஒரு நாள் வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் இயல்பாகத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு, வீட்டில் கொண்டுவந்துவிட்டான்.

அவன் அருகாமை மனதிற்குள் சுகமாய் சாமரம் வீசுவதுபோல் உணர்ந்தாள்.

விந்தியாவிடம்கூட அதை வெளிப்படுத்த முடியாமல் தவித்தபோது, அவன் 'எம்.எஸ்.' படித்துக்கொண்டிருந்தான்.

நேச உணர்வுகள் தொடர்கதையாக, தன் மனப் பேழைக்குள் அவனைப் 'பொக்கிஷமாய்' பாதுகாத்தது அவள் மனது.

அவள் 'பிளஸ்-2' படிக்கும்போது, ஒருமுறை, அவன், பைக்கிலிருந்து விழுந்ததில் பலத்த காயம் ஏற்பட்டது. ஒரு வாரம் அவன் ஓய்விலிருந்தபோது, அவனுக்குப் பிடித்த சமையலைச் செய்யச் சொல்லி, அம்மாவிடம் கேட்டு எடுத்துச் சென்று தருவாள், அவள்.

ஆனால், அவனை நிமிர்ந்து பார்க்க முடியாதபடி ஒருவிதக் கூச்சம் ஆட்படுத்திவிட, உடனே ரேவதியிடம் ஓடிச் சென்றுவிடுவாள்.

அதன் எதிரொலி அவனிடம் இருந்ததா என்று அறிய அவள் முயன்றதும் இல்லை.

அவனுடைய முகத்தை நேருக்கு நேர் பார்க்கிற துணிச்சலும் அவளுக்கு இருந்ததில்லை.

அவனுடைய சட்டைக்காலரை, வெற்றுச்சுவரை அருகில் இருக்கிற ஏதாவது ஒரு பொருளைப் பார்த்துக்கொண்டே இமைகளைக் குடையாய் பிடித்தபடி அவனிடம் பேசுவதும் வழக்கமாயிற்று.

நாட்கள் விரைந்து செல்ல, அவள் 'பிளஸ்-2' முடித்து தொண்ணூற்றியொரு சத மதிப்பெண்கள் பெற்றபோது, முதலில் வாழ்த்தியதும் அவன்தான்!

"நித்தி! மேலே என்ன படிக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கே? எல்லாப் பொண்ணுங்க மாதிரி கல்யாணம் பண்ணிக்கப் போறியா? இல்லை 'பி.இ.' படிச்சிட்டு, வேலைக்குப் போகணும்னு ஆசையிருக்கா?"

மென்மையான குரலில் கேட்டான்.



"எனக்கு 'பி.இ. கம்ப்யூட்டர் சயின்ஸ்' படிக்கணும்னு ஆசை. அப்பாகிட்ட சொல்லணும்" மெதுவாகக் கூறினாள், அவள்.

"அதுதான் சரி... நம்ம வாழ்க்கையை, எதிர்காலத்தைப்பத்தி எல்லாம், நாமதான் முடிவெடுக்கணும்... வாழ்த்துகள்!" என்று கூறி, அவள் கன்னத்தை அவன் மெதுவாகத் தட்ட, அந்தத் தொடுதலை இன்று நினைத்தாலும் அவளுக்குள் சிலிர்ப்பாய் பரவும்.

"நித்தி... நீ இறங்கவேண்டிய இடம் வந்தாச்சு..."

தாரா உலுக்கியபோது, நினைவுச் சுழல்களிலிருந்து உணர்வு விடுபட்டு, மெல்ல மேலெழும்பி வந்தது.

நரேனுடைய ஞாபகங்களை, இன்றும் தன் இதயக்கூட்டிற்குள் பொக்கிஷமாய் சேமித்து வைத்திருப்பது புரிந்தது.

## 2

வீட்டிற்குச் சென்று வெகு நேரமாகியும், நரேனின் நினைவுகள் அவளுக்குள் ஆழமாய் படிந்திருந்தன.

சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுத் தோட்டத்திற்குச் சென்றபோது, பழைய நினைவுகள் மீண்டும் மனதில் அணிவகுத்தன.

அவள் பொறியியல் கல்லூரியில் சேர முடிவு செய்திருந்த போதுதான், அவளுடைய அப்பாவிற்கு திருச்சிக்கு வேலை மாற்றலாகியது.

நரேனின் குடும்பத்தைப் பிரிய மனமின்றி அவர்கள் பிரிந்தபோது, நித்திதான் மிகவும் தவித்துப்போனாள்.

பிறகும் கடிதம் மூலமாகவும், வாழ்த்து அட்டைகள் மூலமாகவும் இரு குடும்பமும் உறவைப் புதுப்பித்துக்கொண்டன.

ஆனால், நரேனின் தந்தை சங்கரனுக்கு வேறு ஊருக்கு மாற்றலாகியதில் பிரிந்துபோனது, அவர்களின் நட்பு!

ஆனால், நித்தியால் அவனை இன்றுவரை மறக்க முடியவில்லை.

இதுவரைத் தன் காதலை வேறு யாரிடமும் பகிர்ந்துகொண்டதுமில்லை.



தோட்டத்து மலர்களும், மொட்டை மாடி நிலவும், அவளுடைய ஆழ்மனமும் மட்டுமே அறிந்த உண்மை அது!

தியாகராஜனுக்கு திடீரென்று திருச்சிக்கு மாற்றல் வர, பிரிவுத் துயருடன், கோயமுத்தூரைவிட்டுக் கிளம்பிய கடைசி நாள். அவனிடம் அவள் விடைபெற்றாள்.

அப்போது, "நித்தி! நல்லாப் படிக்கணும்- எங்களையெல்லாம் மறக்கமாட்டே இல்லை?"

அவன் கேட்ட அந்தக் கடைசிக் கேள்வியும், அதற்குக் கண்ணீரை இதயத்துக்குள் மறைத்துத் தான் தலையசைத்ததும் நேற்று நடந்தது போல்!

"நித்தி!"

அப்பாவின் குரல் கேட்டுத் திரும்பியபோது, "என்னடா... இங்கே உக்காந்துட்டு என்ன பண்ணுறே?" என்றபடி வந்தார் தியாகராஜன்.

"ஒண்ணுமில்லைப்பா... சும்மாதான் உக்காந்திருக்கேன்" என்றபடி அவருடன் உள்ளே சென்றவளை, விடாமல் பின்தொடர்ந்தன நரேனின் நினைவுகள்!

அங்கு தாராவின் வீட்டில், அவள் தன் தாயிடம் மெதுவாகத் தனது காதலைப் பற்றிச் சொல்லத் தொடங்கியிருந்தாள்.

"அம்மா! நான் உங்ககிட்டே ஒரு விஷயம் தனியாப் பேசணும். நீங்க அதை எப்படி எடுத்துப்பீங்கன்னு தெரியலை! நான்... என்கூடப் படிக்கிற வசந்தை விரும்புறேன்! அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுறேன். நீங்கதான் அப்பாகிட்டே பேசி எப்படியாவது..." முடிக்கும்முன்பே ஆவேசப்பட்டார், பார்வதி.

"அடிப் பாவி! இனிமே இப்படி காதல் அது இதுன்னு ஏதாவது உளறிட்டிருந்தேன்னா அவ்வளவுதான்! உங்கப்பா முடிவு பண்ணினா பண்ணினதுதான்! அவரோட அக்காவைப் பார்த்த சந்தோஷத்தில இருக்காரு. இப்ப நீ முடியாதுன்னா ரெண்டு குடும்பமும் திரும்பவும் பிரிஞ்சிடும்.

அப்புறம், பொண்ணை சரியா வளர்க்கலேன்னு எனக்குத்தான் திட்டு கிடைக்கும். வீட்டிலே பிரளயம்தான். என்னால் அவஸ்தைப்பட முடியாது. நீயாச்சி... உங்க அப்பாவாச்சி!



ஆனா, அவர்கிட்டே போய் பேசினேன்னா, உன்னை அடிச்சே கொன்னுடுவாரு- தெரிஞ்சிக்க."

அவளை மேலே பேசவிடாமல் வார்த்தைகளால் கட்டிப்போட்டுவிட்டுச் சென்றார், அவர்.

மனதிற்குள் பெரும் சோகம் வந்து முகாமிட, பிரச்சினையிலிருந்து எப்படி மீள்வது என்று யோசிக்கத் தொடங்கினாள், தாரா.

வெகு நேர யோசனைக்குப் பிறகு, அவர்களுடைய போக்கில் போய்த்தான் இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று உறுதிபூண்டது, மனது!

பார்வதியும் அதே சிந்தனையில் இருந்தார்.

திடீரென்று இந்தப் பெண் இப்படியொரு குண்டைத் தூக்கிப்போடுறாளே- தன்னுடைய நாத்தனார் பையன் என்பதால் நன்றாகத் தெரிந்தவர்கள் என்பது ஒருபக்கமிருந்தாலும், அது நல்ல பணக்கார இடம் என்பதும், கணவரின் கோப குணமும் அவரை வாய் மூடி மவுனியாக்கின.

மறுநாள் கல்லூரிக்குச் செல்லும்போது, தன் அம்மாவிடம் பேசியதைப் பற்றி நித்தியிடம் கூறினாள்.

"நாளைக்கு வசந்த் வந்தவுடனே இதைப்பற்றி பேசி முடிவெடுத்திடுறேன்" என்றாள், ஒரு முடிவுடன்.

"பேசாம உன் அத்தை பையன்கிட்டயே பேசிப் பார்த்துடேன் தாரா! அவரும் படிச்சவரு- சின்ன வயசுங்கிறதாலே நிச்சயமா உன்னைப் புரிஞ்சிப்பாரு."

அவள் யோசனை கூறினாள்.

"இல்லைடி! எதுவா இருந்தாலும் நாளை வசந்த் வந்தப்புறம் பார்த்துக்கலாம்" என்றவள், மறுநாளே வசந்திடம் பேசிவிட்டாள்.

அவனும் தான் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வதாகக் கூற, சிறிது சமாதானமானது அவளது மனது.

தாராவின் வீட்டில் கல்யாண வேலைகள் தொடங்கியிருந்தன.

பத்திரிகை அடிக்கக்கொடுத்துவிட்டதையும், சேலைஎடுத்ததையும் பற்றி அவள் கூறும்போதுதான் நித்தி மிகவும் வருத்தமடைந்தாள்.

"தாரா... இப்பவும் பேசாம இருந்தா, அப்புறம் பின்னாடி

ரொம்பக் கஷ்டம்... உங்கப்பாகிட்ட உண்மையைச் சொல்லிவிடேன்" தவிப்புடன் கூறினாள்.

"நித்தி! கவலைப்படாதே. எனக்குத் தெரியும் என் வாழ்க்கையை எப்படி அமைச்சிக்கணும்னு! இதுதான் எனக்கு விதின்னா, அப்படியே நடக்கட்டும்" எளிதாகக் கூறியவளை நம்பமுடியாமல் பார்த்தாள், அவள்.

அப்போதுதான் 'புராஜக்ட்' விஷயமாக நித்தி சென்னைக்குச் செல்ல நேர்ந்தது.

இருபது நாட்களில் தாராவின் திருமணம்!

அதற்கு ஒரு வாரம் முன்பே ஊருக்குத் திரும்புவதற்கு 'டிக்கெட்' பதிவு செய்திருந்தாள், அவள்.

தாராவால், மழையின் காரணமாகப் பத்திரிகை கொண்டுவந்து வைக்கமுடியாமல் போனது.

தபாலில் போட்டிருப்பதாகக் கூறிவிட்டு, போனில் அழைத்ததாகவும் காஞ்சனா அவளிடம் கூறியிருந்தார்.

நித்திக்குள் பெரும் குழப்பம்! தாரா உண்மையிலேயே தன் மனதை மாற்றிக்கொண்டுவிட்டாளா என்ற கேள்வி நெருடலாய்!

ஆனால், வசந்தை சந்திப்பதையும் அவள் நிறுத்தவில்லை. தன்னுடைய கல்யாண ஏற்பாடுகளுக்குத் தடையும் விதிக்கவில்லை!

அவள் ஒருவேளை இரட்டை வேடம் போடுகிறாளோ என்ற சந்தேகமும் நித்திக்கு வந்தது.

இதற்கு தன் அப்பாவிடமும், அந்த அத்தைப் பையனிடமும் உண்மையைக் கூறி இருக்கலாமென்று தோன்றியது.

ஆனால், பழகியவரை அவள் நினைத்ததைச் சாதிக்கும் ரகம்! அதனால், அவள் மனதிலிருப்பதை நித்தியால் அறிய முடியவில்லை.

பிறகு, தோழியைப் பற்றிக் கவலைப்பட நேரமின்றி 'புராஜக்ட்'டில் மனதைச் செலுத்தினாலும், அதற்கும் மழை வடிவில் தடை வந்தது.

மழை இல்லை என்று ஊரே தவித்திருக்க, இரண்டு மாதங்கள் தொடர்ந்து பெய்த மழையில் தமிழ்நாடே தண்ணீரில் மிதக்கத் தொடங்கியது.



ஆறுகள் திசை மாறி, குடியிருப்புகளுக்குள் பயணித்து பல கிராமங்களை மூழ்கடித்திருந்தன.

ஏரிகள் உடைப்பெடுத்து, பல சாலைகள்– பாலங்களைத் தம்முடன் எடுத்துச்சென்றிருந்தன.

கிராமங்கள், பயிர்ச்சேதத்துடன் தீவுக் கூட்டங்களாகி இருந்தன.

இரு பேருந்துகள், காலனின் அழைப்புக்குக் கட்டுப்பட்டு– பல மனித உயிர்களைப் பலியாக்க– வரலாறு காணாத பெரும் சோகத்தைச் சுமந்து நின்றிருந்தனர், மக்கள்.

எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாகிவிட, நித்தியின் 'புராஜக்ட்' முடியவே தாமதமானது.

சென்னையில் நித்தியும், அவள் தோழிகளும் தங்கியிருந்த இடத்திலிருந்து வெளியில் வரவே முடியவில்லை.

எங்கு நோக்கினும் வெள்ளம்– அலைகளில்லாக் கடலாய்த் தெரிய, பெரும் சோகம் காட்சியளித்தன.

இன்னும் ஒரு வாரத்தில் தாராவிற்குத் திருமணம்!

அதற்குள் வந்த வேலை முடியுமா என்ற சந்தேகத்துடன், வாங்கியிருந்த பயணச்சீட்டை ரத்து செய்தாள், நித்திலா!

அங்கு திருச்சியில் தாரா எப்போதும் போல் இயல்பாகவே இருந்தாள்.

தன் மனதை வெளிக்காட்டிக்கொள்ளாததால், பார்வதியும் அவளை நம்பிவிட்டார்.

தன் பேச்சைக் கேட்டு, மகள் மனம் மாறிவிட்டாளே என்ற பெருமை, அவருக்கு!

கல்யாண வேலைகள் வேகமாக நடக்கத் தொடங்கியதில், பாட்டி தெம்புடன் எழுந்து அமர்ந்துவிட்டார்.

உறவினர் வருகையால் வீடே களைகட்டியிருக்க, கல்யாணத்திற்கு முதல்நாள் காலையில் மாப்பிள்ளை வீட்டினர் வந்துசேர்ந்தனர்.

அவர்களுக்கென்று பதிவு செய்யப்பட்ட அறைகளில் அனைவரும் தங்கிக்கொள்ள, அன்றுதான் தாரா மிகவும் தவிப்புடன் இருந்தாள்.

தன் மனதைப் பகிர்ந்துகொள்ள நித்தியும் இல்லையே என்ற சோகத்துடன் அவளுடைய வீட்டிற்கு 'போன்' செய்தாள்.



காஞ்சனாவிடம், "ஆன்ட்டி! நித்தி வந்துட்டாளா?" என ஆவலுடன் கேட்டாள்.

"இல்லைம்மா. இரவு ரெயில் ரத்தாயிடுச்சி. அதனால விடியற்காலையில எல்லாரும் பஸ்ஸில் கிளம்பிட்டதா 'போன்' பண்ணினா. அதான் கவலையா உக்காந்துருக்கேன்" என்றார்.

"கவலைப்படாதீங்க ஆன்ட்டி! சாயந்தரத்துக்குள்ளே கட்டாயம் வந்துடுவா! வந்தவுடனே பட்டுச்சேலை– நகை எல்லாம் எடுத்துக்கிட்டு உடனே இங்கே வரச்சொல்லுங்க. இப்போ நான் அழகு நிலையத்துக்கு போகணும். அவளும் அங்கேயே தயாராயிடலாம்" என்றபடி தொலைபேசியை வைத்தவளின் மனதில்– எப்படியாவது அவள் வந்துவிட வேண்டுமே என்ற பிரார்த்தனை!

நித்தியும், அவள் தோழிகளும் சென்னையில் இருந்து விடியற்காலையிலேயே கிளம்பிவிட்டாலும், உளுந்தூர்பேட்டை அருகே பாதை உடைப்பெடுத்துவிட்டதால், சுற்றிக்கொண்டு திருச்சிக்கு போய் சேர்வதற்கே மணி மூன்றாகிவிட்டது.

பேருந்து நிலையத்தில் இறங்கியதுமே தோழி ஒருத்தியின் 'செல்'லை வாங்கி, தாராவிற்கு 'போன்' செய்தாள்.

"நித்தி... வந்துட்டியா? இப்பதான் எனக்கு மூச்சே வந்தது. நீ உடனே உன்னோட பட்டுச்சேலை– நகை எல்லாம் எடுத்துக்கிட்டு கிளம்பி வர்றியா? இல்லை... நானே கார் அனுப்புறேன். உடனே வா. ஆறு மணிக்கு வரவேற்பு! நான் அழகு நிலையத்துக்குப் போகணும். உனக்காகத்தான் காத்திட்டிருக்கேன்" படபடவென்று பேசினாள்.

"சரிடி– ஏன் இவ்வளவு அவசரம் கல்யாணப் பொண்ணுக்கு? மண்டபத்துக்குப் போய் உடனே மாப்பிள்ளையைப் பார்க்கணுமா?" கிண்டல் செய்தவள், உடனே வீட்டிற்குச் சென்று தயாராவதாகக் கூறினாள்.

தெருவெங்கும் தேங்கிக்கிடந்த தண்ணீர்– அலைகளாய் பரவித் தெளிக்க, ஆட்டோவே படகு போல் நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் நிலை!

அவள் வீட்டு வாசலில் சென்று இறங்கியபோது, முன்பே அங்கு தாரா அனுப்பிய கார் காத்து நின்றது.

வேகமாக உள்ளே சென்று, அம்மாவிடம் நகை– பட்டுச்



சேலைகளை எடுத்து வைக்கும்படிக் கூறியவள், அவசரமாக ஒரு குளியல் போட்டுவிட்டுக் கிளம்பினாள்.

"அம்மா! ஆறு மணிக்கெல்லாம் நீங்களும், அப்பாவும் மண்டபத்துக்கு வந்துடுங்க."

வேகமாகக் கூறியபடி அவள் கிளம்பிச் செல்ல, அந்த அவசரத்திலும் மகளை ரசித்தார், காஞ்சனா.

ஐந்தரை அடி உயரத்தில், அப்போதுதான் பூத்த மலரைப் போல் முகம் அழகைத் தத்தெடுத்திருக்க, இடைவரை நீண்ட கூந்தல் மயில் தோகையாய் சாமரம் வீச, துறுதுறுக்கும் விழிகளுடன் ரவிவர்மாவின் ஓவியம் போலிருக்கும் தன் மகளை எண்ணி மனதில் பெருமிதம் வந்தது, அவருக்கு!

அவளுக்கும் நல்ல வரன் அமைந்து, சீக்கிரமே திருமணம் நடக்கவேண்டுமென்ற பிரார்த்தனை, அவரது நெஞ்சமெங்கும் நிறைந்தது.

## 3

தாராவின் வீட்டிற்குச் சென்ற நித்தியை உற்சாகத்துடன் வரவேற்றார், பார்வதி.

"நல்லவேளைம்மா... நீ வந்துட்டே! காலையிலிருந்து நீ வரலையேன்னு உன் தோழிக்கு ஒரே கோபம்! இப்போ உன்னைப் பார்த்ததும்தான் முகத்துல சிரிப்பே வருது. சரி... காப்பி, டிபன் சாப்பிட்டு நீங்க கிளம்புங்க" என்றபடி உள்ளே சென்றார்.

அதற்குள் தாராவின் மணமகள் அலங்காரத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்து வைத்தவர்கள், டிபன்– காப்பி சாப்பிட்டுவிட்டு உடனே கிளம்பினர்.

உடன் வருவதாகக் கூறிய தன் சித்தியைத் தடுத்தாள், அவள்.

"நான் நித்திகூடப் போறேன் சித்தி! வேற யாரும் வேணாம். அவ பாத்துப்பா! சரியா அஞ்சரை மணிக்கு காரை அனுப்புங்க. வந்திடுறோம்" என்று கூறிவிட்டு அவசரமாகக் கிளம்பினாள்.

வழியெல்லாம் கிண்டல் செய்தபடி வந்த நித்தி, பதில் சொல்லாமல் தலையைக் கவிழ்த்தபடி வந்த தாராவை மேலும்

கேலி செய்தாள்.

அழகு நிலையத்திற்குச் சென்று முதலில் அலங்காரம் செய்துகொண்ட தாரா, தன் தோழிக்கும் கூந்தல் அலங்காரமும், முகத்திற்கு ஒப்பனையும் செய்துவிடும்படிக் கூற– அவள் மறுத்தாள்.

"எனக்கு அதெல்லாம் வேண்டாம். நானே வீட்டில் போய் செஞ்சிப்பேன்."

"ஏய் நித்தி! தோழிப் பெண் அழகா இருக்க வேண்டாமா? நான் அந்த அறையில பண்ணிக்கிறேன். நீ இங்கே செஞ்சிக்க" என்றபடி உள்ளே சென்றாள், அவள்.

உடனே, நித்தியின் தலையைப் பின்னலிட்டு சிறு தங்க மணிகளை அலங்காரம் செய்தபிறகு, அந்தப் பெண்கள் முகத்திற்கும் ஒப்பனை செய்தனர்.

எளிமையாகச் செய்யும்படி அவள் கூறவும், கண்களை உறுத்தாவண்ணம் அழகாக அலங்கரித்து முடித்தனர்.

சேலையும் நகைகளும் அணிந்து உள் அறைக்குள் சென்றபோது, அங்கு தாராவைக் காணவில்லை!

பதற்றத்துடன் திரும்பியவள் "தாரா எங்கே?" என்று அந்த அழகு நிலையப் பெண்ணிடம் கேட்டபோது, அவள் கூறிய பதில் இடியெனத் தாக்கியது.

"உங்களுக்கு அலங்காரம் பண்ண ஆரம்பிக்கும்போதே ஒரு கார் வந்தது. அதில் கிளம்பிப் போயிட்டாங்களே! உங்களை அவங்க வீட்டுக்கு வந்திடச் சொன்னாங்க. பணம்கூடக் கொடுத்துட்டாங்க."

இயல்பாக அவள் கூறும்போதுதான், பெரிய சதியில் தான் சிக்கியிருப்பது புரிந்தது.

உடனே, மூளைக்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது.

அவசரமாக வெளியே வந்தபோது, அவர்களை அழைத்துவந்த கார் வந்தது.

அந்த நிமிடமே தாராவின் திட்டம் புரிந்துவிட வேகமாக உள்ளே சென்றவள்– அவளுடைய வீட்டிற்கு 'போன்' செய்தாள்.

"தாரா அங்கே வந்தாளா அங்கிள்?"

பதற்றத்துடன் அவள் கேட்டபோது, "இல்லியேம்மா... உன்னோடதானே அழகு நிலையத்துக்கு போனாளாம்... கார்



அனுப்பிட்டோமே! கிளம்பி வீட்டுக்கு வந்துடுங்க" என்றார், அவர்.

நித்திக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

"அங்கிள்! இங்கே தாரா என்னோடு இல்லை... எனக்கு அலங்காரம் பண்ண சொல்லிட்டு உள்ளே அவளுக்குப் பண்ணிட்டிருந்தா! எனக்கு முடிஞ்சப்புறம் கேட்டா, அவ அரை மணி நேரத்துக்கு முன்னாடியே காரில் கிளம்பிப் போயிட்டதா சொல்றாங்க! எனக்கு என்னவோ பயமா இருக்கு அங்கிள்! நீங்க உடனே இங்கே கிளம்பி வாங்களேன்."

தவிப்புடன் நித்தி கூறவே– "பார்வதி..." என்ற உறுமலுடன் போனை வைத்தார், ஈஸ்வரன்.

சிறிது நேரத்தில் ஆட்டோவில் ஈஸ்வரனும், பார்வதியும் அங்கு வந்துவிட– அந்த அழகு நிலையமே களேபரமானது.

வசந்த்தை தாரா விரும்பிய விஷயத்தை அப்போதுதான் அவர் தன் கணவரிடம் கூற, அங்கேயே அறைந்து தள்ளினார், ஈஸ்வரன்.

பிறகு நித்திலாவிடம் திரும்பியவர், "ஏம்மா! இதுக்கு நீயும் உடைந்தையா? என் மானத்தை வாங்கணும்னே எல்லாரும் சேர்ந்து திட்டம் போட்டீங்களா? இனிமே என் அக்கா, மாமா முகத்துல நான் எப்படி முழிப்பேன்?" என்றபடி முகத்தில் அறைந்துகொண்டு அழத் தொடங்கினார்.

அவரையே பார்த்தபடி மிரண்டு நின்றிருந்தவள், சிறிது நேரம் கழித்து அவரைச் சமாதானப்படுத்தினாள்.

"அங்கிள்! சத்தியமா எனக்கு இதுமாதிரி நடக்கும்னு தெரியாது. கல்யாணத்துல கலந்துக்கணும்னு ஆசையா ஊரிலிருந்து வந்தேன். ஆனா, அவ இப்படி மோசமா நடந்துப்பாள்னு நான் எதிர்பார்க்கவேயில்லை."

அதிர்ச்சியுடன் அவள் கூறும்போதே, அழகு நிலையப் பெண் அவளுக்குப் பரிந்து வந்தாள்.

"ஆமாம் சார்! இவங்க சொல்றது உண்மைதான்! இவங்களுக்குத் தெரியாமதான் உங்க பொண்ணு கிளம்பினாங்க. இவங்க தயாரானதும், சொல்லச் சொன்னாங்க" என்றவுடன், கோபமாக எழுந்தார், ஈஸ்வரன்.

"சரிம்மா... நாம கிளம்பலாம். அந்தப் பையன் வீடு எங்கே

இருக்குன்னு மட்டும் சொல்லு."

அவர் கேட்டுக்கொண்டிருக்கும்போதே அவருடைய 'செல்' ஒலித்தது.

எடுத்துப் பேசியவரின் முகம் இறுகிப்போய்விட, "ஓடுகாலியே! அங்கேயே இருடி... நான் வரேன்" என்று கூறி 'செல்'லை அணைத்துவிட்டு- மனைவியிடம் கோபமாகத் திரும்பினார்.

"நீ பெத்து வச்சிருக்கியே உன் செல்லப் பொண்ணு... அவ எவனையோ கல்யாணம் பண்ணிக்கிட்டு மாலையும், கழுத்துமா நம்ம வீட்டுக்கு வந்து நிக்கிறாளாம்- இங்கேயே செத்துடலாமான்னு இருக்கு... சேச்சே!" என்றபடி கிளம்பினார்.

சேலைத்தலைப்பால் வாயை இறுகமூடியபடி அழுதுகொண்டே சென்ற பார்வதியைப் பின்தொடர்ந்தாள், நித்தி.

ஆனால், வழி முழுவதும் மனைவியைத் திட்டிக்கொண்டே வந்த ஈஸ்வரனைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்க முடியவில்லை.

"அங்கிள்! ஆன்ட்டியைத் திட்டாதீங்க... அவங்க என்ன பண்ணுவாங்க? பாவம்! தாராவோட திட்டம் புரியாம நானே ஏமாந்துட்டேன்... அவ வசந்தை மறந்திட்டேன்னு சொல்லி இருப்பா... ஆன்ட்டியும் நம்பி இருப்பாங்க" -மெதுவாகக் கூறினாள்.

"அதுக்காக சொல்லலைம்மா! என்கிட்ட இதைப்பத்தி ஒரு வார்த்தை இவ சொல்லியிருந்தா நான் அவளை கண்காணிச்சிட்டே இருந்திருப்பேனே? இப்ப நான் எல்லார் முகத்துலேயும் எப்படி முழிப்பேன்?"

"என்னை மன்னிச்சிடுங்க! நான் அவ சொன்னதை நம்பித்தான் உங்ககிட்ட உண்மையைச் சொல்லலை. 'அந்தப் பையனை மறந்துட்டேன். நீங்க சொல்றவரையே கல்யாணம் பண்ணிக்கிறேன்'னு சொன்னா! கல்யாணப் பத்திரிகை கொடுக்கறதிலேருந்து, சேலை எடுக்கிறதுவரை எல்லா விஷயத்திலேயும் ரொம்ப சந்தோஷமா கலந்துக்கிட்டா... நான் அவ சொன்னப் பொய்யை நம்பி மோசம் போயிட்டேங்க."

அவரது கையைப் பிடித்துத் தழுதழுத்தபடி கண்ணீர்விட்டார், பார்வதி.

நித்தியின் மனம் கனத்துப்போயிருந்தது.

இவ்வளவு சுயநலம் மிக்கவளாக தாரா இருப்பாளென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

ஒரு பெண்ணின் சுயநலத்தால் இரு குடும்பங்களும் பரிதவிக்கப்போவதை நினைத்தபோது, அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

வீட்டிற்குச் சென்றதும் காரிலிருந்து ஆவேசமாக இறங்கிய ஈஸ்வரன், வாசலில் மாலையும்– கழுத்துமாக நின்றிருந்த தாராவைக் கோபமாக அறைந்து தள்ளினார்.

"எனக்கு ஒரு பொண்ணு இருந்தா... ஆனா, இன்னிக்கு அவ செத்துட்டா. வெளியே போடி!" என்றபடி உள்ளே சென்றவர், கதவை அறைந்து சாத்தினார்.

பார்வதியின் அழுகையும், தெருவினரின் ஆர்வப் பார்வைகளும் அந்த இடத்தை ஆக்கிரமித்திருந்தன.

"நித்தி!" என்றபடி ஓடிவந்து அணைத்துக்கொண்ட தோழியின் மேல், ஏனோ கோபம் மட்டுமே வந்தது.

நித்திலா அவளை விலக்கி நிறுத்தினாள்.

"இப்படியொரு காரியத்தை பண்ணிட்டியேடி? இதுக்குப் பதிலா இந்த தைரியத்தை முன்னாடியே காட்டி கல்யாணத்தை நிறுத்தி இருக்கலாமே? இப்ப உன்னால ரெண்டு குடும்பமும் தலைகுனிஞ்சி நிக்கப்போவுது! இப்படி எல்லா ஏற்பாடும் செஞ்சப்புறம், அவங்க சொந்தக்காரங்க– நண்பர்கள் முகத்துல எப்படி முழிப்பாங்க? இதைச் சத்தியமா நான் உன்கிட்டே எதிர்பார்க்கலை."

கசப்புடன் கூறிவிட்டு, பார்வதியை அணைத்தபடி அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

## 4

திருமண மண்டபம் மிகுந்த ஆரவாரத்துடன் இருந்தது.

அங்கு தாராவின் திடீர் கல்யாணத்தைப் பற்றி அறியாததால், நிச்சயதார்த்தத்திற்கான வேலைகள் வேகமாக நடந்துகொண்டிருந்தன.



மாப்பிள்ளை வீட்டார் மதியமே மண்டபத்துக்கு வந்து விட்டதால், உறவுப் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டிருக்க, 'போன்' வந்திருப்பதாக ஒரு பெண் தகவல் சொன்னாள்.

வேகமாகச் சென்று எடுத்த மணமகனின் தந்தை சங்கரனின் தலையில் இடியாய் அந்த செய்தி!

'இதை எப்படி எல்லோரிடமும் சொல்வது?' என்ற குழப்பத்துடனும், கோபத்துடனும் அவர் அலுவலக அறையைவிட்டு வெளியே வந்தபோதுதான், எதிரே மனைவி ரேவதி மகிழ்ச்சியுடன் வந்துகொண்டிருந்தார்.

"என்னங்க! இங்கே பாருங்க... யாரு வந்திருக்காங்கன்னு! தாராவோட தோழியாம் நம்ம நித்தி... காஞ்சனாவும், தியாகு அண்ணாவும் வந்திருக்கிறாங்க பாருங்க... எத்தனைக் காலம் கழிச்சுப் பார்க்கிறோம்!" உற்சாகத்துடன் கூறினார்.

தன் மனதை வெளிப்படுத்தவும் முடியாமல், ஒரே குடும்பமாய் பழகிய நண்பர்களை வெகு நாட்கள் கழித்து சந்தித்த மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்கவும் முடியாமல் திணறியவர், தியாகுவை மெதுவாக அணைத்துக்கொண்டார்.

"கோயமுத்தூரில இருந்து நாங்க போனதும் முதல்லே உங்க கடிதமெல்லாம் வந்துட்டுதான் இருந்தது. ஆனா, அப்புறம் நாங்க உங்களுக்கு அனுப்பின வாழ்த்து அட்டைகள் எல்லாம் ஆளில்லாம திரும்பி வந்துடுச்சு! நீங்க வேற ஊருக்குப் போயிட்டதாலே உங்களை தொடர்புகொள்ளவே முடியலை. நான் உங்களையெல்லாம் நினைக்காத நாளே இல்லை" –காஞ்சனா ஆதங்கத்துடன் கூறினாள்.

"நானும்தான் காஞ்சனா! எவ்வளவு உயிராப் பழகினோம்– ஆனா, நரேன் கல்யாணத்துக்கு உங்களைக் கூப்பிட முடியலையேன்னு நானும் நினைச்சிட்டே இருந்தேன். ஆமாம், நித்தி எங்கே? அழைச்சிட்டு வரலையா? இப்ப பெரியவளா வளர்ந்திருப்பாளே... என்ன படிக்கிறா?"

ஆவலுடன் விசாரித்தபடி அவளைத் தங்களின் அறைக்கு அழைத்துச் சென்றார், ரேவதி.

தியாகுவை மெதுவாக விசாரித்த சங்கரன், தர்மசங்கடத்துடன்



மெல்லிய குரலில் தாராவின் திடீர் திருமணத்தைப் பற்றிக் கூ...

அவர் அதிர்ச்சியடைந்து சிலையாக உறைந்துவிட்டார்.

பிறகு, தன்னை இயல்பாக்கிக்கொண்டு, சங்கரனின் கையைப் பிடித்து மெதுவாக அழுத்தினார்.

"சங்கர்! உங்களுக்கு ஒரு அவமானம்னா அது எனக்கும்தான். இதை எப்படியாவது சரி செய்யணும். இப்ப நரேன் எங்கே? அவன்கிட்டே மெதுவா இதைப்பத்திப் பேசலாம், வாங்க. பெண்கள்கிட்டச் சொன்னா ரொம்பக் களேபரமாயிடும். அதான்!" என்றபடி மணமகனின் அறைக்கு அழைத்துச் சென்றார்.

அவரைக் கண்டதும் உடனே அடையாளம் தெரிந்து புன்னகைத்தான், நரேந்திரன்.

"அங்கிள்! ரொம்ப சந்தோஷமா இருக்கு... நாலு ஆண்டு கழிச்சி சந்திக்கிறோம்! எப்படி இருக்கீங்க? ஆன்ட்டி, நித்தி எல்லாரும் எப்படி இருக்காங்க?" ஆர்வத்துடன் கேட்டான்.

"எல்லாரும் நல்லா இருக்காங்க நரேன்! நாங்க..." என்று தயங்கியவர், சங்கரனிடம் விஷயத்தைக் கூறும்படிக் கண்களால் 'சைகை' செய்தார்.

அதற்குள் வெளியே ஒரே சத்தமாக இருக்க, மூவரும் வெளியில் வந்தபோது, அங்கே ஒரே கூச்சலும், குழப்பமுமாக இருந்தன.

ஈஸ்வரனும், பார்வதியும் நடுநாயகமாய் தலைகுனிந்து நின்றிருக்க, ரேவதி கோபாவேசத்துடன் கத்திக் கொண்டிருந்தார்.

"எங்களை சபையில வச்சி முகத்துல நல்லா கரியைப் பூசிட்டீங்க! முதல்லே சொத்தைத் தர்றேன்னு சொல்லிட்டு ஏமாத்துனீங்க... இப்ப பொண்ணைத் தர்றேன்னு சொல்லி நல்லா அவமானப்படுத்திட்டீங்க! இதை நான் மறக்கமாட்டேன். உங்களை மன்னிக்கவும் மாட்டேன்! என்னங்க... கிளம்புங்க! நான் தப்புப் பண்ணிட்டேன். ஓவியமா ஒரு பொண்ணைப் பெத்துட்டான்னு இவன்கிட்ட சம்பந்தம் பண்ண நினைச்சேன் பாருங்க, என்னைச் சொல்லணும்!"

அழுதுகொண்டே கூறினார், ரேவதி.

அருகில் நின்றிருந்த விந்தியாவும், தவிப்புடன் காஞ்சனாவின்



கைகளைப் பற்றியிருந்தாள்.

"அக்கா! என்னை மன்னிச்சிடுங்க... என் பொண்ணு இப்படி செய்வான்னு நான் கனவுலகூட நினைக்கலை... இவளுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு. என்கிட்டக்கூட சொல்லாம மறைச்சிட்டா."

ஈஸ்வரன், தன் கோபத்தையெல்லாம் மனைவி மேல் காட்டி, அவரை அடிக்கத் தொடங்கினார்.

"அங்கிள்! பிளீஸ்... ஆன்ட்டியை விடுங்க... அவங்க என்ன பண்ணுவாங்க பாவம்?" –தடுத்த நித்தி, பார்வதியைத் தனியே அழைத்துச்சென்றாள்.

எல்லாவற்றையும் மவுனமாகக் கவனித்துக்கொண்டிருந்த நரேனின் விழிகளில் ஒரு பெண் தன்னை நிராகரித்த அவமானமும், தான் ஒரு காட்சிப் பொருளாகிவிட்டோமே என்ற இயலாமையும், கோபமும் சேர, ரவுத்திரமாய் ஒரு சிவப்பு பரவியது.

ரேவதியைப் பார்த்ததுமே அடையாளம் தெரிந்துகொண்ட நித்திக்கு, பெரும் அதிர்ச்சி மனதைப் புயலாய் தாக்கியது.

தாராவிற்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை, தான் உயிராய் விரும்பிய நரேந்திரன்தான் என்ற உண்மை முகத்தில் பலமாய் அறைந்தது.

தனக்காக அழுவதா? இல்லை, நரேனுக்காக அழுவதா என்ற குழப்பமும், தவிப்பும் ஆட்படுத்த– செயலற்று நின்றிருந்தாள்.

மென்மையான ஒரு தொடுகை அவளை சுயநினைவிற்கு மீட்டுவர, எதிரில் விந்தியாதான் சிறு முறுவலுடன் நின்றிருந்தாள்.

"ஹாய் நித்தி! உன்னைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசையா இருந்தேன். அடிக்கடி உன்னைப் பத்தி நினைச்சிப்பேன். ஆனா, இப்படியொரு சந்தர்ப்பத்திலதான் அது நடக்கம்னு..."

மெல்லிய குரலில் பாதியைக் கூறிவிட்டு, அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டாள், விந்தியா.

"சரி! நடந்ததையே பேசறதை விட்டுவிட்டு, நடக்கப்போறதைப் பத்தி யோசிக்கலாமே?"

யாரோ ஒருவர் குரல் கொடுக்க, "என்ன பேசுறது? எங்க மானமே போனப்புறம் எங்கே போய் எதைப் பேசுறது?" உடைந்துபோய்க் கூறினார், ரேவதி.

அந்த நிமிடம் தியாகுவைத் தனியாக அழைத்துச் சென்றார், சங்கரன்.

"தியாகு! இந்த விஷயத்துல உன்னால்தான் எங்களுக்கு உதவி செய்ய முடியும். என் பையனுக்கு உன் பொண்ணு நித்தியைக் கல்யாணம் பண்ணித் தருவியா? ஆனா நித்தியையும், காஞ்சனாவையும் கேட்டுட்டு பதில் சொல்லு. உன் பதிலில்தான் எங்க கவுரவமே அடங்கியிருக்கு. அதை மட்டும் ஞாபகம் வச்சுக்க! என்னடா... திடீர்னு இப்படிக் கேக்கிறேனேன்னு தப்பா நினைக்காதே. அவளுக்கு முறை செஞ்ச மாமன் என்கிற பழைய உரிமையில கேக்கிறேன்."

அவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு நெகிழ்ச்சியுடன் கேட்டார்.

தியாகு, ஒரு கணம் உறைந்து நின்றுவிட்டார்.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, "சங்கர்! அப்படியே நாங்க ஒத்துக்கிட்டாலும், நரேன் இதுக்கு ஒத்துக்கணுமே? அவனோட விருப்பம்தானே இதில் முக்கியம்" என்றார், கவலையுடன்.

"அதை நான் பாத்துக்கிறேன்ப்பா. இப்பவே நரேன்கிட்டப் பேசுறேன். அவன் நிச்சயமா ஒத்துப்பான்" என்றபடி நரேனைத் தன்னுடன் அழைத்துச் சென்றார், அவர்.

பிறகு காஞ்சனாவையும், நித்தியையும் அருகிலிருந்த வராந்தாவிற்கு அழைத்துச் சென்றார், தியாகு.

தர்மசங்கடத்துடன் அவர்களிடம் சங்கரனின் விருப்பத்தைப் பற்றிக் கூற– நித்தியின் மனதிற்குள் ஆயிரம் மலர்கள் ஒரே நொடியில் மலர்ந்தன.

காதல் கொண்ட மனது, காற்றில் ஆடும் பட்டமாய் சடசடத்து தன்னைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று அவளிடம் ஒரு விதிர்ப்பு நிலை வந்தது.

காஞ்சனா குழப்பத்தில் தவித்தாள்.

"நித்தி! நீ சொல்லும்மா... வேற யாரையாவது நீ விரும்புறியா? ஏன்னா, இன்னொருதடவை ஏமாறதுக்கு சங்கர்கிட்ட சக்தியில்லை. இப்பவே ரொம்ப உடைஞ்சு போயிருக்கார். அப்படி ஏதாவது இருந்தால் சொல்லிடு."

தியாகு நேரிடையாகவே மகளிடம் கேட்டுவிட்டார்.

"நான் விரும்புவது நரேனைத்தான்!" என்ற வார்த்தைகளை கூற முடியாமல் உணர்ச்சிவசப்பட்டு அவள் தவித்துக் கொண்டிருந்தபோதுதான்– ரேவதியும், விந்தியாவும் அங்கு வந்தனர்.

"அண்ணா! இவர் எல்லாம் சொன்னாரு. நீங்க மட்டும் இப்போ இந்த உதவியைச் செஞ்சீங்கன்னா என் உயிர் உள்ளவரைக்கும் நான் உங்களை மறக்கமாட்டேன்" கண்ணீருடன் அவர் கெஞ்ச– நித்தியிடம் மென்குரலில் பேசத் தொடங்கினாள், விந்தியா.

"எனக்கு இதுல ஒண்ணும் ஆட்சேபனை இல்லை, ரேவதி! ஆனா, நித்திக்கு விருப்பம் இருந்தாத்தான் என்னால ஒத்துக்க முடியும். அவ படிப்பு வேறு இன்னும் முடியலை. அதையும் பாக்கணும். அதான் கேட்டுட்டிருக்கேன்" சங்கடத்துடன் கூறினார், தியாகு.

"அவ படிக்கட்டும் அண்ணா... அந்த தாராகூட படிச்சி முடிக்கட்டும்னுதான் சொன்னேன்... இந்த அம்மாதான் அவசரப்பட்டாங்க... இப்படியாயிடுச்சு!" என்றவர், காஞ்சனாவின் கைகளைப் பிடித்துக்கொண்டார்.

எல்லோரும் நித்தியின் முகத்தையே ஆவலுடன் பார்த்தனர்.

"உங்க இஷ்டம்ப்பா! ஆனா, நான் படிப்பை முடிக்க அனுமதிக்கணும்" அவள் மெதுவாகக் கூறியபோது, அனைவரின் முகமும் சோகங்களைக் களைந்து சட்டென்று மலர்ந்தன.

"நித்தி!"

ஆவலுடன் அவளை அணைத்துக்கொண்டாள், விந்தியா.

அவளது காதருகில் குனிந்து, "நீ ரொம்ப அழகா இருக்கே நித்தி! சாரி! இனிமே அண்ணின்னு சொல்லணும் இல்லை? முதன் முதல்லே ரொம்ப நாள் கழிச்சி உன்னைப் பாத்தவுடனே சொல்ல நினைச்சேன். ஆனா, சந்தர்ப்பம் சரியில்லை! இரு– நான் உடனே போய் அண்ணாவைப் பாத்துட்டு வரேன்" குதூகலத்துடன் ஓடினாள்.

நித்தியின் மனதிற்குள் பன்னீர்பூக்களின் சொரிதலாய் மகிழ்ச்சிச் சிதறல்கள்!



# 5

நரேன் கடும் கோபத்தில் இருந்தான்!

கல்யாணம் நின்றுவிட்டது என்ற அதிர்ச்சியைவிட, தன்னை ஒரு பெண் நிராகரித்துவிட்டாளே என்ற அவமானமும், சுய பச்சாதாபமும் அவனை வெகுவாக ஆட்படுத்தி இருந்தன.

காதல் என்ற வார்த்தையே கசந்துவிட, மிகவும் சங்கடமாகி இருந்தான்.

"என்னால முடியாதுப்பா! எனக்கு கல்யாணமே வேண்டாம்! போதும், நான் அவமானப்பட்டது! இப்ப கல்யாணம் வேண்டாம்னு நான் எத்தனைத் தடவை சொன்னேன்... கேட்டீங்களா? பாட்டிக்காக அப்படி இப்படின்னு சொல்லி, இப்ப என் வாழ்க்கையையே கேலிக்கூத்தாக்கிட்டீங்க. இப்ப உங்களுக்கு சந்தோஷம்தானே?" கோபத்துடன் இரைந்தான்.

"நரேன் பிளீஸ்! நித்தியும், காஞ்சனாவும், ஒத்துக்கிட்டாங்க! நீ மட்டும் சரின்னு சொல்லு... உடனே தட்டுமாத்தி, நிச்சயம் செஞ்சுடலாம்...! காலையில குறிச்ச நேரத்தில கல்யாணத்தை 'ஜாம் ஜாம்'ன்னு நடத்திடலாம். இனிமே என் முகத்திலயே முழிக்காதேன்னு உன் மாமாவைத் திருப்பி அனுப்பிட்டேன். எங்களுக்கு ஒரு நல்ல முடிவா சொல்லுப்பா! நம்ப குடும்பத்தோட மானம், மரியாதை எல்லாமே நீ சொல்லப் போற பதில்லதான் இருக்கு."

அழுகையுடன் கெஞ்சினார், ரேவதி.

அப்போது உள்ளே வந்த விந்தியாவும், "பிளீஸ் அண்ணா! சரின்னு சொல்லு" தவிப்புடன் கூறினாள்.

அவனுடைய நண்பர்களும் ஒத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினர்.

சிறிது நேரம் தலையில் கைகளைத் தாங்கியபடி யோசித்தவன், ஒரு பெருமூச்சுடன் திரும்பினான்.

"சரி! ஆனா, அவளும் யாரையாவது விரும்புறாளான்னு கேட்டுடுங்க! இன்னொருதடவை இப்படியெல்லார் முன்னாலேயும் அவமானப்பட என்னால முடியாது" இறுகிய குரலில் கூறிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டான்.



ஒருகணம் கண்களை நிம்மதியுடன் மூடித் திறந்த விந்தியா மெல்ல அணைத்து அண்ணனுடைய முன் நெற்றியில் முத்தம் கொடுத்துவிட்டு ஓடினாள்.

பிறகு, பனிப் பாறையாய் உறைந்திருந்த அந்த மண்டபமே உயிர்த்தெழுந்தது.

மீண்டும் நாதஸ்வரம் ஒலிக்கத் தொடங்க, நின்றிருந்த சமையல் வேலைகள் வேகமாய் நடக்கத் தொடங்கின.

என்ன செய்வதென்று புரியாமல் தங்களுக்குள் கிசுகிசுவெனப் பேசிக்கொண்டிருந்த உறவினர் கூட்டத்தில், பெரும் சலசலப்பு எழுந்தது.

பட்டுச்சேலையை நித்தியிடமே கொடுத்து, உடுத்திக் கொள்ளும்படிக் கூறினாள், ரேவதி. நிச்சயதார்த்தத்திற்கான வேலைகளை உடனே செய்யத் தொடங்கினர்.

அடுத்தகணமே சீர்வரிசைத் தட்டுகள் மேடையில் நிரம்பின.

உற்சவத்து சிலை போலிருந்த நித்திலாவை உறவுப் பெண்கள் புடைசூழ விந்தியா அழைத்து வந்தாள். அந்த இடமே அரை மணி நேரத்தில் மகிழ்ச்சி பொங்கும் நந்தவனமாக மாறி இருந்தது.

நித்திக்கு நலங்கு வைக்கப்பட்டு இரு வீட்டினரும் அமர்ந்து– அவசரமாக நிச்சயதாம்பூலப் பத்திரிகை எழுதி வாசித்துவிட்டனர்.

உடனே தன் நெருங்கிய உறவினர்களுக்கும், உள்ளூரில் இருப்பவர்களுக்கும் 'கைப்பேசி'யில் தகவல் தெரிவிக்கத் தொடங்கினார், தியாகு.

எல்லாம் முடிந்து ஆரத்தி சுற்றும்போதுதான், விந்தியா அவளுடைய காதுகளில் குறும்புடன் முணுமுணுத்தாள்.

"அண்ணி! நிமிர்ந்து பாருங்க! 'அண்ணா எதிர்லே உட்கார்ந்திருக்காரு பாருங்க!'"

அவள் கூறியவுடன் கன்னங்கள் இரண்டும் சிவந்துவிட மெதுவாக நிமிர்ந்த நித்திலாவிற்கு நரேனின் உணர்ச்சியற்ற பார்வை மட்டுமே பதிலாய்!

ஆனாலும், தொலைதூரத்தில் ரெயில் வரும்போதே தண்டவாளங்கள் அதிரத் தொடங்குவதைப் போல், மேடைக்கு



எதிரில் அமர்ந்திருந்த அவனைக் கண்டதுமே மனம் தவிப்புடன் துடித்தது.

ஆனால், முன்பின் தெரியாத ஒருவரைப் பார்ப்பதுபோல் அலட்சியத்துடன் சில்லென்று ஊடுருவிய அவன் பார்வை, ...அவள் மனதில் கல்யாணக் கனவுகளை விதைக்காமல் ...த்தை மட்டுமே விதைத்தது.

சட்டென்று இமைகளைக் கவிழ்த்து தன் உணர்ச்சிகளை ...க்கொண்டாள், அவள்.

...து வெகுநாளையத் தவம் மெய்ப்படுமா என்ற பயமும், அவன் தன்னை விரும்பி ஏற்றுக்கொள்வானா என்ற ஏக்கமும் ...விப் பரவ, உடல் சிலிர்த்தது.

"என்ன அண்ணி! அண்ணாவைப் பார்த்த உடனே பயமா? இப்ப நீங்க பயப்படுவீங்க... கல்யாணத்துக்கு அப்புறம் அண்ணாதானே பயந்து நடுங்கப் போறாரு."

கிண்டல் செய்து விந்தியா சிரித்தபோதும், மனதில் ...புரியாத பயம் வந்தது.

கனவுலகில் நடப்பதுபோல சடங்குகள் நடந்து முடிய, ...இரவு உறக்கமின்றித் தவித்துக்கொண்டிருந்தாள், நித்திலா.

யாரும் விழித்திராத அந்தத் தனிமை இரவில், தான் மட்டும் ...மாக உருகிக்கொண்டிருந்தது– அந்த ஒற்றைப் பாரிஜாத ...!

மறுநாள் காலையில் நடந்த கல்யாணச் சடங்குகளில் ...ய முகத்துடனே நரேன் கலந்துகொண்டான்.

விந்தியாவின் சிரிப்பும், கேலிப் பேச்சுகளும் மட்டுமே அந்தத் ...த்தை உயிர்ப்பித்தன.

அவள், இருவரையும் இணைத்து காதருகில் குறும்புடன் ...டல் செய்தபோது, அந்திச் சூரியனின் ஒளி வட்டமாய் ...யின் கன்னங்கள் சிவந்தன.

மனம் அவன் அருகாமையில் கட்டறுந்த கன்றுக்குட்டியாய் ...வியது.

மண்டபத்தில் திருமணச் சடங்குகள் முடிந்து, அவசரமாகக் களைகட்டியிருந்த கல்யாண வீட்டிற்குள் ...டியெடுத்து வைத்தபோது, அவனுடைய காலடித் தடம்

பெரிதாய் தெரிந்தது.

'எண்ணங்கள் எப்படி இருந்தாலும் நம் பாத சுவடுகளாவது இணையட்டும்' என்ற தவிப்பில், அவனுடை காலடித் தடத்தின் மீது தன் பாதத்தை மெல்லப் பதித் உள்ளே சென்றாள், நித்திலா.

பிறகும் அவன் ஒதுக்கத்துடனே இருக்க, மெல்ல இரு படர தொடங்கி, நிலா வருகையைத் தேடிப் பொழு

## NOTICE

Statement of ownership and other particulars about "RANI MUTHU", CHENNAI.

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | 86, Periyar High Road, Chennai - 600007. |
| 2. Periodicity of its Publication | : | Fortnightly |
| 3. Printer's Name | : | C. KALYANASUNDARAM |
| Nationality | : | Indian |
| Address | : | 86, Periyar High Road, Chennai - 600007. |
| 4&5. Name of Publisher & Editor | : | R. BASKARAN |
| Nationality | : | Indian |
| Address | : | 86, Periyar High Road, Chennai - 600007. |
| 6. Name and address of the Owner | : | M/s. Rani Syndicate, 86, Periyar High Road, Chennai - 600007. |

I, R. BASKARAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 1-3-2008

Sd/- R. BASKARAN, Publisher.



கொண்டிருந்தது.

...விற்குள் பயமும், தவிப்பும், குறுகுறுப்புமாக சேர்ந்து ...ற்குள் பலமாய் முரசு கொட்டத் தொடங்கின.

...இரவு மலர்களும், ஊதுபத்தியின் நறுமணமாய் அந்த ... அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அங்கு தனித்து விடப்பட்டு நரேனுடைய வருகையை ...பார்த்துக் காத்திருந்த நித்தியின் புலன்கள் பெரிதும் அலை ..., விழிச் சாளரங்களும் ஒருவித விழிப்புடன் திறந்திருந்தன.

அவன் வருகையை உறுதியான காலடிச் சப்தம் அறிவிக்க, ...வாக எழுந்து நின்றாள், அவள்.

உள்ளே வந்தவன், ஒருகணம் அவளையே ஆழமாக ...டுருவினான்.

"உக்காரு நித்தி! நான் உன்கிட்டக் கொஞ்சம் பேசணும்" ...றான், அழுத்தமான குரலில்.

"இல்லை... பரவாயில்லை."

அவள் நிற்கும்போதே, "சரி! நான் உக்காந்துக்கிறேன்" ...இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

பிறகு, சிறிது நேரம் ஏதோ யோசனையுடன் இருந்தான்.

"உனக்கு எப்படி என்னைப் புரிய வைக்கிறதுன்னு தெரியலை. ..., என் மனசுல இருக்கிறதை நான் சொல்லித்தான் ...ணும்" பீடிகையுடன் பேசத் தொடங்கினான்.

அவள் கவனிப்பதை உணர்ந்ததும் தொடர்ந்தான்.

"நான் இப்ப கல்யாணம் வேணாம்னு எவ்வளவோ ...னேன். அம்மாதான் கேக்கலை! அவங்களுக்காகத்தான் ...வை கல்யாணம் செஞ்சுக்க ஒத்துக்கிட்டேன். எனக்கு ... காதல் அது இதிலெல்லாம் என்னிக்குமே நம்பிக்கை ...ந்ததில்லை..."

"இதுதான் நமக்குன்னு மனசுல ஏத்துக்கிட்டு மாப்பிள்ளையா ... இறங்கினப்புறம்தான் தெரிஞ்சுது... ஒரு பொண்ணால ...வு சுலபமா ஏமாத்தப்பட்டிருக்கேன்னு!

அவ தன்னோட காதலை என்கிட்ட முன்னாடியே சொல்லி ...ந்தா, நிச்சயமா அம்மா- அப்பாகிட்டப் பேசி இந்தக்



கல்யாணத்தைத் தடுத்திருப்பேன். இல்லை... இவ ஒரு வா முன்னாடியாவது அவனோடு போயிருக்கலாம். இப்ப கல்யாணத்துக்கு முதல் நாள் எல்லார் முன்னாடியும் எங்க தலைகுனிய வச்சிருக்க வேண்டாம்...

இப்ப என் மனசு முழுக்க காதல்னாலே வெறுப்பு வந்திரு ஒரு பெண்ணோட சுயநலமான காதல்தானே என் அவமானப்படுத்திச்சின்னு தோணுது.

பெண்கள் எல்லாருமே நம்பவச்சு கழுத்தை அறுக் வங்களோன்னு ஒரு எண்ணம் வருது...

கேவலம்... ஒரு சின்னப்பொண்ணு நம்ம ஏமாத்திட்டாளேன்னு மனசு தீயாத் தகிக்குது... என்னா எப்படி உன்கூட இயல்பா வாழ்க்கை நடத்த முடியும்? சத்திய முடியாது...!

இதுவே வேறு பொண்ணா இருந்தா, நான் ஒத்துக்கிட் இருப்பேனான்னு எனக்கே தெரியலை, நித்தி! சின்னவய இருந்து உன்னைப் பாத்துப் பழகி இருக்கேன்... உன்னைப்ப எனக்கு நல்லாத் தெரியும்! அதனால, ஒரு நல் மனைவியா இருக்க முடியலைன்னாலும், உண்மையா ஒரு தோழியாவாவது நீ இருப்பேன்னு மனசுக்குள்ளே ஒ சின்ன எதிர்பார்ப்போடுதான் இந்தக் கல்யாணத்து சம்மதிச்சேன்...

இப்போ நாம ரெண்டு பேரும் நல்ல நண்பர்க மட்டும்தான் இருக்க முடியும்னு நான் நினைக்கிறே கல்யாணக் கனவுகளையெல்லாம் அந்தத் தாராவோ துரோகம் ஒரு நொடியில சுக்குநூறா சிதறடிச்சிடுச்சி... ந நல்ல நண்பர்களா இருப்போம்! இதுக்கு உனக்கு சம்மதம் என்னோடு இருக்கலாம்... இல்லைன்னா ஒரு ஆண்டு கழி பரஸ்பர சம்மதத்தோடு நாம பிரிஞ்சிடலாம்... இப்ப நீதா ஒரு முடிவெடுக்கணும்."

தன் மனதிலுள்ள பாரங்களை எல்லாம் அவள் மீது இற வைத்துவிட்டு, பெருமூச்சுடன் ஜன்னல் அருகில் சென் வெளியே பார்வையைப் பதித்தவனின் புருவங்கள் இரண்டு பெரும் யோசனையுடன் சுருங்கின.



## 6

ஒருவன் தன் மனைவிக்குத் தரவேண்டியதும், பெற்றுக்கொள்ள வேண்டியதும் அன்பெனும் மந்திரம் மட்டுமே ...பதை இதயம் மறந்துபோனது.

தன் இணையின் நேசத்தை உணராதவனாய் ஒரு கிரேக்கச் சிலைபோல் இரும்பின் உறுதியுடன் கைகளைக் கட்டியபடி ...நின்றிருந்தவனை ஏக்கமாகப் பார்த்தாள், நித்திலா.

இவனுக்கு என்ன சொல்லி பெண்மையின் அருமையை– ... மனதில் சுகமாகத் தேங்கி இருக்கும் காதலைப் புரிய ...தென்று புரியாமல் தவித்துத் திணறியது மனது!

காதல் என்ற வார்த்தையையே வெறுப்பதாகக் கூறுபவனிடம், ... காதலைக் கூறுவதில் எந்தப் பயனும் இல்லையென்று தோன்றியது. தன் நேசத்துக்குரியவனிடம் அதன் எதிரொலி தெரியாது போகவே, இதயம் வலிக்கத் தொடங்கியது.

அவனுயை வார்த்தைகளினால் மவுனத்தின் மொழியால அங்கு ஒரு நிழல் யுத்தம், அவள் மனதில்!

நிஜ யுத்தமின்றி... நேச நினைவுகளின் நிழல் யுத்தம்!

வெகு நேரம் அங்கு உறைபனியாய், ஒருவித அமைதி ...ந்திருக்க, அவன் அசையாமல் நின்றிருந்த விதம் மனதில் ஒருவித பயத்தை வரவழைத்தது.

மெதுவாக ஒரு முடிவுடன் அவனருகில் சென்றாள், நித்தி.

"நரேன்... நீங்க சொல்ற மாதிரியே நாம நல்ல நண்பர்களா இருக்கலாம். எனக்கும் அதிலே சம்மதம்தான்."

அவள் மென்மையாகக் கூறியபோது வேகமாகத் திரும்பியவன், "நன்றி" என்றான், பெரிய பாரம் இறங்கிய நிம்மதியுடன்!

பிறகு தங்களுக்கிடையில் எதுவுமே நடக்காதது போல் ...டிலுக்கு அருகில் சென்றவன்– அதிலிருந்து ஒரு ...வையும், தலையணையையும் எடுத்துத் தரையில் விரித்துப் ...த்துக்கொண்டான்.

விடிய விடியத் தவிப்புடன் விழித்திருந்த நித்திக்கு, தன் ...கால வாழ்க்கை எப்படியாகப் போகிறதோ என்ற பயமும், ...மும் மனதில் நிறைந்திருந்தன.

விடியும்போது மெல்ல உறங்கத் தொடங்கியவளை, கதவைத் தட்டிய சித்தியின் அழைப்பு உசுப்பி எழுப்பியது.

மறுநாள் கண்கள் சிவந்து சோர்ந்து நின்றிருந்தவளை, உறவுப் பெண்கள் அனைவரும் கேலி செய்ய– விந்தியாதான் அவளிடம் மிகவும் ஒட்டிக்கொண்டாள்.

பிறகு, இரண்டு நாட்கள் கழித்து இருவரும் நரேனுடைய வீட்டிற்குச் சென்றனர்.

ரேவதி, சங்கரன், விந்தியா மூவருமே அவளைத் தங்களில் ஒருவராகப் பாசத்துடன் ஏற்றுக்கொண்டது புரிந்தது.

யார் அவளை உயிராய், தன்னில் பாதியாய் நினைக்க வேண்டுமோ, அவன் மட்டும் விலகியே இருந்தான்.

அடுத்த வாரத்திலிருந்து, அவள் கல்லூரிக்குச் செல்ல வேண்டும்.

தினமும் தொலைபேசியில் பேசிய அம்மா– அப்பாவின் அன்பு மொழிகள் மட்டும் இல்லையென்றால், தான் எப்படி உணர்ந்திருப்போமோ என்ற ஏக்கமும், ஆயாசமும், நித்தியின் மனதில் உலவத் தொடங்கின.

**அ**ன்று, நரேன் அலுவலகம் செல்ல தயாராகிக் கொண்டிருந்தான்.

"நரேன்..." அறை வாசலிலிருந்து அழைத்த ரேவதி, அவனைத் தனியே அழைத்துப்போய் பேசினார்.

"நரேன்– ஏன்ப்பா இன்னிக்கே அலுவலகத்துக்குக் கிளம்புறே இன்னும் ஒரு வாரம் விடுப்பு போட்டுட்டு, நித்தியை ஊட்டி கொடைக்கானல்னு எங்கேயாவது அழைச்சுட்டு போயிட்டு வரலாமே?"

"இல்லைம்மா! எனக்கு இப்ப 'லீவு' போட முடியாது. வேலை இருக்கு. அவளும் பரீட்சைக்குப் படிக்கணும். அதனால இப்ப வேணாம். அப்புறம் பார்த்துக்கலாம்" அடிக்குரலில் தெளிவாக கூறினான்.

"சரிப்பா! பாவம் அவ சின்னப் பொண்ணு... ஆசை படுவாளேன்னு..." அவர் முடிப்பதற்குள், "நித்தி... ஒரு நிமிட இங்கே வாயேன்" என்று அழைத்தான், நரேன்.

"அம்மா, நம்ம ரெண்டு பேரையும் தேனிலவுக்கு போக



...சொல்றாங்க. நான்தான் 'இப்ப வேணாம்... உன்னோட படிப்பு முடியட்டும்'னு சொன்னேன். சரிதானே?"

ஆழமான குரலில் அவன் கேட்க– "சரி"யென்று தலையசைத்தாள், அவள்.

அவன் அலுவலகம் சென்றவுடன், விந்தியா அவளைத் தேடி வந்துவிட்டாள்.

"என்ன அண்ணி! அண்ணா என்ன சொன்னாலும் சரி, சரின்னுவீங்களா? நான்தான் அம்மாகிட்ட சொல்லி தேனிலவுக்குப் போறதைப் பத்தி கேக்கச் சொன்னேன். நீங்க ரெண்டு பேரும் பழகறதுக்கு... ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிறதுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம்னு சொன்னா, அதை இப்படி கோட்டை விட்டுட்டீங்களே?" ஆதங்கத்துடன் கேட்டாள்.

"அவர் சரியாதானே சொல்லி இருக்காரு விந்தி... எனக்கும் பரீட்சையெல்லாம் வருது. அவருக்கும் வேலை இருக்கும். இப்ப போனா அங்கே மகிழ்ச்சியா இருக்கமுடியாதே... இதுவே எல்லாம் முடிஞ்சா, நிம்மதியா போயிட்டு வரலாமேன்னு சொன்னாரு. நானும் சரின்னு சொல்லிட்டேன்."

மனதில் புதைந்திருந்த ஏக்க நிழல்களை வெளிப்படுத்தாமல் ...று முறுவலுடன் அவள் கூறும்போதுதான், அறை வாசலில் நரேன் நின்றிருப்பது தெரிந்தது.

பதறி எழுந்தவளைப் பார்த்ததும், "என்னோட வண்டி சாவியை மறந்துட்டேன். அதான் வந்தேன், நீங்க பேசிட்டிருங்க" என்றபடி அதை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியேறியவனின் மனதில், நித்தியின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் வலம் வந்தன.

தன்னையும் விட்டுக்கொடுக்காமல், தங்களுக்கிடையே இருக்கும் பிரிவையும் வெளிப்படுத்தாமல், அழகாக சமாளித்த மனைவியை, முதன்முதலாக மனதிற்குள் ரகசியமாகப் பாராட்டினான். ரசித்தான்.

**அ**டுத்து வந்த நாட்கள் படிப்பிலும், அந்த வீட்டினரைப் புரிந்துகொள்வதிலும் செல்ல, அவள் கல்லூரி போகும் நாளும் வந்தது.

வழக்கம் போல் அவள் கல்லூரிப் பேருந்திலேயே சென்று ...ர, வாழ்க்கை இயல்பாய் தொடர்ந்தது.



காலையில் கல்லூரிக்குக் கிளம்புவதற்கு மட்டு நேரமிருப்பதால், இரவு நேரங்களில் ரேவதிக்கு சமையலில் பெரிதும் உதவத் தொடங்கினாள், நித்தி.

ஒரு நாள் அவளைத் தடுத்தார், ரேவதி.

"எனக்கு நீயும், விந்தி மாதிரித்தாம்மா. நீ முதல்லே ப படிப்பு முடிஞ்சப்புறம் சமையலுக்கு வரலாம். அதுகூ நான் இருக்கும்போது நீ ஏன் கஷ்டப்படுறே நித்தி?" என் கூறிவிட்டார்.

ஒரு தாய்– தந்தையின் அரவணைப்பும், ஒரு தோழியி நட்பும் அங்கு தடையற்றுக் கிடைத்தாலும், நரேனின் அன் மட்டும் கானல்நீராய்ப் போனதை எண்ணி தவித்துப்போனா அவள்.

தன்னிடமிருந்த ஏதோ ஒன்றை அவன் வெகு நாட்களுக் முன்பே களவாடிப்போன ஞாபகம்!

காதல் பக்கங்களில் தன் கருத்தைப் பதிக்க மறுத்தவனி பார்வைகள் மட்டும், தன்னைப் படபடக்கச் செய்வது ஏனென் அவளுக்குப் புரியவில்லை.

ஒரு குறளின் அர்த்தம், அப்போதுதான் அவள் நினைவி வந்தது.

"தம்மால் விரும்பப்படும் காதலரிடமிருந்து தூதாக வரும் இனிய சொல்லைக்கூடப் பெறாமல், பிரிவைப் பொறுத்து உ வாழ்கின்ற மகளிர் போலக் கொடுமையுடையார் இவ்வுலக இல்லை" எனும் பொருள்பட வருகின்ற குறள் தனக்காக எழுதப்பட்டதைப் போல் ஒருவித சுய பச்சாதாபம் எழுந்த

அலைபாய்ந்த தன் மனதைப் படிப்பில் செலுத்தியவ விடுமுறை நாட்களில் விந்தியுடன் சேர்ந்து ஏதாவது புது சமையலில் இறங்கிவிடுவாள்.

சமையலறையே கலகலக்க, சில நாட்களில் சங்கரனும் அ கலந்துகொள்ள ஆரம்பித்தார்.

"விந்தி... நித்தி! உங்களோடு நானும் சேர்ந்துக்கலாம இன்னிக்கு என்ன புது சமையல்?"

கேட்டபடி உள்ள வந்த அவர், காய்கறிகளை நறுக்கித் த தொடங்கினார்.

"என்ன? நான் சமைக்கிறப்ப இந்தப் பக்கம் எட்டிக்கூ



பார்க்கமாட்டீங்க. இப்ப மகளுக்கும், மருமகளுக்கும் உதவி பண்ண வந்துட்டீங்க? ம்..." –குறும்புடன் கிண்டல், செய்தார், ரேவதி!

சமையலறையே சிரிப்பும், வேடிக்கையுமாகக் கலகலக்க– சிடுசிடுப்புடன் அங்கு வந்தான், நரேன்.

"என்னப்பா... நீங்களும் இங்கே வந்து கூத்தடிக்கிறீங்க? அங்கே வாசல் கதவு திறந்தே இருக்கு" சிறு எரிச்சலுடன் கூறினான்.

"இன்னிக்கு எல்லாரும் விடுமுறை உற்சாகத்தில் இருக்கோம்... அதான்! எங்களோடு வந்து நீங்களும் சேர்ந்துக்கங்கண்ணா."

விந்தியா ஆவலுடன் அழைத்தாள்.

"எனக்கு நிறைய வேலை இருக்கு."

ஓரக்கண்ணால் நித்தியைப் பார்த்தபடி கூறினான், அவன்.

அப்போதுதான் நித்திக்கு நேற்று அவனிடம் கூறியது ஞாபகம் வந்தது.

நேற்று இரவு, வெகு நேரம் வரை அவன் உறங்க வரவில்லையென்று தேடிச் சென்றபோது, முன்புற அறையில் 'கம்ப்யூட்டர்' முன்னால் அமர்ந்திருந்தான்.

'நரேன்... இன்னும் நீங்க தூங்க வரலையேன்னு பார்த்துட்டுப் போகலாம்னு...'

கேள்வியுடன் உயர்ந்த அவன் புருவங்களைப் பார்த்தபடி கூறினாள், நித்தி.

'ஆமா! புது 'பிராஜக்ட்' ஒண்ணு... அதுக்கான வேலையில இருக்கேன். நான் வர நேரமாகும். நீ போ!'

இயல்பாகக் கூறிவிட்டு அவன் வேலையில் கவனத்தைச் செலுத்த, சமையலறைக்குச் சென்று பாலை சூடாக்கி எடுத்து வந்து அவள் தந்தபோது, அவன் பார்வை கனிந்திருந்தது.

'ஏன் நித்தி? நீ போய் எனக்காக சிரமப்பட்டு...?' தலையைப் பிடித்தபடி மென்மையான குரலில் கூறினான்.

'ஏன், தலை வலிக்குதா? தைலம் ஏதாவது வேணுமா? ரொம்ப நேரம் 'கம்ப்யூட்டர்' முன்னாடியே உட்கார்ந்திருந்தா இப்படித்தான் தலைவலிக்கும்... கண் வலிக்கும்... இருங்க, வரேன்.'

என்றபடி வேகமாகச் சென்று தைலம் எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள்.

'நரேன்... நான் வேணா உங்களுக்கு உதவி பண்ணலாமா?

என்கிட்டே சொல்லிடுங்க. நான் முடிஞ்சவரைக்கும் தயார்பண்ணி வைக்கிறேன். நாளையிலேருந்து தொடங்கலாமா?" ஆவலுடன் கேட்டள்.

'ம்... சரி! நாளைக்கு எப்படின்னு சொல்லித் தரேன்.' சட்டென்று பூத்த சிறு முறுவலுடன் அவன் கூறியதும், அத்திப் பூவாய் மலரும் இந்த அழகான புன்னகைக்காகவே எது வேண்டுமானாலும் செய்யலாமென்று அவளுக்குத் தோன்றியது.

## 7

எல்லாமே நிழற்படமாய் ஞாபகம் வர, உள்ளூர ஒருவித நடுக்கமும், நேற்று அவனிடம் கூறியதை எப்படி மறந்தோம் என்ற பதபதைப்பும் இருந்தன.

"விந்தி... மீதி வேலையை நீ பார்த்துக்கிறியா? நான் அவருக்கு போய் உதவி பண்ணணும்" மெதுவாகக் கேட்டாள்.

"ம்... நடக்கட்டும்... அய்யா ஓரக்கண்ணால் பார்த்து சமிக்ஞை செஞ்சதும், அம்மா ஓடுறீங்களா?" உதடுகளை சுழித்தபடி கேலி செய்தாள்.

"ஏய் வாலு! உனக்கு கல்யாணம் ஆகட்டும்... அப்ப தெரியும் நீ போ நித்தி! நாங்க பார்த்துக்கிறோம்" என்றபடி அவளை அனுப்பி வைத்தார், ரேவதி.

அவள் முன்னறைக்குச் சென்றபோது, நெரித்த புருவங்களுடன் கம்ப்யூட்டரில் ஆழ்ந்திருந்தான், நரேன்.

"நரேன்... எனக்கு எல்லா விபரமும் சொல்லிக் கொடுங்க நான் கத்துக்கிட்டு தயார்பண்ணி வைக்கிறேன்" புன்னகையுடன் கேட்டாள்:

"வேண்டாம்! உனக்கு சமையலறையிலே முக்கியமான வேலை இருக்கும். நான் வெளியே போனதுகூடத் தெரியாம சமையல்லே மும்முரமா இருந்தே... எனக்காக எதுக்கு உன் நேரத்தை விரயம் பண்ணிக்கிட்டு- நீ போ! நான் பார்த்துக்கிறேன்" இறுகிய குரலில் கூறினான், அவன்.

தான் நேற்றுக் கூறியதை மறந்து, அவனை வேண்டுமென்றே புறக்கணிப்பதாக எண்ணுகிறானோ என்ற விதிர்ப்பு வந்தது.

"சாரி! நீங்க சாயந்தரம்தான் ஆரம்பிப்பீங்கன்னு நினைச்சேன்- இப்ப எனக்கு ஒரு வேலையும் இல்லை... சொல்லுங்க" என்றபடி அவனருகில் போடப்பட்டிருந்த இன்னொரு நாற்காலியில் அமர்ந்தாள், அவள்.

பிறகு இருவரும் வேலையில் ஆழ்ந்துவிட, வெகு நேரம் கழிந்தது-

மெதுவான கதவு தட்டலுக்குப் பிறகு, அறைக் கதவு திறக்கப்பட்டது.

"போச்சுடா! நீங்க ரெண்டு பேரும் எங்ககிட்ட இருந்து தப்பி எங்கே போனீங்கன்னு தேடினா, இங்கேயா இருக்கீங்க? அண்ணி! அண்ணா பயங்கரமா வேலை வாங்குவாரு... பாட்டிக்காதீங்க... இப்பவே சொல்லிட்டேன். உங்க வேலைக்கு ஒரு சின்ன இடைவெளி விட்டுட்டு சாப்பிட வாங்க!"

கண்சிமிட்டியபடி கேலியுடன் அழைத்தாள், விந்தியா.

"ம்... சாப்பிட்டுட்டு வந்து மீதியைப் பார்க்கலாமா?" என்றபடி கம்ப்யூட்டரை அணைத்துவிட்டு எழுந்தான், நரேன்.

அனைவரும் சாப்பிடும்போது "இன்னைக்கு சாப்பாடு ரொம்ப சுவையா இருக்கு... யாரு செஞ்சது?" இயல்பாகக் கேட்டான்.

"உங்க பொண்டாட்டி செஞ்சதுன்னு நினைச்சிதானே இவ்வளவு 'ஐஸ்' வைக்கிறீங்க? சாரி... இது நான் செஞ்சது!"

வேண்டுமென்றே வம்புக்கிழுத்த விந்தியாவை அடக்கினார், ரேவதி.

"இல்லை நரேன்... அவ பொய் சொல்றா... நித்திதான் செஞ்சா! நல்லா இருக்கில்லையா?" ஆர்வத்துடன் கேட்டார்.

"ம்... ம்..." என்றபடி சாப்பிடத் தொடங்கியவனின் முகம் சட்டென்று சுருங்கியது.

நிமிடத்துக்கொருதரம் குணம் மாறித் தனக்குள் அடங்கிக்கொள்பவனை நினைத்தால், நித்திக்கு பயம் வந்தது. ஆனால், மனதில் முன்பு தூவப்பட்டிருந்த காதல் விதை இப்போது வளர்ந்து விருட்சமாகி இருந்ததால், அந்த காதலினாலேயே அவனை மாற்றிவிடலாமென்ற தைரியமும் பிறந்தது.

பிறகு வந்த நாட்களில் வாழ்க்கை இலகுவாகச் செல்ல, விந்தியா

அவளுக்கு நெருங்கிய தோழியாகி இருந்தாள்.

எல்லாவற்றையும் அவளிடம் பகிர்ந்துகொள்ளும் மனது நரேனுக்கும், அவளுக்கும் உள்ள இடைவெளியைப் பற்றி மட்டும் புதையல் காக்கும் பூதமாய் மறைத்து வைத்தது.

ஆனால், அதனாலேயே அவள் சிலநேரங்களில் சங்கடப்படவும் நேர்ந்தது.

ஒரு நாள் இருவரும் டி.வி. முன் அமர்ந்திருந்தபோது நெருக்கமான முதலிரவுக் காட்சியொன்று வர, தர்மசங்கடத்துடன் தலைகுனிந்தாள், நித்திலா.

அப்போது, அவள் பக்கம் திரும்பினாள், விந்தியா.

"என்னண்ணி... அண்ணா ஞாபகம் வந்துடுச்சா? இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் வந்துருவாரு! பாருங்க... அவருக்கு தெரியவேயில்லை... புது மனைவியாச்சே... அவங்களோட அதி நேரம் இருக்கலாமேன்னு சீக்கிரம் வர்றாரா? இவருக்கு பேசா ஒரு கம்ப்யூட்டரைக் கல்யாணம் பண்ணி வைச்சிருக்கலாம்"

குறும்புடன் தாழ்ந்த குரலில் அவள் கூறித் திரும்பினாள். எல்லாவற்றையும் கேட்டபடி நரேன் அங்கு நின்றிருந்தான்.

சட்டென்று எழுந்த நித்தி வேகமாகச் சமையலறைக்குச் செல்ல, அவன் கோபப்படுவானே என்று பயந்து விந்தியாவும் மெதுவாக எழ முயற்சித்தாள்.

அவள் தலையில் செல்லமாகக் குட்டியவன், "சரியான வாயாடி! எவன் உன்கிட்ட வசமா மாட்டப்போறானோ?" சிறு கேலியுடன் உள்ளே சென்றான்.

"நல்லவேளை! அண்ணா கோபிச்சுக்கலை... உடனே டிபன் காப்பி எதையாவது எடுத்துட்டுப்போய் உங்க வீட்டுக்காரர் வாயை அடையுங்க! இல்லை... வேற ஏதாவது..."

குறும்புடன் அவள் கூற, அதைப் புரிந்துகொண்டதா நித்தியின் கன்னங்கள் அழகாகச் சிவந்தன.

"உஷ்! விந்தியா... சும்மாவே இருக்கமாட்டியா?"

செல்லமாகச் சிணுங்கியபடிச் சென்றவளுக்குள், என்றாவது ஒருநாள் நரேன் தன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளமாட்டானா என்ற ஆதங்கம் பெரிதாய் எழ, முகம் சட்டென்று வாடியது.

அறைக்குள் அவள் வந்ததும், "நித்தி! இன்னிக்கு வேலை ஒண்ணும் இல்லையே? நாம சினிமாவுக்குப் போகலாமா"



ஆர்வத்துடன் கேட்டான், நரேன்.

"ம்... ஆனா, விந்தியையும் அழைச்சுட்டுப் போகலாம்!"

சிறு குழந்தையின் ஆர்வத்துடன் அவள் கூற, தன்னுடன் தனியே வருவதற்கு அவளுக்கு விருப்பமில்லையோ என்ற நினைப்பில் அவன் முகம் சுருங்கியது.

உடனே தலையைப் பிடித்துக்கொண்டான்.

"சரி! இந்தா... ரெண்டு 'டிக்கெட்'தான் எடுத்துட்டு வந்தேன். நீயும், விந்தியும் போயிட்டு வாங்க" என்றான், இனம்புரியாத குரலில்.

"இல்லை... நீங்க 'டிக்கெட்டு' எடுத்துட்டு வந்திருப்பீங்கன்னு தெரியாது. அதான் அப்படிச் சொன்னேன். நாம போகலாம்" தலைகுனிந்தபடிக் கூறினாள், அவள்.

"எனக்கு திடீர்னு தலைவலிக்குது... இதோடு அங்கே வந்து உட்கார முடியாது. நீங்க போங்க. நான் கொண்டுவந்து விடவா? இல்லை... 'ஆட்டோ'வுல போயிடுறீங்களா?" எங்கேயோ பார்த்தபடி கேட்டான்.

"நான் போகலை... அத்தையைப் போகச் சொல்றேன். உங்களுக்கு..." எனும்போதே அவளை இடைமறித்தான்.

"வேணாம். எனக்கு கொஞ்ச நேரம் அமைதியாப் படுத்திருந்தா சரியாயிடும்."

'டிக்கெட்'டை அவளிடம் கொடுத்துவிட்டு படுத்து விட்டான்.

வெளியில் வந்து விந்தியிடம் விஷயத்தைக் கூறியபோது, அவள் துள்ளிக் குதித்தாள்.

ரேவதியும், சங்கரனும் கோவிலுக்குச் சென்றிருந்ததால், அவனைக் கதவை மூடிக்கொள்ள சொல்லிவிட்டு இளையவர்கள் இருவரும் கிளம்பினர்.

அங்கு நித்தியின் கவனம் சினிமாவில் பதிய மறுத்து, நரேனிடமே சென்றுகொண்டிருந்தது.

சினிமா முடிந்து இருவரும் வெளியே வந்தபோது, நரேன் அங்கு காருடன் காத்திருந்தான்.

"பார்த்தீங்களா? உங்களை அழைச்சிட்டுப் போகணும்னா உடனே தலைவர் தன் தலைவலியைக்கூட தள்ளிவச்சிட்டு

காரை எடுத்துட்டு வந்திட்டாரு பாருங்க."

அடிக்குரலில் கேலி செய்த விந்தியாவிடம்–

"சும்மா இரு விந்தி" என்று செல்லமாக அதட்டினாள், நித்தி.

ஆனால், அதைக் காதில் வாங்கிவிட்ட நரேனின் இமைகள் இடுங்கிவிட, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தான்.

பிறகு இறுகிய முகத்துடன், "அம்மா சொன்னதுனாலே தான் வந்தேன். இல்லேன்னா வந்திருக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு, வேகமாக காரை எடுத்தான்.


ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.


ஒரு நிமிடம் மனதுக்குள் மலர்ந்த ஏதோ ஒன்று, உடனே வாடியதைப் போல் உணர்ந்தாள், நித்தி.

ஒரு நாள் விந்தியையும், நித்தியையும் கார் ஓட்டக் கற்றுக்கொள்ளும்படிக் கூறி, அந்த வாரக் கடைசியில் தன் நண்பனின் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பி வைத்தான், நரேன்.

தவிர்க்க முடியாத நேரங்களில் தன்னை அழைக்க காரில் வருவதுகூட அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்ற எண்ணம் வர, முனைந்து கார் ஓட்டக் கற்றுக்கொண்டாள்.

தினமும் கல்லூரிக்குச் செல்வதும், பாடங்களைப் படிப்பதும், நரேனுக்கு உதவுவதும், அம்மா– அப்பாவிடம் போனில் பேசுவதும், சமையல் வேலைகளில் பங்கேற்பதும் என்று வாழ்க்கை தெள்ளிய நீரோடையாய் சென்றது.

ஆனாலும், நித்தியின் மனம் மட்டும் ஏனோ தவிப்புடனே இருந்தது.

ஒரு நாள், காலையில் எழுந்து வாசல் தெளித்து அவள்

கோலம் போட்டுக்கொண்டிருந்தபோது, உறக்கம் கலைந்து எழுந்து வாசலுக்கு வந்த நரேனுக்குள் பெரும் தாக்கம்!

விடிகாலையில் தலைகுளித்துவிட்டு அப்போதுதான் புதிதாய் பூத்த மலராய், விரல்களின் வழியே நளினமான லாவகத்துடன் வர்ண ஜாலத்தைக் கோலமாக தீட்டிக்கொண்டிருந்த நித்தியையே, அவன் விழிகள் அளவெடுத்தன.

கோலப் புள்ளிகளுடன் அவன் மனமும் சேர்ந்து சிறைப்பட, பூசணிப் பூவின் மேல் அமர்ந்த வண்டாய் அவளிடமே நிலைத்திருந்தன, விழிகள்!

இதை எதையுமே அறியாமல் கருமமே கண்ணாக இருந்தாள், நித்தி!

ஒரு மாதத்தில் காஞ்சனாவும், தியாகுவும் பொங்கல் பண்டிகை என்று சீர் கொடுத்துவிட்டு அவளையும், நரேனையும் பொங்கலுக்கு அழைக்க வந்தனர்.

எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் இயல்பாக அவர்களை வரவேற்றான், நரேன்.

"உள்ளூரில்தானே இருக்கோம் அங்கிள்! இதுக்கு ஏன் இவ்வளவு சம்பிரதாயங்கள்?" மெதுவாகக் கேட்டான்.

"இல்லைப்பா! நீயும், நித்தியும் அப்புறம் நம்ம வீட்டுக்கு வரவே இல்லியே... அதான்! பொங்கல்னாவாவது ரெண்டு நாள் வந்து தங்கி இருப்பீங்களேன்னு காஞ்சனா சொன்னா! அதான் உடனே கிளம்பி வந்துட்டோம். பேசாம எல்லாரும் அங்கே வந்துடுங்களேன்... ரொம்ப நாளாச்சு. எல்லாரும் சேர்ந்து இருக்கலாம்" ஆவலுடன் அழைத்தார்.

"ஆமாம்மா! பழைய மாதிரி எல்லாரும் ஒண்ணா இருக்கலாம்" விந்தி ஆசைப்பட– அனைவரும் சம்மதித்தனர்.

"மாட்டுப் பொங்கல் அன்னிக்கு நம்ம கிராமத்துக்கு போய் குலதெய்வத்துக்கு பொங்கல் வைச்சிட்டு வந்துடலாம். எப்படியும் மூணு நாள் 'லீவு' இருக்குமே?"

சங்கரன் கூற, அதற்கான தேவைகளைப் பெண்கள் பட்டியலிடத் தொடங்கிவிட்டனர்.

பொங்கலுக்கு முதல்நாளே அனைவரும் நித்தியின் வீட்டில் கூடிவிட்டனர்.

மறுநாள் பொங்கல் பண்டிகையை அனைவரும் மகிழ்ச்சியுடன்



கொண்டாடிவிட்டு, அன்றிரவே சங்கரனின் சொந்த ஊருக்குக் கிளம்பினர்.

காரில் கிளம்பியவர்கள், விடியும்போதுதான் சேலத்திற்கு அருகிலிருந்த அந்த கிராமத்தை அடைந்தனர்.

சிறு வயது நினைவுகள் நித்தியை அதிகம் ஆட்கொண்டதில், மனம் நரேனின் தோழமைக்கு மிகவும் ஏங்கத் தொடங்கியது.

## 8

கிராமத்திற்கே உரிய மண் வாசனையும், வயல்களின் பசுமையும், 'சல்சல்' என்றஒலிகளுடன் சென்றமாட்டுவண்டிகளின் சப்தமுமாய் அந்த ஊர் அழகாக அவர்களை வரவேற்றது.

தூரத்தே தெரிந்த ஏற்காடு மலை, புகை படிந்த ஓவியமாய்– ரம்மியமாய் இருந்தது.

சங்கரன் முன்பே தெரிவித்திருந்ததால், அவருடைய அண்ணன் வீட்டில் எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருக்க, அனைவரும் புது மணமக்களை அன்புடன் வரவேற்றனர்.

காலையில் குளித்துத் தயாராகி குலதெய்வம் கோவிலுக்குச் சென்று பொங்கல் வைத்தனர்.

நித்தியின் பெரியம்மா குடும்பத்தினரும், அந்தக் கோவிலுக்கு நேர்த்திக் கடனை நிறைவேற்ற வந்திருந்தனர்.

எதிர்பாராத சந்திப்பில் எல்லோரும் ஒன்றாய் இணைந்துவிட்டிருந்தனர். அவர்களின் மகன் கிரிதரின் விழிகள், நித்தியிடம் பேசிக்கொண்டிருந்த விந்தியாவையே சுவாரசியத்துடன் வலம் வந்துகொண்டிருந்தன.

நரேனுக்கும், விந்தியாவிற்கும், அவனை நித்தி அறிமுகம் செய்து வைத்துவிட, நான்கு பேரும் பேசிக்கொண்டிருந்தனர்.

கிரி, 'ஐ.பி.எஸ்.' முடித்துவிட்டு திருச்சியில் காவல்துறை அதிகாரியாக வேலை பார்க்கிறான்.

கண்டிப்பான அதிகாரி என்று பெயரெடுத்தவன்.

பூஜைக்குத் தேவையானவற்றை பெரியவர்கள் செய்ய, அடுப்பிற்குத் தேவையான சிறு சுள்ளிகளைச் சேகரிப்பதில் விந்தியாவும், நித்தியும் ஈடுபட்டனர்.

விறகை எடுத்து வரும்போது, கவனிக்காமல் ஒரு தாழ்ந்த கிளையில் மோதிவிட, நித்தியின் கன்னத்தில் சிறிதாக கீறல் ஏற்பட்டுவிட்டது.

சிவந்திருந்த கன்னத்தைக் கவனிக்காமல் அவள் பூஜைக்கு ஏற்பாடு செய்ய, விந்தி அதைக் கவனித்துவிட்டாள்.

உடனே அருகில் வந்தவள், "கன்னத்தில் என்னண்ணி காயம்?" அடிக்குரலில் ராகம் போட்டு குறும்புடன் பாட, அவளுக்கோ பெரும் தவிப்பு.

"விந்தி... சும்மாயிரு... இது கோவில்! நாம சுள்ளி எடுத்துட்டு வரப் போனப்ப, ஒரு கிளையிலே இடிச்சிட்டேன்... அதுவாதான் இருக்கும்! விடு, தானா சரியாயிடும்" என்றவள், அதை மறந்தே போய்விட்டாள்.

ஆனால் பூஜை முடிந்து காரில் வரும்போது அதைக் கவனித்துவிட்ட ரேவதியும், காஞ்சனாவும் பதறிப்போய் என்னவென்று விசாரித்தனர்.

"அண்ணிக்கு காயம் பட்டுடுச்சே! இந்த அண்ணாவுக்கு கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா பாருங்க... வழியிலே நிறுத்துங்க.. ஏதாவது மருந்து வாங்கிடலாம்" விந்தி கூறினாள்.

அப்போதுதான் திரும்பி நித்தியை நோக்கியவன், அவளுடைய கன்னக்காயத்தைக் கவனித்தான்.

ரோஜாவின் மேல் அமர்ந்த பனித்துளியாய், அவள் முகத்தில் அது தனியாகத் தெரிந்தது.

மருந்து வாங்கி வரச்சொல்லி நரேனிடம் அதைக் கொடுத்தாள், விந்தியா. "அண்ணிக்குப் போட்டு விடுண்ணா!" என்றதும், சட்டென்று அதைத் திறந்து நித்தியின் கன்னத்தில் மெதுவாகத் தடவிவிட்டான், நரேன்.

அவனுடைய முதல் தொடுகை அவளை விதிர்க்கச் செய்தது.

"இல்லை... நானே..." வார்த்தைகளுக்காக தவித்துத் திணறி விலகியவளை, அருகிலிருந்து பார்த்திருந்த நரேனுக்குள் பெரும் சலனம்!

சிறுவயதிலிருந்தே பழகி இருந்தாலும் இப்போது அவளின் அருகாமையும், அழகிய முகமும், சிலை போன்ற உருவமும் அவனை ஒரு கணம் பேதலிக்கச் செய்தன.



அவளிடம் மருந்தைக் கொடுத்துவிட்டு ஜன்னல் வழியே பார்வையைச் செலுத்தினான், அவன்.

ஆனால், அவளுடைய விலகல் அவனை மிகவும் பாதித்தது.

அன்றிரவு ஊருக்குத் திரும்பி வரும்போது, ஏதோ ஒருவித இனம் புரியாத இம்சையாய் நரேனுக்குள் அவள் நினைவு!

பிறகு, திருச்சி வந்தவுடன் வாழ்க்கை தன் போக்கில் சென்றது.

ஒரு நாள் கோவிலுக்குச் சென்றிருந்த நித்தி திரும்பி வரும்போதுதான், விந்தியாவை ஒரு இளைஞனுடன் காண நேர்ந்தது.

வெகு நாட்கள் பழகியவளைப் போல் அவனுடன் 'பைக்'கில் ஒட்டி அமர்ந்தபடி அவள் செல்ல, மனம் பதைத்துப்போனது.

அன்றிரவு சாப்பிட்ட பிறகு, "விந்தியா... நாம ரெண்டு பேரும் மொட்டைமாடிக்குப் போய் கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கலாமா?" மெதுவாகக் கேட்டாள்.

"ஓ... போகலாமே! என்னண்ணி இன்னிக்கு திடீர்னு... அப்புறம் அண்ணா 'ஓ'ன்னு அழப்போறாரு, என் பெண்டாட்டியைக் காணோமேன்னு?" குறும்புடன் கூறினாள்.

"அதெல்லாம் அழமாட்டாரு... நீ வா!"

அழைத்துச் சென்றவளின் முகத்திலிருந்த தீவிரத்தைப் பார்த்ததுமே, விந்தியின் மனம் விழித்துக்கொண்டது.

மாடிக்குச் சென்றதுமே, "அந்தப் பையன் யாரு விந்தி? மாமா-அத்தைக்கு தெரிஞ்சா என்னாகிறது? அவன் நல்லவனா... கெட்டவனான்னு உனக்கு ஏதாவது தெரியுமா? உங்கண்ணாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்! எனக்கு இப்போ உண்மையான பதில் வேணும்!" கண்டிப்பான குரலில் கேட்டாள்.

பெரும் தயக்கத்துடன் நிமிர்ந்தாள், விந்தியா.

"அண்ணி! யாருக்குமே தெரியாது. அவரு கிஷோர்... வடமாநிலத்துக்காரர். நாங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் விரும்புறோம். அதை நான் வீட்டில எப்படி... நீங்கதான் எப்படியாவது இதுக்கு உதவி பண்ணும்!"

அவளுடைய கைகளைப் பிடித்தபடிக் கேட்டாள்.



சிறிது நேர யோசனைக்குப் பிறகு, "சரி... பார்க்கலாம்! முதல்லே அந்தப் பையன் நல்லவனான்னு நேரில் பார்த்துப் பேசி நான் தெரிஞ்சுக்கிறேன்... அப்புறமா வீட்டில் சொல்லலாம்" ஒரு முடிவுடன் பதில் பேசினாள் நித்தி.

ஆனால், மறுநாளே பேயறைந்தது போல் வந்த விந்தியா, அவளிடம் தனியே பேசவேண்டுமென்றாள்.

மாடிக்கு அழைத்துச் சென்றதுமே, தன்னை பயத்துடன் கட்டிக்கொண்டு அழத் தொடங்கியவளை, மெதுவாக சமாதானப்படுத்தினாள், அவள்.

"என்ன விந்தி... ஏன் இப்படி அழறே? ஏதும் தப்பு நடந்திடலியே?" மனம் படபடக்கக் கேட்டாள்.

"அண்ணி! நான் தப்பு பண்ணிட்டேன். போன மாதத்துல ஒரு நாள்... தன்னோட வீட்டுக்கு கிஷோர், என்னை அழைச்சிட்டுப் போயிருந்தான். அவன் குடுத்த குளிர்பானத்தைக் குடிச்சதுமே மயக்கமா வந்தது... அப்புறம் கண் முழிச்சிப் பார்த்தப்பதான் வித்தியாசம் தெரிஞ்சுது. ஆனா, எனக்கு எதுவுமே நினைவில்லை! அவனும் எந்தத் தப்பும் நடக்கலைன்னு சத்தியம் செஞ்சான். ஆனா, இப்ப ஒரு 'கேசட்'டை வெச்சிட்டு என்னை மிரட்டுறான். அதிலே நான் அவனோடு அசிங்கமா இருந்ததெல்லாம் பதிவாகி இருக்குன்னு சொல்றான். எனக்கு ரொம்ப பயமா இருக்கு. வீட்டில் எல்லாருக்கும் தெரிஞ்சா நான் செத்துடுவேன்" குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

திடீரென்று, சுனாமிப் பேரலைகள் தன்னைச் சுருட்டிச் சென்றதைப் போல் உணர்ந்தாள், நித்தி.

பெரும் அதிர்ச்சியில் உறைந்துபோய் நின்றிருந்தவள், பிறகு மெல்ல அதிலிருந்து மீண்டாள்...

"அவன் செல்பேசி எண் இருந்தால் கொடு! நான் பேசிப் பார்க்கிறேன்... அவனுக்கு என்ன வேணுமாம்?" தவிப்புடன் கேட்டாள்.

"அம்பதாயிரம் பணம் கேக்கிறான் அண்ணி. இல்லைன்னா அந்த 'கேசட்'டை இங்கே வீட்டுக்கு அனுப்பிடுவேன்னு மிரட்டுறான். அப்பா, அம்மா, அண்ணனுக்கு தெரிஞ்சா அப்புறம் நான் உயிரோடவே இருக்கமாட்டேன்."

முகத்தை மூடிக்கொண்டு விசிக்கத் தொடங்கினாள்.



அப்போதுதான், நித்திக்குத் தன்னுடைய பெரியப்பா பையன் கிரியின் ஞாபகம் வந்தது.

அந்த ஞாயிற்றுக்கிழமைக்குள் பணம் வேண்டும் என்று கிஷோர் மிரட்ட, மறுநாளே கிரிக்கு 'போன்' செய்தாள் அவள்.

"கிரிண்ணா! நான் நித்தி பேசறேன்!"

"எப்படிம்மா இருக்கே? நரேன் நல்லா இருக்காரா? அப்புறம் வீட்டில எல்லாரும்..." அவன் ஆர்வத்துடன் விசாரித்தான்.

"எல்லாரும் நல்லா இருக்கோம். என் தோழி ஒருத்தி பெரிய பிரச்சினையில மாட்டிட்டுருக்கா! அவளை விரும்புறேன்னு சொல்லி, தன் வீட்டுக்கு வரவைச்சு குளிர்பானத்துல மயக்க மருந்து குடுத்து, சுய நினைவில்லாமலே அவ பெண்மையை அழிச்சி, அதை 'சிடி' எடுத்து வச்சிட்டு ஒருத்தன் மிரட்டுறானாம். அம்பதாயிரம் பணம் கொடுத்தாத்தான் அந்த 'கேசட்'டைத் தருவேங்கிறானாம். நீங்கதான் எனக்கு உதவி பண்ணனும்ணா... நாங்க உங்களைத்தான் நம்பியிருக்கோம்!" தவிப்புடன் கூறினாள்.

"சரி! நீ நேரா நம்ம வீட்டுக்கு இன்னிக்கு சாயந்தரம் வந்துடு. விபரமாய் பேசி ஒரு முடிவெடுத்துடலாம். அப்புறம் எல்லாரையும் விசாரித்தா சொல்லு! கவலைப்படாதே" என்று அவன் வைத்ததும், மனம் நிம்மதியானது.

ஆனால், விந்தியாதான் பெரிதும் கவலையாகத் தெரிந்தாள், பழைய துறுதுறுப்பும், கிண்டலும் மறைந்திருக்க- விழிகள் பயத்துடன் அலைபாய்ந்தன.

அவளுக்குத் தைரியம் கூறிவிட்டு மறுநாள் கல்லூரிக்குக் கிளம்பியவள், மாலையில் கிரியின் வீட்டிற்குச் சென்றாள்.

அவளுடைய பெரியம்மாவும், பெரியப்பாவும் ஒரு திருமணத்திற்காக வெளியூருக்குச் சென்றிருந்தனர்.

எல்லா விபரங்களையும் கூறியவள், அந்த பாதிக்கப்பட்ட பெண் விந்தியாதான் என்பதை மட்டும் மறைத்துவிட்டாள்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே கிரி, ஒரு திட்டத்தைக் கூறினான்.

"அந்தப் பொண்ணை சனிக்கிழமை அவனைப் பார்த்து பணத்தை தர்றேன்னு சொல்லச் சொல்லு நித்தி... அவன் சொல்லற இடத்துக்கு வரேன்னு சொல்லிட்டு அதை எனக்கு தெரிவிச்சிடு! நாங்க அவனை சுத்திவளைச்சி பிடிச்சுடுவோம்"

யோசனை கூறினான்.

உடனே பதறியவள், "இதிலே அந்தப் பொண்ணு பேரு வெளியே வராதில்லே? ஏன்னா, அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. அதனால பணத்தை எடுத்துட்டு வர்ற மாதிரி நானே வந்தாலும் வருவேன்... எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை... நரேனுக்குத் தெரியாமல் பார்த்துக்கலாம்" தர்மசங்கடத்துடன் கூறினாள்.

"உன் தோழிக்காக நீ இவ்வளவு ஆபத்தான காரியத்தில இறங்கணுமா நித்தி... உன்னை நம்பி அவன் எப்படி வருவான்? நீ தனியா வராதே... அந்தப் பொண்ணையும் அழைச்சிட்டு வா!"

"இல்லைண்ணா! உங்களுக்குப் புரியாது. நான் எப்படியாவது பேசி அவனை சம்மதிக்க வச்சிடுறேன். எனக்கு அவனை நல்லா அடையாளம் தெரியும். முன்னாடி ஒரு தடவை பார்த்திருக்கேன்... நீங்க மட்டும் சரியா திட்டம் போட்டு அவனைப் பிடிச்சிடுங்க."

கண்களாலேயே இறைஞ்சும் தங்கையைத் தட்டிக்கொடுத்தவன், தைரியம் கூறி அனுப்பி வைத்தான்.

மனம் முழுவதும் பரவிய யோசனையுடன் கிளம்பி வீடு வந்தாள், அவள்.

## 9

கிரியின் வீட்டிலிருந்து அவள் கிளம்பவே நேரமாகிவிட்டதால், வீட்டிற்கு வரும்போதே, நரேன் அலுவலகத்திலிருந்து வந்திருந்தான்.

"ஏம்மா இவ்வளவு நேரம் ஆச்சி? நான் பயந்துட்டே இருந்தேன். விந்தியாவும் உன்னைக் காணாம பதைபதைச்சிப் போயிட்டா!"

ரேவதி கூறியபோது, பதற்றப்பட வேண்டியவன் கவலையின்றி அலட்சியமாக அமர்ந்திருக்கிறானே என்ற ஆயாசம் மனதில் வந்தது.

"இல்ல அத்தை... என் தோழியைப் போய்ப் பார்த்துட்டு



வந்தேன்" தயக்கத்துடன் கூறினாள், நித்தி.

ஆனால், ஓரக்கண்ணால் அவளையே பார்த்துக்கொண்டிருந்த நரேனுக்கோ, அவளைக் கண்டதும் பெரும் நிம்மதி!

இத்தனை நேரமாகியும் அவள் வீடு திரும்பவில்லையே என்ற தவிப்பு கோபமாக மாறியது.

"அம்மா! இனிமே தாமதமாச்சுன்னா நம்ப வீட்டில் 'போன்'னு ஒண்ணு இருக்கில்லே... அதுக்கு பேசி சொல்லச் சொல்லுங்க!"

சுள்ளென்று கூறிவிட்டு எழுந்து சென்றவனையே பார்த்திருந்த நித்திக்குள், பெரும் பயப் பிரவாகம்!

தன்னால்தானே இந்தப் பிரச்சினை என்று மிரண்டுபோய் நின்றிருந்த விந்தியாவிடம் ஒரு தைரியமான புன்னகையை பதிலாக அளித்தவள், நரேனைத் தேடித் தங்கள் அறைக்குச் சென்றாள்.

புத்தகம் எதையோ படிப்பதைப் போன்ற பாவனையுடன், கட்டிலில் அவன் அமர்ந்திருந்தான்.

"சாரி! இவ்வளவு தாமதமாகும்னு தெரியாது. இல்லைன்னா ஒரு 'போன்' செஞ்சிருப்பேன்" குற்றவுணர்வுடன் கூறினாள், நித்தி.

அலட்சியமாக உதட்டைப் பிதுக்கி தோள்களைக் குலுக்கினான், அவன்.

"அம்மாதான் ரொம்பக் கவலைப்பட்டாங்க. அதனால தான் சொன்னேன்" விட்டேத்தியாகக் கூறிவிட்டுத் திரும்பிக் கொண்டான்.

மனம் ஓய்ந்துவிட– "அதானே?" சட்டென்று வார்த்தைகள் வந்துவிட்டன.

சீற்றத்துடன் திரும்பியவன், "அப்படின்னா என்ன அர்த்தம்?" என்றான், அழுத்தமான குரலில்!

"இல்லை... நான் வரலைன்னு நீங்க எனக்காக கவலைப்படப்போறீங்களா என்ன? அதைச் சொன்னேன்."

"அப்படியே கவலைப்பட்டாலும் மகாராணி சீக்கிரம் ஓடிவந்து அணைச்சி என்னை சமாதானப்படுத்தப் போறீங்களாக்கும்?"

நக்கலாக வந்த வார்த்தைகள் மனசைக் கசக்கிப் பிழிய, கண்ணீர் வந்து இமையோரம் எட்டிப் பார்த்தது.



கரித்த விழிகளை அடக்கியவள், உடனே தோட்டத்திற்குச் சென்றாள்.

கோடைகால மேகங்கள், வான்வெளியை முத்தமிட முயன்று தோற்றுக்கொண்டிருந்தன.

ஓடையாய் அவனிருக்க– கரையாக முடியவில்லை என்றாலும், அங்கு சிறகுவிரிக்கும் ஒரு நாணலாகவாவது தான் இருக்கவேண்டுமென்று விரும்புவதை, அவன் புரிந்துகொள்ளவில்லையே என்று ஆயாசம் வந்தது.

அன்றிரவு விந்தியாவிடம் தனியே பேசி விபரம் கூறியபோது, அவள் மிகவும் பயந்துபோனாள்.

"எனக்கு பயமா இருக்கு அண்ணி! நான் தப்பு பண்ணிட்டு அதுலே உங்களை பணயம் வைக்க எனக்கு மனசு வரலே! நானே போறேன்" கண்ணீருடன் கூறினாள்.

"அதெல்லாம் வேணாம். நான் வருவேன்னு அவன்கிட்ட சொல்லு. எங்கே வரணும்னு கேளு! ஒண்ணும் பயமில்லை. கிரி அண்ணா என்கூடவே வரேன்னிருக்காரு. நீ கல்யாணம் ஆகாத பொண்ணு! பின்னாடி பிரச்சினை ஆயிடும்" அவளை ஆறுதல்படுத்தினாள்.

மறுநாளே கிஷோரிடம் பேசிய விந்தியா, தன் அண்ணிதான் பணத்தை எடுத்துக்கொண்டு வருவார்கள் என்று கூற, அவனும் சம்மதித்து, ஒரு ஓட்டலுக்கு வரும்படிக் கூறினான்.

எல்லாவற்றையும் அவள் நித்தியிடம் கூற, கிரி அதை மையமாக வைத்து கிஷோரைப் பிடிக்கத் திட்டமிட்டான்.

சனிக்கிழமையை எதிர்பார்த்து அவர்கள் அனைவரும் காத்திருக்க, அந்த நாளும் வந்தது.

அன்று மதியம் கல்லூரிவிட்டதும் நித்தி வாசலுக்கு வந்தபோது, கிரி ஒரு பெட்டியுடன் அவளுக்காகக் காத்திருந்தான்.

அதை வாங்கிக்கொண்டு அவன் கூறியபடி அவள் ஒரு ஆட்டோவில் கிளம்பிச் செல்ல, ஒரு காரில் அவளைப் பின்தொடர்ந்தனர் போலீஸ் அதிகாரிகள்.

அந்த ஓட்டலுக்குச் சென்று, அவன் கூறியிருந்த மேசை எண்ணைப் பார்த்து அமர்ந்தபோது– அவளுக்கு பயமும்,



பதற்றமும் நிறைந்திருந்தன.

சிறிது நேரத்தில் எதிரில் வந்து அமர்ந்தவன், ஒரு பையை மேசைக்கு அடியில் வைத்துவிட்டு, "பணம் சரியாக இருக்குதா?" அடிக்குரலில் கேட்டான்.

நித்தி பதைபதைப்புடன் தலை அசைத்தபடி பெட்டியை வைத்துவிட்டு, அந்தப் பையுடன் எழுந்து திரும்பியபோது, அவள் இதயமே ஒருகணம் நின்றுபோனது.

நான்காவது மேசையில் அமர்ந்திருந்த நரேன், அந்த நிமிடம் நம்ப இயலாத வெறுப்புடனும், கோபத்துடனும் அவளையே வெறித்துக்கொண்டிருந்தான்.

ஒரு கணம் சீதையைப் போல் தீக்குளித்து, தன்னை நிரூபித்துவிடலாமா என்று நித்திக்குத் தோன்றும்போதே எழுந்தவன், அவளைப் பற்றி இழுத்தபடி வெளியில் வந்தான்.

பதற்றத்துடன் அவள் திரும்பிப் பார்த்தபோது, கிரியும் மற்ற அதிகாரிகளும் கிஷோரைப் பின்தொடர்வது தெரிந்தது.

"அடிப் பாவி, துரோகி! இவன்தான் உன் காதலனா? நீ இவ்வளவு கேவலமானவள்னு நான் நினைக்கவே இல்லை. ஏன் எனக்கு மட்டும் இப்படி? சே!" என்றபடி அவளை காருக்குள் தள்ளினான்.

அந்தப் பையை மட்டும் விடாமல் நெஞ்சுடன் அணைத்துக் கொண்டவளையே வெறுப்புடன் பார்த்தவனுக்குள், எரிமலையாய் ஒரு தீப்பிழம்பு!

பெண்களே மோசக்காரிகள் என்ற எண்ணம் மனதில் ரணமாகி இருந்ததை நித்தியின் வரவும், அவள் செயல்களும் புண்ணுக்குப் பூசிய புனுகாய் ஆற்றியிருக்க, இன்று அதில் பெரும் அடி!

கடைசியில் இவளும் பொய்த்துப்போனாளே என்று நினைக்கும்போதே நெஞ்சம் தீப்பிடித்து எரிந்தது.

கனலாய் எழுந்த கோபம் விழிகளில் சுடராய் பரவ– வேகமாக காரை ஓட்டினான்.

வீட்டு வாசலில் காரை நிறுத்தியபோது, உடனே இறங்கி உள்ளே சென்றாள், நித்தி.

ஆவலுடன் வெளியில் வந்த விந்தியா– நரேனின் கோபத்தையும், நித்தியின் முகத்தையும் பார்த்து அப்படியே

உறைந்து நின்றுவிட்டாள்.

அவன் உள்ளே வந்ததும், நித்தியை தங்கள் அறைக்கு இழுத்துச்சென்றான்.

"சொல்லு... யாருடி அவன்? உன் முன்னாள் காதலனா? அவனுக்கு பெட்டியில் என்ன எடுத்திட்டுப் போனே? சே! பெண்கள் எல்லாருமே இப்படின்னு நான் நினைக்கலை... அம்மாவையும், விந்தியையும் வைச்சு வேற மாதிரி எடை போட்டிருந்தேன். எல்லாம் என் விதி!"

உறுமியவன், அவள் பதில் பேசாமலே இருக்கவும் சட்டென்று அவளை அறைந்து கீழே தள்ளிவிட்டான்.

கணவன்– மனைவி பிரச்சினை என்று அறை வாசலிலேயே நின்றிருந்த ரேவதி ஓடிவந்து அவளைத் தாங்கிக்கொண்டாள்.

"சீ! நீயும் ஒரு மனுஷனா? நரேன்– எனக்கு இப்படி ஒரு பிள்ளை பிறந்திருக்கவே வேணாம்... நித்தி மேல அப்படி என்ன கோபம், உனக்கு?" என்றபடி நித்தியை அணைத்துக்கொண்டார்.

ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க விழித்தபடி சிறு குழந்தையாய் நின்றிருந்தவளை அறைந்துவிட்டோமே என்ற கழிவிரக்கம் முதலில் உறுத்தியது.

ஆனால், அவள் தன் தாயின் மீது பாதுகாப்பாய் சாய்ந்து ஒடுங்கியதும், அவனுக்குள் ஒருவித வன்மம் வந்தது.

தன்னிடம் மட்டுமே அடைக்கலம் தேடி வரவேண்டியவள், எப்போதுமே தன்னை விலக்கி நிறுத்தியது ஒரு ஆளுமை உணர்வுடன் ரவுத்திரமாய் பரவ, அந்த வார்த்தைகளைக் கூறிவிட்டான்.

"அம்மா! அவ என்ன தப்பு செஞ்சிருக்காள்னு தெரியாம ரொம்பக் கொஞ்சாதீங்க... மனசில எவனையோ சுமந்துகிட்டு என்கூட பொய்யா ஒரு வாழ்க்கை நடத்தி இருந்திருக்கா. இதுக்கு அந்த சிவப்புவிளக்கு பெண்கள் எவ்வளவோ மேல்... அவங்களைவிடக் கேவலமான இவ... இதுக்கு ஓடிப்போன அந்தத் தாராவே எவ்வளவோ மேல்."

"......."

"இவ முகத்துல முழிக்கவே எனக்குப் பிடிக்கலை. உங்களுக்கு நான் முக்கியமா? இல்லை, இவ முக்கியமா? முதல்ல இவளை



வெளியே போகச்சொல்லுங்க! வாழறதுக்கு, எப்படி வேணா சம்பாதிக்கிற அவங்களே பரவாயில்ல."

ஒரு கணம் நித்தியின் உலகம் இருட்டிப்போனது. நடுக்கத்தில் கையிலிருந்த பை நழுவிக் கீழே விழ, உறைந்துபோய் நின்றிருந்தாள்.

அவனுடைய வார்த்தைகள் உண்டாக்கிய வெம்மையில், மெழுகின் உருகலாய் இதயம் உருகி கண்ணீராய் வழியத் தொடங்கியபோது, சட்டென்று விந்தியாவின் குரல் கேட்டது.

"அண்ணா! தப்பு பண்ணினது நான்– அண்ணியை ஒண்ணும் சொல்லாதே! இதுக்குமேல என்னால் நீ பேசுறதைக் கேட்டுட்டு சும்மா இருக்க முடியாது."

அவள் முடிக்கும் முன்பே, நித்திலா என்ற சிலைக்கு உயிர் வந்தது.

"விந்தியா... வேண்டாம் நீ எதுவும் சொல்லாதே. பழி என்னோடு போகட்டும்... நீ வாழவேண்டிய பொண்ணு!" வேகமாகத் தடுத்தாள்.

ஒன்றும் புரியாமல் சங்கரனும், ரேவதியும் சிலையாக நின்றிருந்தனர்.

நான் வாழவேண்டிய பொண்ணு சரி. அப்ப நீங்க? எனக்காக தப்பே செய்யாம நீங்க உங்க வாழ்க்கையைத் தொலைக்கணுமா? போதும் அண்ணி இதுவரைக்கும் நான் எல்லாத்தையும் மறைச்சு வைச்சு புழுங்கி செத்துட்டிருந்ததெல்லாம்" என்றவள், நரேனிடம் திரும்பினாள்.

"அண்ணா! இவ்வளவு நேரம் நீ சொன்னே பாரு தப்புத் தப்பா– அதுக்கெல்லாம் காரணம் நான்தான். என்னைத் திட்டு! அண்ணி, என்னைக் காப்பாற்ற வந்த தெய்வம் மாதிரி– அவங்களை எதுவும் சொல்லாதே."

இரு கைகளையும் கூப்பியபடி சரிந்து அமர்ந்து அழத் தொடங்கினாள், விந்தியா!

நரேனுடைய இதயம், சுக்கல் சுக்கலாய் உடையத் தொடங்கியது.

தான் செய்த தவறின் அளவு, இமாலயச் சிகரமாய் உயர்ந்து– அவன் முன் கேலிச்சித்திரமாய் நின்றது.

# 10

மூன்று பேரும் சிலையாய் உறைந்து நின்றிருந்தனர்.

பெரிய இடியொன்று தலையில் விழுந்துவிட, அதைத் தாங்கிய இடிதாங்கியாய் நின்றிருந்த நரேனின் விழிகள் மேலும் சிவந்தன.

கைமுட்டிகளின் இறுக்கத்தில் நரம்புகள் புடைக்க, இரை தேடும் புலியைப் போல் நின்றிருந்தான், அவன்.

"என்னடி சொல்றே?"

ஓடிவந்து அவளை அணைத்துக்கொண்ட ரேவதியிடம் விம்மியபடி எல்லாவற்றையும் கூறத் தொடங்கினாள், விந்தியா.

அவள் பேசி முடிக்கும்வரை, அங்கு ஒரு அசாத்திய மவுனம் மட்டுமே குடிகொண்டிருந்தது.

அவள் முடித்ததும்,அருகிலிருந்த கட்டிலில் நரேன் தளர்ந்துபோய் அமர– ரேவதியும், சங்கரனும் உடைந்துபோயினர்.

அவள் கூறிய விஷயம் மனதில் பெரும் வலியை ஏற்படுத்த– தாங்கமுடியாத சோகமும், வேதனையும், தவிப்பும் அவர்களை ஒடித்துப்போட்டன.

கண்ணீர் அருவியாய் பெருக, உணர்வுகள் மரத்துப்போன நிலையில் சிறிது நேரம் 'திக்'பிரமைப் பிடித்து அமர்ந்திருந்தார், ரேவதி.

பிறகு,விந்தியாவை அணைத்து தன் மடியில் சாய்த்துக்கொண்டு அவள் தலையை மெதுவாக வருடத் தொடங்கினாள்.

சங்கரனும் செய்வதறியாது தவிப்புடன் நின்றிருக்க,திடீரென்று எழுந்து மருமகளிடம் சென்றார், ரேவதி.

"நித்தி! யாருமே செய்யத் துணியாத ஒரு காரியத்தை தைரியமா நீ செஞ்சிருக்கே... நரேன் உன்னைத் தப்பா நினைச்சும், விந்தியைக் காட்டிக்கொடுக்காத உன் பெருந்தன்மை யாருக்குமே வராது. ரொம்ப நன்றிம்மா!"

"மருமகங்கிறவ ஒரு குடும்பத்துக்கு நல்ல பேரை எடுத்துத்தரணும்னு சொல்லுவாங்க. ஆனா, எங்க வீட்டுக்கு வந்த தேவதைம்மா நீ!" அழுதபடி அவளை அணைத்துக்கொண்டார், ரேவதி.



அதுவரை பனிச் சிற்பமாய் உறைந்து நின்றிருந்த நித்தியிடம் ஓடிவந்தாள், விந்தியா.

"ஏன் அண்ணி! எனக்காக இவ்வளவு கஷ்டப்பட்டீங்க? பழி சுமந்தீங்க?" தவிப்புடன் கேட்டாள்.

ஒரு விரக்திப் புன்னகையுடன் நிமிர்ந்தாள், நித்தி.

"ம்... தெரியலை! இது என் வீடுன்னு நினைச்சேன், விந்தி! நீங்க எல்லாரும் என் சொந்தம்னு நினைச்சேன். ஆனா, அது தப்போ?"

விழிகளில் கண்ணீரைச் சுமந்து கேட்டவளை, ஏறிட்டுப் பார்க்கமுடியாமல் தலைகுனிந்து அமர்ந்திருந்தான், நரேன்.

"தயவுசெய்து தப்பா எடுத்துக்காதீங்க அண்ணி! அண்ணா உங்க மேல இருந்த அதிகமான அன்பினால்தான் அப்படி சந்தேகப்பட்டுட்டாரு!" விந்தியா கண்ணீருடன் இறைஞ்சினாள்.

"ஹூம்! அன்பா? உனக்கு எதுவுமே தெரியாது விந்தி! நான் கொஞ்ச நாள் எங்க அம்மா வீட்டுக்குப் போய் இருந்துட்டு வரேன் ஆன்ட்டி! பரீட்சை வருது இல்லையா? அதுக்காக படிக்க வந்தேன்னு சொல்றேன். எனக்கும் ஒரு மாற்றம் வேணும் போலிருக்கு" ஒரு முடிவுடன் கேட்டாள், நித்தி.

"தாராளமா நீ போய் தங்கிட்டு வாம்மா! ஆனா, எங்களை எல்லாம் வெறுத்திடமாட்டியே?" தவிப்புடன் கேட்டார், ரேவதி.

"என்னால அதுமாதிரி யாரையும் சட்டுன்னு வெறுக்க முடியாது, ஆன்ட்டி!" கூறிவிட்டுத் தன் துணிகளை அவள் அடுக்கத் தொடங்க– அவர்களைத் தனியே விட்டுட்டு மூவரும் வெளியில் சென்றனர்.

பிரிதலைப் பற்றி எண்ணும்போதே, திருமண நேரத்தின் சுவாச நெருக்கத்தில் பகிர்ந்துகொண்ட உணர்ச்சிகளில்லாத அவனது விழிகளின் மவுனமே நினைவில் வந்தது.

தகித்த மனதுடன் வறண்டிருந்த விழிகளில் அந்தக் கனல் விரவிப் பரவ, அவசரமாகத் துணிகளை அடுக்கிக்கொண்டிருந்தவளிடம் மெதுவாக வந்தான், நரேன்.

"மன்னிச்சிடு நித்தி! லட்ச முறை... கோடி முறை மன்னிப்புக் கேட்கிறேன். நான் உன்னைத் தப்பா புரிஞ்சிக்கிட்டேன்..."

அவள் தோள் மீது தன் கையை அவன் பதிக்க, சட்டென்று விலகினாள், நித்தி.

"தயவுசெய்து என்னைத் தொடாதீங்க! ஒரு விலைமகளைத் தொடுற பாவம் உங்களுக்கு வேணாம்."

ஆணித்தரமான குரலில் கூறியவள், உடனே பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

"என்னை மன்னிக்கவேமாட்டியா நித்தி?"

உடைந்துபோய்க் கேட்டவனுக்கு, அவளுடைய மவுனமே பதிலாய் கிடைத்தது.

நரேன் காரில் அழைத்துக்கொண்டு போய் அவளுடைய வீட்டில்விட வந்தான்.

காரில் செல்லும்போது, இருவருக்கு இடையேயும் கண்ணுக்குத் தெரியாத ஒரு மாயத்திரை நெய்யப்பட்டிருந்தது.

அவ்வப்போது ஓரக்கண்ணால் அவளையே வருடிக் கொண்டிருந்த நரேனின் பார்வையில் பெரும் பரிதவிப்பு!

வீட்டிற்குச் சென்றதும் அவர்களை வரவேற்றார், காஞ்சனா.

"வாங்க... இப்பதான் அம்மா 'போன்' பண்ணினாங்க. நித்திக்கு பரீட்சை நேரத்துல அங்கே இருந்தா சரியாப் படிக்க முடியாதுன்னு நீங்க அவளை இங்கே கொண்டுவந்து விடப்போறதா சொன்னாங்க. எனக்கும் ரொம்ப மகிழ்ச்சி! இன்னிக்குதான் இவங்கப்பாவும் ஒரு வாரம் வெளியூருக்குக் கிளம்பினாங்க. சாப்பிட்டுட்டுப் போகலாம் மாப்பிள்ளை" ஆவலுடன் கூறினார்.

"இல்லை அத்தே!பசிக்கலை. இன்னொரு நாள்... ம்... ஞாயிற்றுக்கிழமை வரேன் நான் கிளம்பட்டுமா?"

நித்தியையே ஊடுருவியபடி அவன் கேட்க,காஞ்சனாமட்டும் 'சரி' என்றார்.

நித்தியிடம் எந்தப் பதிலும் இல்லை.

அவளுடைய பெட்டியை வாங்கி உள்ளே வைத்த காஞ்சனா, "மாப்பிள்ளையைப் போய் வழியனுப்பிட்டு வா, நித்தி" என்று அனுப்பி வைத்தார்.

மெதுவாக பின்னே சென்ற நித்தி– அவன் காரில் ஏறியதும் திரும்ப– சட்டென்று அவளுடைய கையைப்



பிடித்துத் தடுத்தான்.

"நீ நம்ப வீட்டுக்கு எப்போ வருவே நித்தி?" மென்மையான குரலில் கேட்டான்.

"ம்... இங்கே கிஷோர் மாதிரி யாராவது கிடைக்கிறாங்களான்னு பாக்கணும்... நீங்க சொன்ன மாதிரி நிறைய சம்பாதிக்கணும்... அப்புறமா வரேன்."

அவனுக்கு வலிக்க வேண்டும் என்றே கூறிய வார்த்தைகள், அவன் வேர் வரைப் பாய்ந்து ரணமாகத் தாக்கின.

அவன் விரக்தியுடன் நிமிர்ந்தான்.

"என் நித்தி தூய்மையானவள், ஒரு தேவதைன்னு எனக்குப் புரிஞ்சிடுச்சி! என்னைக் காயப்படுத்தணும்னு சொன்னாலும், உன் வாயால இனிமே தயவு செஞ்சு இப்படி சொல்லாதே நித்தி..." என்றவன் விருட்டென்று காரை ஓட்டிச் சென்றான்.

அவன் செல்கிற வேகத்திற்கு விபத்து எதுவும் நடக்காதிருக்க வேண்டுமே என்ற வேண்டுதலும், தன் வார்த்தைகளால் தனக்குள்ளேயே எழுந்த சுயவெறுப்பும் மனதில் போட்டியிட– உள்ளே வந்தாள், நித்தி.

வந்தவுடனே அவளைப் பிடித்துக்கொண்டார், காஞ்சனா.

"நித்தி, நரேன் உன்கிட்ட ஆசையா இருக்காருதானே! மத்தவங்களெல்லாம்?" ஆர்வத்துடன் விசாரித்தார்.

"ரொம்ப ஆசையா இருக்காங்கம்மா... எனக்கு சாயந்திரத்தில இருந்தே தலைவலி... கொஞ்ச நேரம் உங்க மடியில படுத்துக்கட்டுமா?"

மெதுவாகக் கேட்டவள், தாய் மடியின் கதகதப்பில் தன் சோகங்களை தற்காலிகமாக மறந்து தூங்கத் தொடங்கினாள்.

அப்போதும், உறக்கம் திறக்கும் சாவியாய்... அவன் நினைவுகள் உள்ளே கனவுகளாய்!

**ம**றுநாள் காலையில் எழுந்ததும், பழகிய தோட்டமும் காலைச் சுற்றி சுற்றி வட்டமிட்ட நாய் ரோவரின் அன்பும், மனோரஞ்சித மரத்திலிருந்து வந்த இனிய மணமும் சுகமாய் மனதில் நிறைந்தன.

நரேனின் அன்பிற்காக, இந்த ஆறு மாத காலமாக அவன் பின்னால் இப்படித்தானே நாய்க்குட்டியாக சுற்றி வந்தோம்

என்பதை எண்ணும்போதே மனம் வறண்டுபோனது.

ஊரிலிருந்து பேசிய அப்பாவின் பாசமும், அவளுக்குப் பிடித்ததாகவே எல்லாம் செய்து அனுசரணையாக கவனித்துக்கொண்ட தாயின் அரவணைப்பும், இருவேளையும் போனில் பேசிய விந்தியின் அன்பும் அவளை உடைந்து போகாமல் காத்தன.

பிறகு, படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினாலும், சிறுவயதிலிருந்தே மனதில் புரிந்துகொண்டிருந்த காதல் எனும் தவம், நரேனின் நினைவுகளை மீண்டும் மீண்டும் உயிர்ப்பிக்கத் தொடங்கின.

அவன் பேசியது தவறுதான். ஆனால், தன்னிடம் கணவன் என்ற எந்த உரிமையும் எடுத்துக்கொள்ளாதவன், என்ன உரிமையில் அறைந்தான் என்ற கேள்வி முள்ளாய் குத்தியது.

நித்தியை விட்டுவிட்டு வந்தபிறகு நரேனும் தங்களுடைய அறையில் அமர்ந்து இதையே யோசித்துக்கொண்டிருந்தான்.

அவள் சென்று வெகுநேரமாகியும் இதயச் சங்கீதமாய் அவளுடைய வளையல் சப்தமும், சிரிப்பொலியும் செவிகளில் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

தன் வார்த்தைகள் அவளை எவ்வளவு காயப்படுத்தி இருக்கும் என்பதை நினைக்கும்போது– தன் மீதே கோபமும், வெறுப்பும் வந்தன.

எதையோ பெரிதாக சாதித்துவிட்ட நிம்மதி தொழிலில் கிடைத்தாலும், யாருமற்ற அந்தத் தனிமை இரவில் தன் ஆதிக்கத்தனத்தை வீசியெறிந்துவிட்டு, அவள் மடியில் சாய்ந்து அழவேண்டும் போல் ஒரு உணர்வு!

அன்று ஒரு நிமிடம்கூட அவன் உறங்கவில்லை.

எதிலும் பிடிப்பின்றி தனக்குள்ளேயே இறுகிப் போய் இருந்தாலும், மறுநாள் விந்தியாவைத் தனியே அழைத்துப் பேசினான்.

ரேவதி இடிந்து போயிருக்க, அவளும் கல்லூரிக்குச் செல்லாமல் தன் அறையிலேயே முடங்கிக் கிடந்தாள்.

நித்தியின் பிரிவும், விந்தியின் நிலைமையும் நரேனின் மனதிற்குள் பெரும் சோர்வைத் தந்திருந்தன.



விந்தியாவும் நடந்ததை எல்லாம் விரக்தியுடன் கூறினாள்.

தன் மனைவி எவ்வளவு துணிச்சலாக இப்படியொரு காரியத்தை, அதுவும் தன் தங்கைக்காக செய்திருப்பாள் என்று நினைக்கும்போதே மனம் ஒருகணம் ஆடிப்போனது.

'அவளுக்கு ஏதாவது நேர்ந்திருந்தால், நான் எப்படித் தாங்கி இருப்பேன்?' என்று யோசித்தான். விந்தியாவின் எதிர்காலமும், ஒரு விடை தெரியா கேள்விக்குறியாய் அவன் கண்முன் நின்றது.

## 11

மறுநாள் மாலையே கிரிதரைத் தேடிப் போனான், நரேன்.

நரேனைக் கண்டதும் ஆவலுடன் வரவேற்ற கிரியின் குடும்பத்தினர், நித்தி பற்றி விசாரித்தனர்.

"அவ இப்ப அவங்கம்மா வீட்டில இருக்கா... பரீட்சை நேரமாச்சே! இங்கே இருந்தா படிக்கிறது கஷ்டம்... அதான்!" சிறுமுறுவலுடன், கூறினான், நரேன்.

சிற்றுண்டி சாப்பிட்டபிறகு, "சரி, வாங்க... உங்களோடு கொஞ்சம் பேசணும்" என்றபடி அவனைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்றான், கிரிதர்.

உள்ளே சென்றதும் அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டான், நரேன்.

"என் தங்கச்சி வாழ்க்கையையும், எங்க குடும்ப கவுரவத்தையும் நீங்களும், நித்தியும் காப்பாத்திட்டீங்க... ரொம்ப நன்றி கிரி!" என்றதும் அவன் முகத்தில் பெரும் அதிர்ச்சி!

"நரேன்! இதுலே பாதிக்கப்பட்டது நம்ம விந்தியாவா? நித்தி, அவளோட தோழின்னுதானே சொன்னா!"

அதிர்ச்சியும், வேதனையுமாக அவன் கேட்டபிறகுதான், நித்தி எவ்வளவு சாமர்த்தியமாக செயல்பட்டிருக்கிறாள் என்று புரிந்து, குற்ற உணர்வுடன் விழித்தான், நரேன்.

"நாங்க அவனைக் கைது பண்ணிட்டோம்... அவன்கிட்ட இருந்த 'சிடி'யையும் கைப்பற்றிவிட்டோம். நிறைய பெண்கள்கிட்ட விளையாடி இருக்கான்... போதைப் பொருள் கடத்துன குற்றம் வேற இருக்கிறதால, நிறைய வழக்கு அவன்மேல வரும்... அவனால

சுலபத்துல வெளியே வரமுடியாது. நீங்க கவலைப்படாதீங்க!"

ஆறுதலாகக் கூறிய கிரியின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"கிரி! தயவுசெய்து நீங்க இதைப்பத்தி வெளியே..."

அவன் முடிக்குமுன்பே– "நீங்க கவலைப்படாதீங்க... என் மூலமா இது வெளியில யாருக்கும் தெரியவராது... தைரியமாப் போங்க. கூடிய சீக்கிரமே ஒரு நல்ல முடிவோடு நான் உங்க வீட்டுக்கு வர்றேன்" தைரியம் கூறி அனுப்பினான்.

தான்கூட யோசிக்கவில்லையே, தன் தங்கைக்காக நித்தி எவ்வளவு யோசித்திருக்கிறாள் என்ற பிரமிப்பு மனதில் படர்ந்தது.

அவள் இங்கு இருந்தபோதே மெல்ல மெல்ல அவளை நேசிக்க தொடங்கி இருந்தவன், அவளைத் தன் உயிராய் சுவாசிக்க நினைத்த நேரத்தில் அவனுடைய வார்த்தைகள் சீனச் சுவராய் பிரித்துவிட்டது.

நினைவுகள் மட்டுமே சுகம் என்று நினைத்தாளோ... அதை மட்டும் பரிசளித்துவிட்டு சென்றுவிட்டாளே என்று மனதிற்குள் பலப்பல ஏக்கங்கள்!

சிறுவயதிலிருந்து அவளுடன் பழகிய அந்த நாட்கள் வசந்தத்தின் வனப்பாய் மனதில் உலா வந்தன. நேசத் தளிர்களைத் துளிர்க்கச் செய்ய, பிரிவின் சுமை கனமாய் மனதை அழுத்தியது.

நேரே காரை நித்தியின் வீட்டிற்கு செலுத்தினான்.

நித்தி என்றாவது ஒரு நாள் தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாளா? என்ற தவிப்பும், துயரமும்!

அழைப்பு மணியை அழுத்தியவுடன் திறந்த காஞ்சனாவுக்கு– மாப்பிள்ளையைக் கண்டதும் மிகுந்த மகிழ்ச்சி!

"வாங்க வாங்க! நித்தி பக்கத்துல இருக்கிற கோவிலுக்குப் போயிருக்கா. உக்காருங்க!" மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

"எந்த கோவிலுக்கு அத்தை...?"

விபரம் தெரிந்துகொண்டவன், "நான் போய் அவளை அழைச்சிட்டு வந்திடுறேன்" என்றபடி உடனே கிளம்பி விட்டான்.

கோவிலுக்குச் சென்று அவளைத் தேடியபோது, அம்மன் சந்நதியில் அவள் நிற்பது தெரிந்தது.



நித்தியையே இமைக்காமல் பார்த்தபடிச் சென்றவன், அவளருகில் நெருங்கி நின்றான்.

இயல்பான எச்சரிக்கையுடன் நகர்ந்தவள் நிமிர்ந்தபோது, நரேனை அங்கு நிச்சயமாக எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவள் விழிகள் சொல்லாமல் சொல்லின.

அவனும் எதுவும் பேசாமல், அமைதியாகவே அம்மனை தரிசித்தான்.

இருவருமாக பிரகாரத்திற்கு வந்தனர்.

"ஒரு நிமிடம் நித்தி! நான் உன்கூடக் கொஞ்சம் பேசணும்... இப்படி உக்காந்து பேசலாமா?" மெதுவாகக் கேட்டான்.

யோசனையுடன் தலையசைத்துவிட்டு தள்ளி அமர்ந்தவளின் பார்வை, கோவில் கோபுரத்தின் மீது இருந்தது.

"நன்றி நித்தி! நீ விந்தியாவோட பெயரைச் சொல்லாமலே, கிரி மூலமா அவளைக் காப்பாற்ற ஏற்பாடு செஞ்சிருக்கே... ஆனா, நான்தான் அவசரப்பட்டு கிரிகிட்ட சொல்லிட்டேன்."

சட்டென்று திரும்பிய நித்தியின் பார்வை, குத்தீட்டியாய் அவனைத் துளைத்தது.

"கிரி புரிஞ்சிக்கிட்டாரு... தன்னால எந்தப் பிரச்சினையும் வராதுன்னாரு... நன்றி... கோடி நன்றின்னு சொல்லணும் போலிருக்கு! விபரம் புரியாம உன்னை ரொம்ப நோகடிச்சிட்டேன்– இல்லே?" எனும்போதே நித்தி வேகமாக எழுந்தாள்.

"நேரமாயிடுச்சி, நான் கிளம்புறேன்... படிக்கணும்."

அவள் வேகமாக வெளியே செல்ல, இயலாமையுடன் அவளையே பார்த்திருந்த நரேனுக்குள் பெரும் அதிர்வு!

எப்படி இவளை சமாதானப்படுத்தப் போகிறோம் என்று புரியாமல், ஓய்ந்துபோனது மனது.

சிறிது நேரம் அங்கேயே அமர்ந்திருந்தவன், வெளியே வந்தபோது அந்தத் தெருவே வெறிச்சோடியிருந்தது.

எதிர்கால நிகழ்தலின் நிச்சயம் ஏதுமின்றி, வாழ்க்கைப் பாதை நீண்டுகொண்டிருந்தது.

தியாகு ஊரிலிருந்து வந்திருக்க, நித்திக்குப் பரீட்சை நடந்துகொண்டிருந்தது.

விந்தியா, மனம் தேறி கல்லூரிக்கு செல்லத் தொடங்கி

இருந்தாள்.

ரேவதியும், சங்கரனும்தான் மிகவும் உடைந்து போயிருந்தனர்.

ரேவதி, வெளியில் செல்வதற்கே பயந்து தனக்குள் ஒடுங்கியிருந்தார்.

நித்தியிடமிருந்து தினமும் 'போன்' வந்துவிடும்... விந்தியும் பேசுவாள்!

முன்பிருந்ததற்கு இப்போது விந்தியாவின் மனம் எவ்வளவோ தேறி இருந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை, எதிர்பாராத விருந்தாளியாய் கிரிதரும், அவனுடைய அப்பா– அம்மாவும் நித்தியின் வீட்டிற்கு வந்திருந்தனர்.

எல்லோருமாக அரட்டை அடித்து முடித்து சாப்பிட்டபிறகு, கிரியின் அம்மா வனிதா மெதுவாக தொடங்கினார்.

"காஞ்சனா! கிரிக்கு வரன் பாத்துட்டு இருந்தோம் இல்லையா? அவன் ஒரு பெண்ணை விரும்புறதா சொல்றான். அதான் உங்ககிட்ட சொல்லி பேசச் சொல்லலாம்னு வந்தோம்" என்றார்.

"கிரிண்ணா! யார் அந்த அதிருஷ்டக்காரப் பெண்? ஒருவழியா உங்க பிரமசரிய விரதத்தை முடிச்சிக்கலாம்னு முடிவு பண்ணிட்டீங்களா?"

குறும்புடன் கேட்ட நித்திலாவின் விழிகளில், நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு துறுதுறுப்பும், தெளிவும் வந்திருந்தன.

"ம்... உனக்குத் தெரிஞ்ச பொண்ணுதான் நித்திம்மா! உன் நாத்தனார் விந்தியாதான் அது!"

பெரியம்மா கூறியவுடன் ஒருகணம் ஸ்தம்பித்து நின்றிருந்தவளின் பார்வை, கிரியிடம் சென்றது.

"அண்ணா!" தயக்கத்துடன் அவள் அழைத்தாள்.

"சித்தி, நான் இவளோடு கொஞ்சம் தனியா பேசணும். நாங்க மொட்டைமாடியில் போய் கொஞ்சம் பேசிட்டு வந்திடுறோம்" என்றபடி அவளை அழைத்துச்சென்றான், கிரி.

அங்கு சென்றதும் கேள்வியாக நோக்கியவளிடம்– "எனக்கு எல்லாம் தெரியும் நித்தி! விந்தியாதான் அந்த பாதிக்கப்பட்ட பொண்ணுன்னு நரேன் என்கிட்ட சொல்லிட்டாரு. நம்ம

வீட்டுக்கு இது தெரியாமலே இருக்கட்டும். அந்தக் கிஷோர் மேல நிறைய வழக்கு இருக்கு. அவன்கிட்ட இருந்த ஆதாரங்கள் எல்லாவற்றையும் பிடுங்கியாச்சு."

இனிமே, அவனால எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் உன் கல்யாணத்துல பார்த்ததுல இருந்து விந்தியாவை விரும்பத் தொடங்கிட்டேன். இப்பவும் அது மாறலை- இன்னும் அதிகமாகி இருக்கு! விபரம் புரியாத வயசுல தப்பு பண்ணுறது சகஜம்தான்!

அதுவும், இது அவ அறியாமல் நடந்த தப்பு! அதுக்கு அவளை பொறுப்பாளியாக்க நான் விரும்பலை. நீதான் எப்படியாவது உங்க வீட்டில் பேசி ஒரு நல்ல முடிவா சொல்லணும்" என்றவனை வியப்பும், பெருமையுமாய் பார்த்த நித்தியின் விழிகள், மெல்லக் கசிந்தன.

"ரொம்ப மகிழ்ச்சிண்ணா! நான் முதல்லே விந்தியாகிட்டப் பேசுறேன்" மகிழ்ச்சியுடன் கூறினாள்.

பிறகு அவர்கள் கிளம்பிச் செல்ல, அன்று மாலையே விந்தியாவிற்கு 'போன்' செய்தாள்.

அருகிலிருக்கும் ஒரு ஓட்டல் வாசலில் தான் காத்திருப்பதாகக் கூறி, உடனே அவளை அங்கு வரச்சொன்னாள்.

முதலில் அவளுடைய விருப்பத்தைத் தெரிந்துகொள்வது முக்கியம் என்று தோன்ற, தன் வீட்டில் வைத்து இந்த விஷயத்தை பேசமுடியாது என்பதும் புரிந்தது. ஓட்டல் வாசலிலேயே அவள் காத்திருந்தாள்.

விந்தியா வந்ததும், அவளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்று பேசியபோது, அவள் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

உடனே மறுத்தவள், "என்னால் அந்தக் குற்ற உணர்வுடன் வேறு ஒருத்தரோடு எப்படி வாழமுடியும், அண்ணி? யோசிச்சுப் பாருங்க. என்னால் முடியாது. நான் கடைசிவரைக்கும் இப்படியே இருந்துட்டுப் போறேன். அதுவும் எல்லா உண்மையும் தெரிஞ்ச உங்க அண்ணாவோட... முடியவே முடியாது" தீர்மானமாக மறுத்தாள்.

"விந்தி- புரிஞ்சிக்க! எல்லா உண்மையும் தெரிஞ்சுதான், அவரே விரும்பிக் கேக்கிறாரு! இந்தப் பிரச்சினைக்கு முன்னாடியே



உன்னை விரும்பி இருக்காரு. இது அந்தக் கடவுள் போட்ட முடிச்சுன்னு நான் நினைக்கிறேன். ஒருத்தருக்கு தெரியாம ஏமாத்தி கல்யாணம் பண்ணுறதுதான் தப்பு."

"நீ உடனே சொல்ல வேண்டாம். ஒரு வாரம் யோசிக்க நேரம் எடுத்துக்க. நல்லா யோசிச்சி உன் முடிவைச் சொல்லு. நல்ல முடிவா சொல்ல வாழ்த்துகள்" என்றபோது, அவள் தனது கைகளில் முகத்தைப் புதைத்து அழத் தொடங்கினாள்.

## 12

**வி**ந்தியாவை சமாதானப்படுத்தி ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவிட்டு, நித்தி திரும்பி வரும்போதுதான் தாராவை சந்திக்க நேர்ந்தது.

பஸ் நிறுத்தத்தில் நின்றிருந்தபோது, யாரோ "நித்தி..." என்று அழைப்பு வரவே திரும்பினாள். அங்கு தாரா நின்றிருந்தாள்.

பழைய செழுமையும், துள்ளலும் இல்லாமல் ஓய்ந்து தெரிந்தாள்.

அவள் கர்ப்பமாக இருப்பதும் புரிந்தது.

மனதிற்குள் பழைய கோபம் துளிர்விட்டது.

"எப்படி இருக்கே தாரா? உன் கணவர் வசந்த் நல்லா இருக்காரா?"

அவள் கேட்டதுமே, "ம்- நான் நல்லா இருக்கேன் நித்தி- அவர் எப்படி இருக்காருன்னு எனக்குத் தெரியாது" என்றாள், விரக்தியுடன்.

பதற்றத்துடன் "ஏன்? என்னாச்சு?" என்றாள், நித்தி.

"அது பெரிய கதை! என்னோடு மூணு மாசம்கூட அவர் குடித்தனம் பண்ணலை. அதுக்குள்ளே நான் கர்ப்பமாயிட்டேன். அவரு அவங்கப்பா- அம்மா பார்த்து வைச்ச பணக்காரப் பொண்ணைக் கல்யாணம் செஞ்சிட்டு வெளிநாட்டுக்குப் போயிட்டாரு...

"எனக்கு அது தெரியாது. வேலை விஷயமா ஊருக்குப் போயிருக்கிறதாதான் நான் நினைச்சேன். அப்புறம் தெரிஞ்சு நியாயம் கேக்கப் போனா, கல்யாணம் நடந்ததுக்கு சாட்சி

என்னன்னு என்கிட்டே அவங்கப்பா கேட்டாரு- அந்த சாமிதான் சாட்சி! வேற யாரை நான் சாட்சிக்கு கூப்பிட முடியும்? அதுக்கப்புறம் அவனை நினைக்கக்கூட எனக்குப் பிடிக்கலை...

திரும்பி எங்க அப்பா வீட்டுக்குப் போனேன். அவங்க என்னை ஏத்துக்கலை. இப்ப ஒரு விடுதியில தங்கியிருக்கேன். வயித்துல ஏழு மாசம்! இருந்த நகையெல்லாம் வித்துட்டேன். ஒரு துணிக்கடையில் வேலை பார்க்கிறேன். பி.இ. படிச்சிட்டிருந்த எனக்கு நேர்ந்த கதியைப் பார்த்தியா? என் வாழ்க்கை எல்லாருக்கும் ஒரு பாடமா இருக்கட்டும். வேற என்ன சொல்றது?"

விரக்தியுடன் கூறியவளிடம் நிறைய மாற்றம் தெரிந்தது.

"என் கதையையே சொல்லிட்டு இருக்கேனே! நீ எப்படி இருக்கே?"

ஆவலுடன் விசாரித்தவளிடம், "ம்... நல்லாருக்கேன். தேர்வு நடந்திட்டிருக்கு. அதனால அம்மா வீட்டில் இருக்கேன்" என்றாள்.

"இப்ப கம்ப்யூட்டர்' படிப்பு ஒண்ணு முடிச்சிருக்கேன். ஏதாவது ஒரு கம்பெனியில வேலை கிடைச்சாக்கூட போதும். என் குழந்தையோடு காலத்தைத் கழிச்சிடுவேன்...

கல்யாணம், புருஷன்கிற நினைப்பே வெறுப்பா இருக்கு. எப்பவுமே பட்டபிறகுதானே புத்தி வருது. ஆமா... அத்தை வீட்டில் எல்லாரும் நல்லா இருக்காங்களா? அவங்க முகத்தில முழிக்கவே முடியாம பண்ணிக்கிட்டேன்."

அவள் குரலில் சுய வெறுப்பும், விரக்தியும் மிகுந்து தெரிந்தன.

"எல்லாரும் நல்லா இருக்காங்க! நான் வேணா அப்பாகிட்ட சொல்லி அவருக்குத் தெரிஞ்ச ஒரு 'கம்ப்யூட்டர்' மையத்தில் ஏதாவது வேலை கிடைக்குமான்னு கேக்கவா?"

"வேணாம்! எல்லாரும் என் மேல கோபமா இருப்பாங்க... குழந்தை பிறக்கட்டும் பார்க்கலாம்!' நானும் சொல்லி வச்சிருக்கேன். உனக்கு ஏதாவது தெரிஞ்சா இந்த நம்பருக்கு போன் பண்ணி சொல்லு நித்தி" என்றபடி தன் விடுதியின் தொலைபேசி எண்ணைக் கொடுத்தாள்.

அவளிடம் விடைபெற்று நடந்து வரும்போது, மனம் கனத்திருந்தது.



வாழ்க்கையில் நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைப்பது புரிந்தது.

வாழ்க்கைத் துணை நல்லபடியாக அமையவில்லையென்றால் ஒரு பெண் எவ்வளவு துயரங்களை சந்திக்க வேண்டியது இருக்கிறதென்பதும், தன்னம்பிக்கையும் தைரியமும், தன் காலில் நிற்கிற சுய வேலை வாய்ப்பையும் ஒவ்வொரு பெண்ணும் உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் தோன்றியது.

யோசனையுடன் வீட்டிற்குச் சென்றபோது, அங்கு நரேன் அவளுக்காக காத்திருந்தான்.

காஞ்சனாவும் உடனிருந்ததால், சிறு முறுவலுடன் அவனை வரவேற்றாள்.

உடனே எழுந்தவன் "நித்தி! உன்னை வெளியே அழைச்சிட்டுப் போகலாம்னு வந்தேன். உனக்குப் பிடிச்ச இசை நிகழ்ச்சி இன்னிக்கு இருக்கு. கிளம்புறியா?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

முன்பு ஒருநாள் பேசிக்கொண்டிருந்தபோது, தனக்கு பாட்டுகள் மிகவும் பிடிக்கும் என்று விந்தியாவிடம் கூறியது நினைவுக்கு வந்தது.

"இல்லை... எனக்கு தலைவலி! நான் வரலை. நீங்க வேணா போயிட்டு வாங்க" எனும்போதே காஞ்சனா இடையில் புகுந்தாள்.

"ஏய் நித்தி! மாப்பிள்ளை ஆசையா கூப்பிடுறாரு. உடனே கிளம்பு! நான் ஒரு காப்பி தரேன். குடிச்சிட்டு போ. இசையைவிட மனசை அமைதிப்படுத்தற விஷயம் வேற எதுவும் இல்லைம்மா! இருங்க மாப்பிள்ளை... அவ வந்துருவா!" என்றபடி உள்ளே அழைத்துச்சென்றார்.

ஆழ்கடல் போன்ற மனதில் நங்கூரம் பாய்ச்சி இருந்த நம்பிக்கைகள், இன்று தொலைந்துபோயிருந்தன.

அவன் வார்த்தைகளால் குற்றுயிராகி இருந்த மனது, தன்னை செப்பனிட முயன்று தோற்றுப்போயிருந்தது.

ஒரு பெருமூச்சுடன் முகம் கழுவி தயாராகி, சுடிதாரை மாற்றிக்கொண்டு வெளியே வந்தபோது– நரேன் யோசனையுடன் காத்திருந்தான்.

காரில் ஏறி அமர்ந்தவுடன் இரண்டு 'டிக்கெட்'டை அவளிடம் கொடுத்தான்.

"நான் வரலை... அத்தைக்காக அப்படி சொன்னேன். விந்தியை அனுப்பலாம்னு தேடினா, அவ வெளியே போயிருந்தா... அதான் நானே வந்தேன்! நீ மட்டும் போயிட்டு வா. முடியற நேரம் எனக்கு ஒரு 'போன்' பண்ணு. நான் வந்து அழைச்சிட்டுப் போறேன்" என்றவன், ஒரு நேர்ப்பார்வையுடன் காரை ஓட்டினான்.

கோபமாக இருக்கும் தன்னை சமாதானப்படுத்துவதற்காக இதுபோல் செய்கிறானா என்ற எரிச்சல் சுள்ளென்று மனதில் பரவியது.

"வேண்டாம்... நானும் போகலை. என்னைச் சமாதானப் படுத்தறதுக்காக இந்த மாதிரி செய்யறதெல்லாம் இனிமே வேண்டாம். இதனாலெல்லாம் நான் மயங்கிட மாட்டேன்."

'கிறீச்'சென்று அவன் 'சடன் பிரேக்' பிடித்ததில், கார் உடனே நின்றது.

"நித்தி! என்னை எவ்வளவு கேவலமா எடைபோட்டிருக்கே? சாரி! நான் உன்கிட்ட இதை எதிர்பார்க்கலை. நீ சோகமா இருக்கிற மாதிரித் தெரிஞ்சுது. பரீட்சைக்குப் படிக்கிற அலுப்பு வேற! உனக்கு மனசுக்கு இதமா இருக்குமேன்னுதான் இதை வாங்கிட்டு வந்தேன். சத்தியமா இதுலே எந்த உள்நோக்கமும் இல்லை."

அடிக்குரலில் கூறியவன், காரை வேகமாகச் செலுத்தி அந்த அரங்கத்தின் வாசலில் நிறுத்தினான்.

தர்மசங்கடத்துடன் இறங்கியவள், "நன்றி! திரும்பவும் நானே வீட்டுக்குப் போயிடுவேன். நீங்க வரவேணாம்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

அடுத்த இரு மணி நேரங்களும் மனம் அனைத்துச் சிரமங்ககளையும் மறந்து பஞ்சுப்பொதியாய் லேசானது.

அவருடைய குரல் மயிலிறகாய் மனதை வருடியது... பூஞ்சிறகாய் சிறகடிக்க வைத்தது.

நிகழ்ச்சி முடிந்து அவள் வெளியே வந்து கூட்டத்தில் ஆட்டோவைத் தேடியபோதுதான், பின்புறம் கார் ஒலி அவளை திடுக்கிட்டுத் திரும்ப வைத்தது.

நரேன் ஒரு கூர்மையான பார்வையுடன் காரின் முன்கதவைத் திறந்துவிட, மவுனமாக ஏறி அமர்ந்தவளுக்குள் சிறு சலனம்!

தனக்காக இவ்வளவு பார்க்கிறானே என்ற சிறு மகிழ்ச்சி



"என்ன சார்... அதுக்குள் ஆபீசில் இருந்து வந்துட்டீங்க?"

"தூக்கமே வரலை சார், அதான்!"

—எஸ். கணேஷ்முருகன், வேம்படிதாளம்.





"ஊறுகாய் விளம்பரத்துல நடிச்சது தப்பாப்போச்சு!"

"ஏன்?"

"எல்லாரும் தொட்டுத் தொட்டுப் பேசுறாங்க!"

—எஸ்.ஜெ. கலைவாணி, குரோம்பேட்டை.

"எவ்வளவு குடிச்சாலும் சரியா என் வீட்டுக் கதவைத் தட்டிடுவேன்."

"எப்படி?"

"'சனியன் வரட்டும்... வைச்சுக்கிறேன்'னு வீட்டுக்குள்ளே இருந்து வர்ற என் மனைவியின் சத்தத்தை வைச்சுத்தான்."

—ஆர். அழகுமுத்து, கிருஷ்ணாபுரம்.



...ளை எட்டிப் பார்த்தது.

மறுபக்கம், காதல் சிகரத்தை தொட முடியாமல் சிராய்ப்புடன் காய்ந்த மனது, ஈரச்சிறகாய் கனத்துப்போயிருந்தது.

அவளை வீட்டில் இறக்கிவிட்டவன், சிறிது நேரம் ராகுவிடம் பேசிவிட்டு கிளம்ப, காஞ்சனா 'டிபன்' தயார் அவனுக்கு சாப்பிட அழைத்தார்.

நித்தியை பரிமாறும்படி அவர் கூற, வேறு வழியின்றி அவனுக்கு 'டிபன்' வைத்தபோதுதான், அவன் முன்போல் சாப்பிடுவதில்லை என்பது புரிந்தது.

"ஏன் சரியாவே சாப்பிடலை?"

கை கழுவிவிட்டு வரும்போது துண்டை நீட்டியபடிக் கேட்டாள்.

அவளையே கூர்ந்தபடி, "ம்... என் மனைவி என்கூட இருந்தா நல்லா சாப்பிடலாம். அவளுக்கு என் மேலக் கோபம். அம்மா வீட்டுக்கு வந்துட்டா. மனசு சரியா இருந்தாதானே நல்லா சாப்பிட முடியும்?" அழுத்தமாக சொன்னான்.

சட்டென்று உதட்டைக் கடித்துக்கொண்டவளுக்கு, அவனிடம் ஏன் கேட்டோமென்று இருந்தது.

பிறகு அவன் விடைபெற்றுச் சென்றும், மனம் இருதலைக்கொள்ளி எறும்பாய்த் தவித்தது.

தன் மனதில் அவன்மேல் கொண்ட காதல் இம்மியளவு கூடக் குறையவில்லை என்பதும், நிலவை மறைத்த கருமேகமாய் அவன் வார்த்தைகள் அதை மறைத்திருப்பதும் புரிந்தன.

தான் அவனை வெறுத்துவிட்டதாக நினைத்ததுகூட, ஒருவகையில் வேடம்தானோ என்று, இப்போது மனம் இடித்துரைக்கத் தொடங்கியது.

தனக்குள்ளேயே அவள் போராட தொடங்கி இருந்தபோது தான், பரீட்சைகள் முடிந்து– ரேவதியும், சங்கரனும் அவளை அழைத்துச் செல்ல வந்தனர்.

அம்மா, அப்பாவிற்கு எந்தப் பிரச்சினையும் தெரியாததால், மறுக்கமுடியாமல் அவள் கிளம்பிச் செல்ல, விந்தியா ஆவலுடன் அவளுக்காகக் காத்திருந்தாள்.

இருவரும் தனியே பேசிக்கொண்டிருந்தபோதுதான், கிரியைப் பற்றி ஞாபகப்படுத்தினாள், நித்திலா.

"விந்தி! கிரி அண்ணா சொன்னதைப் பத்தி ஏதாவது யோசிச்சியா? என்ன முடிவெடுத்திருக்கே?"

அவள் ஆவலுடன் கேட்டதும், விந்தியாவின் முகம் சட்டென்று சுருங்கியது.

"எனக்கு பயமா இருக்கு அண்ணி! இப்ப பரவாயில்லைன்னு ஏத்துக்கிட்டாலும், எதிர்காலத்துல என்னிக்காவது ஒருநாள் அவர் மனசுல நாம தப்பு பண்ணிட்டோமோன்னு நினைக்க ஆரம்பிச்சா என் கதி என்னாகிறது? அதுக்கு பேசாம நான் இப்படியே இருந்திடறேன் அண்ணி!" என்றாள். குரலில் பழைய உறுதியும், தீர்மானமும் குறைந்திருந்தன.

"நீ நினைக்கிற மாதிரி கிடையாது! கிரி அண்ணா ரொம்ப நல்லவரு... முற்போக்கான சிந்தனை உள்ளவர். அவசரத்துல முடிவெடுத்துட்டு அப்புறம் அவகாசத்துல வருத்தப்படுற ஆளு இல்லை. நிச்சயமாக உன்னைக் கடைசிவரைக்கும் நல்லாப் பார்த்துப்பாரு, விந்தி" எனும்போதே சத்தம் கேட்டுத் திரும்பினாள்.

சட்டென்று அவளுடைய இதயம் நழுவி இடம்பெயர்ந்தது.

## 13

அறை வாசலில் அவளையே கூர்ந்து பார்த்தபடி நின்றிருந்த நரேனைக் கண்டதும் பதறி எழுந்தாள், விந்தியா.

"நாம அப்புறம் பேசலாம்... நான் வரேண்ணி! நீங்க அண்ணாவைக் கவனியுங்க" என்றபடி வெளியே சென்றாள்.

அவள் சென்றதும் உள்ளே வந்து கதவைச் சாத்தியவன், மெதுவாக அவளருகில் வந்தான்.

"ரொம்ப நன்றி நித்தி! என்னை மன்னிச்சி நீ இங்கே திரும்பி வந்ததுல எனக்கு ரொம்ப மகிழ்ச்சி" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினான்.

அவன் நிமிர்ந்தபோது அவள் இதழோரம் விரக்திப் பூக்கள் உதிர்ந்தன. வேகமாக எழுந்தாள்.

"மன்னிக்கணும். நான் இங்கே திரும்பி வந்ததாலே உங்களை மன்னிச்சிட்டேன்னு நினைக்க வேணாம்... அத்தையும், மாமாவும்



[வந்]து கூப்பிட்டதாலே வந்தேன். அதோட, எங்க அப்பா–[அ]ம்மாவுக்கு நம்ம பிரச்சினை எல்லாம் தெரியாது. தெரிஞ்சா [துடி]ச்சிப் போயிடுவாங்க... அதான்!"

ஒருவித இறுக்கத்துடன் கூறிவிட்டு, அறைக் கதவை திறந்து [வே]கமாக வெளியேறினாள்.

ஒருகணம் கண்களை இறுக மூடித் திறந்த நரேனுக்குள், நித்தியை [எப்]படி சமாதானப்படுத்துவதென்பது புரியாத புதிராய்!

தரிசாகக் கிடந்த தன்னுடைய மன நிலத்தில் அவளுடைய [பா]ர்வை விதைகள் நேசம் தூவியதும், காதல் பயிர் துளிர்விட்டு [இ]ன்று விருட்சமாகி இருப்பதும் புரிய, ஒரு பெருமூச்சுடன் [அ]மர்ந்திருந்தான்.

அன்றிரவு அனைவரும் சாப்பிடும்போதுதான் நித்தி மெல்ல [கி]ரியின் விருப்பத்தைப் பற்றிக் கூறினாள்.

"அத்தை! கிரி அண்ணாவும், பெரியம்மா–பெரியப்பாவும் பத்து [நா]ள் முன்னாடி எங்க வீட்டுக்கு வந்திருந்தாங்க. அவங்களுக்கு [ந]ம்ம விந்தியாவை மருமகளாக்கிக்கணும்னு ரொம்ப ஆசை! கிரி அண்ணாவும் விந்தியை விரும்பறாரு. அதோடு அவருக்கு எல்லா உண்மையும் தெரியும்" என மெதுவாக நிறுத்தினாள்.

உடனே நரேனின் முகத்தில் சட்டென்று ஒரு ஒளி பரவியது.

ரேவதியும், சங்கரனும் மிகுந்த மகிழ்ச்சியுடன் நித்தியையே பார்த்திருக்க, விந்தியா தலை குனிந்து அமர்ந்திருந்தாள்.

"விந்தி என்ன சொல்றாள்ன்னு கேளுங்கம்மா! அன்னிக்கு கிரி பேசும்போதே இப்படி இருக்குமோன்னு நான் நினைச்சேன்."

கூறியவனின் முகத்தில் பெரும் பாரம் விலகிய நிம்மதி!

"நான் அவகிட்ட போன வாரமே பேசிட்டேன், அத்தை. அவதான் ரொம்ப பயப்படுறா. நீங்கதான் அவளை சம்மதிக்க வைக்கணும்" என்றவள், மெதுவாக எழுந்து கை கழுவிவிட்டு தோட்டத்திற்குச் சென்றாள்.

அவர்கள் பேசி முடிவெடுக்கட்டும் என்று தனிமையை நாடிச் சென்றபோது, இரவின் துணை மனதிற்கு மிகவும் இதமாய்!

துணி துவைக்கிற மேடையின் மீது அமர்ந்து நிமிர்ந்து பார்த்தபோது, வானம் தன் மடியில் பஞ்சுப் பொதியாய் மேகங்களைச் சுமந்துகொண்டிருந்தது.



மேகங்களுக்குப் பின்னே ஒளிந்திருந்த நட்சத்திரங்கள் மெலிதாய் ஒளிர்ந்துகொண்டிருந்தன.

அந்த நிமிடம், பாரதியின் பாடல் வரிகள் நினைவில் வந்தன.

**"பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல்வயிரம்... நட்டநிசியில் தெரியும் நட்சத்திரங்களடி!"**

நினைத்த உடனே என்ன அழகான கற்பனை என்று மனமும் உடலும் சிலிர்த்தன.

நித்தி எழுந்ததும் அவள் பின்னால் பாசத்திற்குக் கட்டுண்ட குழந்தையாய் பின்தொடர்ந்த மனதை அடக்கிய நரேன், விந்தியாவிடம் பேசிவிட்டுப் பிறகு தோட்டத்திற்கு வந்தான்.

காற்றின் கொலுசுச் சப்தமாய், உதிர்ந்த சருகுகளின் சலசலப்பு கேட்டது.

தன் எண்ணங்களிலிருந்து மீண்ட நித்தி திரும்பினாள். நரேனுக்கோ அவள் விழிகளே அழகிய கவிதைகளாய்!

"நித்தி! ராத்திரியிலே தனியா இங்கே வந்து ஏன் உக்காந்திருக்கே...? ஏதாவது பூச்சி கடிச்சிடப் போகுது..., வா உள்ளே போகலாம்."

"பூச்சி கடிச்சா, கடிச்ச இடம் மட்டும்தானே வலிக்கும்... சிலரோட வார்த்தைகள், உடல் முழுக்க ரணமாகத் தாக்கி மனசையும் காயப்படுத்தி வலிக்க வச்சிடுதே."

வேகமாகக் கூறியவள், விருட்டென்று எழுந்து உள்ளே சென்றாள்.

அவன் மனம் ஆயாசமாகிவிட, மெதுவாகப் பின்தொடர்ந்தான்.

முன்பு, தான் விலகி விலகிப் போனபோது காலைச் சுற்றும் பூனைக்குட்டியாய் அவள் முகம் பார்த்து நின்றது நினைவுக்கு வந்தது.

இப்போது, தான் அவளைப் புரிந்து நெருங்கி வரும்போது, அவள் வெறுப்பை உமிழ்வதும், வாழ்க்கையின் கண்ணாமூச்சி விளையாட்டாய் தோன்றியது.

பிறகு வந்த நாட்களில், அந்த வீடு இழந்திருந்த மகிழ்ச்சியை மீட்டுக்கொள்ள, விந்தியின் சம்மதம் பெரிதும் உதவியது.



அவள் திருமணத்திற்கு சம்மதித்ததும் மிகவும் மகிழ்ந்து [போ]யினர். ரேவதியும், சங்கரனும்!

உடனே தியாகுவையும், காஞ்சனாவையும் வரவழைத்துப் [பேசி]னர்.

பிறகு, கிரியிடம் பேசிய நித்தி, அவளை பெண் பார்க்க [வரு]மாறு கூறினாள்.

மறுவாரமே, கிரியின் வீட்டிலிருந்து வந்து, விந்தியாவைப் [பேசி] முடித்துவிட்டனர்.

அன்றிரவு, தன் துணிகளை நித்தி அலமாரியில் அடுக்கிக்கொண்டிருந்தாள்.

திடீரென்று பின்புறம் அரவம் கேட்டுத் திரும்பினால், நரேன். அவளையே கூர்ந்தபடி நின்றிருந்தான்.

அவன் பார்வை, சில்லென்று உள்ளே ஊடுருவிச் சென்று [சி]லிர்க்கச் செய்தது.

சட்டென்று திரும்பியவளிடம், "நான் எத்தனை தடவை உனக்கு நன்றி சொல்றதுன்னு தெரியலை, நித்தி! விந்தியா விஷயத்துலயும், நம்ம குடும்பத்து மேலயும் இவ்வளவு அக்கறை எடுத்துட்டு நீ செய்யற ஒவ்வொரு செயலும் என்னை ஏதோ ஒருவிதத்துல கடன்காரனா ஆக்குது. நான் இதுக்கெல்லாம் திருப்பி என்ன செய்யப்போறேன்? ஆனா, ரொம்ப நன்றி!"

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறியவன், சட்டென்று அவள் கையைப் பிடித்து புறங்கையில் மென்மையாக முத்தமிட்டான்.

ஒருகணம் மனதை அன்னச் சிறகாய் வருடிய மாயக்கரம் ஒன்று, திடீரென்று விலகிச் சென்றது.

அவன் பிடியிலிருந்த தன் விரல்களை வேகமாக விடுவித்துக்கொண்டாள்.

"நன்றியெல்லாம் மனசுல இருந்தால் போதும்! ஏதோ, என்கிட்ட கடன்பட்ட மாதிரி நினைச்சி, என் மேல பரிதாபப்பட்டு வாழ்க்கை தரணும்னு இந்த மாதிரி நாடகம் வேண்டாம். எதுவுமே ஆழ்மனசுலேருந்து வரணும்" வெறுப்புடன் கூறிவிட்டு, வேகமாக வெளியில் சென்றாள்.

'இல்லை... இது நாடகம் இல்லை... என் மனம் உன்னைச் சுமக்க தொடங்கி வெகுநாட்களாகிறது' என்று கூறவேண்டும் போல்!

ஆனால், முகத்தில் அறைந்த வார்த்தைக் கணைகள், அவனை

பெரிதும் உறையச் செய்தன.

ஒவ்வொருமுறையும் அவளை அணுகும்போது இருவருக்கும் இடையே இருந்த இடைவெளி அதிகரிப்பது புரிந்தது.

புறக்கணிக்கப்படுதல் என்பது எவ்வளவு வேதனையான வலி தருகிற விஷயம் என்பதை மனம் இப்போது அனுபவத்தில் உணரத் தொடங்கி இருந்தது.

என்ன செய்தால் இவள் மனம் மாறும் என்ற தவிப்பு பெரிதாய் ஆட்படுத்த, தன்னை இழக்க தொடங்கி இருந்தான், அவன்.

கிரிக்கும், விந்தியாவிற்கும் வீட்டோடு எளிமையாக தாம்பூலம் மாற்றிக்கொண்டனர்.

அடுத்த மாதமே திருமணம் என்று முடிவு செய்திருந்ததால், வீடு கல்யாணக் களை கட்டத் தொடங்கியது.

ஒரு நாள் விந்தியாவிடம் கேலி செய்து சிரித்துக்கொண்டிருந்த போதுதான், அவள் நேற்று தாராவைப் பார்த்ததாக மெல்லிய குரலில் கூறினாள்.

"அண்ணி! உங்களுக்கு விஷயம் தெரியுமா? நேத்து நான் கிரியோட பிறந்த நாளுக்கு சட்டை வாங்கலாம்னு ஒரு கடைக்குப் போயிருந்தேன். அங்கே தாராவைப் பார்த்தேன்... கர்ப்பமா இருந்தா! ஆனா, ஆளே ரொம்ப மாறிப் போயிருந்தா. அவ என்கிட்ட பேச முயற்சி செஞ்சப்ப, நான் கோபமா திரும்பி வந்துட்டேன். ஆனா, அந்தக் கோபத்துலயும் ஒரு பெரிய மகிழ்ச்சி. அவ ஓடிப் போகலைன்னா, எனக்கு இவ்வளவு அருமையான அண்ணி கிடைச்சிருக்கமாட்டாங்களே?" என்றபடி நித்தியை அணைத்துக்கொண்டாள்.

"ம்... நானும் ஒரு நாள் பார்த்தேன். அப்புறம்... விந்தி, பொய் சொல்லாதே! ஏன் மாத்தி சொல்றே? என்னை மருமகளாக்கினதுனாலதான் நீ கிரி அண்ணாவைப் பார்க்க முடிஞ்சுது. அதானே உன் மகிழ்ச்சிக்கு உண்மையான காரணம்!"

சுட்டுவிரலைக் காட்டி கேலி செய்தாள்.

"அண்ணி!" என்று அவளை செல்லமாகத் தட்டவும், பயந்துபோய் எழுந்து ஓடிய நித்தி, யார் மீதோ இடித்துக் கொண்டாள்.



வேகமாக ஒரு பூக்குவியலாய் வந்து மோதியவளை, விழுந்துவிடாமல் தாங்கிய நரேனுக்கோ, இனம் புரியாத படப்பு!

தன்னைத் தாங்கிய மார்பும், வளைத்த இரும்புக்கரங்களும் [illegible]யை ஏதோ செய்ய, மெதுவாக நிமிர்ந்தவளின் விழிகளில் அர்த்தம் புரியாத ஒரு பயமும், தவிப்பும்!

"சரி... சரி! நான் போயிடுறேன். எனக்கும் இங்கிதம் தெரியும். [illegible] வேளையில இந்தக் கரடி எதுக்கு?"

வேகமாக ஓடிச்சென்ற விந்தியாவின் வார்த்தைகள், ...ச் சிதறலாய் முகத்தில் அறைய– நித்தி உடனே தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"தயவு செய்து... இனிமே என்னைத் தொடாதீங்க!"

கண்களை இறுக மூடியபடி அவள் கூற– முகவாயை ஒரு விரலால் தொட்டு நிமிர்த்தினான், நரேன்!

"ஏன்–தொட்டா உன்னை அறியாம மனசு இளகிடுவோமோன்னு பயமா இருக்கா?" குறும்புடன் கேட்டான்.

அவள் சட்டென்று விழிகளைத் திறந்தாள்.

"இல்லை... அருவெறுப்பா இருக்கு! ஒரு தாசியைத் தொடக்கூட அவளோட அனுமதி வேணும்... தெரியுமா? அதோடு பணமும் கொடுக்கணும்!" சீண்டலாகக் கூறினாள்.

பழிவாங்கும் குரலில் கூறினாலும், அவளுக்கும் வலித்தது.

உடனே அவளிடமிருந்து விலகியவனை, வார்த்தைகள் சாட்டையடியாய் தாக்கின. அந்த அறையைவிட்டு வேகமாக வெளியேறினான், நரேன்!

அம்பு தைத்தது போல மனதை சல்லடைக் கண்களாய் துளைத்தன... அவளுடைய வார்த்தைக் கணைகள்!

தன் மேலேயே கோபம் வர, காரணமின்றித் தன்னையே வெறுக்க தொடங்கினான், அவன்.

அந்த நிமிடம் எப்போதோ படித்த மகாவீரரின் வைர வரிகள் மனதில் மிதந்தன.

**"எந்தப் பேச்சானாலும், தீர ஆலோசனை செய்தபிறகே பேசவேண்டும். நல்ல மனிதனின் கவசம், பொறுமை மட்டுமே!"**

அந்தப் பொறுமையையும், யோசித்து செயல்படும் திறனையும் தான் ஒரு நொடி கைவிட்டது, வாழ்நாள் முழுவதும்

தன்னை ஆழ்நரகத்தில் தள்ளிவிடுமோ என்று மனம் பெரும் சஞ்சலமானது.

அவன் மனம் இலக்கின்றி செல்லும் பறவையைப் போல் தத்தளித்து பயணித்தது.

## 14

அன்றிரவு, நரேன் வீட்டிற்கு வரத் தாமதமானதும் ரேவதி மனதுக்குள் பரிதவிக்க தொடங்கினாள்.

"என்னங்க! பத்து மணியாச்சு... நரேனுக்கு 'போன்' பண்ணுங்க! அவன் ஏன் இன்னும் வரலை? சாயந்தரம் போனவன்... போகும்போதே ஏதோ கோபமாப் போன மாதிரி தெரிஞ்சுது... உடனே 'போன்' பண்ணுங்க" சங்கரனிடம் புலம்பினாள்.

உடனே அவனுடைய கைப்பேசிக்கு அழைத்தபோது, புதிதாக யாரோ ஒருவரின் குரல் கேட்டது.

"அலோ! அங்கே என் பையன் நரேன் இருக்கானா? நீங்க யாரு?" சங்கரன் கேட்டார்.

நான் சாம்பசிவம் பேசறேங்க... 'பைக்'லே போகும்போது அவருக்கு சின்ன விபத்து! கையில மாவுக்கட்டு போட்டிருக்காங்க. பதினைஞ்சு நாள் படுக்கையிலேயே ஓய்வில் இருக்கணுமாம்! நான்தான் அவரைக் கொண்டுவந்து ஆஸ்பத்திரியிலே சேர்த்தேன். அவரோட செல்போனை டாக்டர் என்கிட்டக் கொடுத்தாரு. உங்களுக்கு பேச முயற்சி பண்ணினேன்... கிடைக்கலை" என்றவர், மருத்துவமனையின் பெயரைக் கூறினார்.

பதறிப்போனார் சங்கரன்.

"நரேனுக்கு விபத்தாம்... ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறதா ஒருத்தர் பேசறாரு!" என்றமே, "கடவுளே" என்று ரேவதி அரற்றத் தொடங்கினார்.

டி.வி. பார்த்துக்கொண்டிருந்த நித்தியும், விந்தியாவும் பதற்றத்துடன் ஓடிவந்தனர்.

ஒருகணம் உயிரே போய்விட்டது போல் தோன்ற, தன்



உலகின் இயக்கமே நின்றுபோனதைப் போல் தவித்தாள், நித்தி.

"என்னாச்சு மாமா? அவர் எப்படி இருக்கிறாராம்?" பதைப்புடன் கேட்டாள்.

"பேசினவரு பெரிசா பயப்பட ஒண்ணுமில்லைங்கிறாரு... கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்காம். கட்டு போட்டிருக்காங்களாம்! இடுப்புலேயும் அடியாம்... இவ்வளவு நேரம் பேச முயற்சி பண்ணினாராம்... தொடர்பு கிடைக்கலையாம்... வாங்க, கிளம்பலாம்."

உடனே அனைவரும் கிளம்பினர்.

"சாரிண்ணி! நான்தான் இவ்வளவு நேரமா கிரிகூடப் பேசிட்டிருந்தேன். அதான் இணைப்பு கிடைக்கலை."

விழிகளில் கண்ணீருடன் கூறிய விந்தியை சமாதானப் படுத்தினாள், நித்தி.

மனமும், உடலும் ஆடிப்போயிருக்க, அவனுக்கு ஒன்றும் ஆகியிருக்கக்கூடாதென்று மனம் உருப்போட்டது.

அவன் மேலிருந்த வருத்தமெல்லாம் சூரியனைக் கண்ட பனியாய் மறைந்தது.

தான் மூச்சுமுட்ட சுமந்திருந்த காதல் மட்டும் பொங்கிப் பிரவகித்து, இது தன்னால்தானோ என்ற குற்ற உணர்வை விதைத்தது.

தான் கூறிய வார்த்தைகள் அவனை வேதனைப்படுத்தியதால் தானே அவன் வெளியே கிளம்பிச் சென்றான் என்ற உண்மை முள்ளாய் உறுத்த, விந்தியின் தோளில் சாய்ந்து அழத் தொடங்கினாள், நித்திலா.

அனைவரும் மருத்துவமனைக்கு போய்ச் சேர்ந்தபோது, நரேனுக்குக் கையில் கட்டு போடப்பட்டு, படுக்கையில் கிடத்தப் பட்டிருந்தான்.

வலியின் தீவிரம் முகத்தில் இறுக்கமாகத் தெரிந்தது.

"நரேன்..." என்ற தாயின் அழைப்பில் கண்விழித்தவனுக்கு, அருகில் தெரிந்த நித்தியின் முகத்தைப் பார்த்ததும், ஒரு புதிய உற்சாகம்.

அழுததில் முகம் சிவந்து கண்ணிமைகள் இடுங்கியிருக்க, அவனையே தவிப்புடன் தலை முதல் கால் வரை ஊடுருவிய பார்வை அவனுக்குள் பெரும்பலம் தருவதாய்!

உடனே பார்வையைத் திருப்பியவன், "எனக் ஒண்ணுமில்லம்மா... பயப்படாதிங்க... கையில் சின்ன அடி அவ்வளவுதான்... மாவுக்கட்டு போட்டுருக்காங்க. இடுப்பு லேசா அடி பட்டிருக்கிறதாலே கொஞ்சம் சிரமம். ஊன்றுகோல் தரேன்னிருக்காங்க... மெதுவாதான் நடக்கணும்... ஒரு மாதத்துக்குள் எல்லாம் சரியாயிடும். விந்தி கல்யாணத்துக்குதான் என்னால ஓடியாடி வேலை பார்க்க முடியாதோன்னு பயமா இருக்கு" வறண்ட முறுவலுடன் கூறினான்.

அவனையே பார்த்துக்கொண்டிருந்த நித்திலாவிற்கு கால்கள் பலமிழந்தாற்போல் தொய்ந்துவிட, சங்கரனிடம் திரும்பினாள்.

"டாக்டர்கிட்டப் பேசிட்டு வந்திடலாமா மாமா?"

கேட்டவளை அங்கேயே இருக்கும்படிக் கூறிவிட்டு ரேவதியும், சங்கரனும் பெரிய டாக்டரைப் பார்க்க விரைந்தனர்.

வெளியில் நின்றிருந்த சாம்பசிவத்திடம் நன்றியுடன் கைகூப்பிய அவளுக்கு, முதலில் வார்த்தைகள் வரவில்லை.

பிறகு "ரொம்ப நன்றி... என் உயிரையே என்கிட்டத் திருப்பித் தந்துருக்கீங்க... இதுக்கு நான் எப்படி?" உடைந்து போய் அழத் தொடங்கியவளை விந்தியா தாங்கிக்கொண்டாள்.

அவளை சமாதானப்படுத்தியவள், "நீங்க உள்ளே போய் அண்ணாகூட இருங்க... நான் இவரோடு பேசிட்டிருக்கேன்" என்று அனுப்பி வைத்தாள்.

மெதுவாக உள்ளே சென்று, கட்டிலின் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தபோது– சம்மதம் கேட்டுக் கண்விழித்த நரேனின் பார்வை அவளிடமே நிலைத்தது.

அவன் கையை மெதுவாகத் தடவியவள் "இப்ப எப்படி இருக்கு... ரொம்ப வலிக்குதா?" மெல்லக் கேட்டாள்.

அவன், "ஊகூம்" என்று தலையசைத்தான்.

"இப்ப வலிக்கலை... என் மனைவிதான் பக்கத்துலேயே இருக்காளே! அவளுக்கு என்னோட எல்லாக் காயங்களையும் ஆற்றுகிற சக்தி உண்டுன்னு இன்னிக்குதான் நான் புரிஞ்சிக் கிட்டேன்."

அவன் பேசப் பேச அவளுடைய பார்வை தழைந்து, இமைகள் குடையாகின.

தர்மசங்கடத்துடன் அவள் அமைதியாக அமர்ந்து இருக்க,



றிது நேரம் கழித்து கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார், ரவதி.

"இப்பவே அழைச்சிட்டுப் போயிடலாம்னு டாக்டர் சொல்லிட்டாரு. உங்கப்பா அந்த சாம்பசிவத்துகிட்டே பேசிட்டிருக்காங்க. இப்ப வலி எப்படிப்பா இருக்கு?"

ஆதரவுடன் அவன் தலையை வருடியபடி கேட்டார்.

"ம்... பரவாயில்லைம்மா! அப்புறம்... ஊன்றுகோல் ஒண்ணு வாங்கணும்... குளியறை போக, எழுந்து நடக்கறதுக்கு அதுதான் வசதி" என்றான், நரேன்.

"சரிப்பா! அப்பாகிட்ட சொல்றேன்" என்றபடி அவன் கன்னத்தை வருடினாள், ரேவதி.

பிறகு அவனை வீட்டிற்கு அழைத்து வந்தார்.

"அப்பா! நீங்க இன்னிக்கு ஒரு நாள் என்கூடப் படுத்துக்கிறீங்களா? நித்தியால என்னோட கனத்தை தாங்கிப் பிடிக்க முடியாது. டாக்டர், கீழே விழுந்துடாம இருக்கணும்னாரு! நாளைக்கு ஊன்றுகோல் வந்தவுடனே நானே நடந்துடுவேன். பதினைஞ்சு நாளிலே கட்டுகளைப் பிரிச்சிடலாம்னு டாக்டர் சொன்னாரு! அப்புறம் பிரச்சினை இருக்காது."

"சரிப்பா! நான் உன்கூடப் படுத்துக்கறேன்" என்றவர், அவன் அறையில் தங்கிக்கொள்ள விந்தியாவுடன் நித்தி படுத்துக்கொண்டாள்.

காலையில் எழுந்ததும் அவன் பல் துலக்கிக் குளிக்கும்வரை உதவிவிட்டு, சங்கரன் அலுவலகத்திற்குக் கிளம்பினார்.

"ரேவதி! இனிமே நீங்க எல்லாரும் பார்த்துப்பீங்க இல்லே? சாப்பாடு கொடுக்கணும்! எழுந்து நடக்கிறப்ப பார்த்துக்கங்க" என்றார்.

"அதெல்லாம் நித்தி பார்த்துப்பா" என்றதும், அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

சாப்பாடு கொடுத்துவிடலாம். ஆனால், மற்ற விஷயங்களில் அவனுக்கு எப்படி உதவுவது?

கூச்சமும், தவிப்புமாய் அறைக்குள் அவள் சென்றபோது, வேறு உடையில் புத்துணர்வுடன் இருந்தான்.

"உங்களுக்கு 'டிபன்' எடுத்துவரவா?" மெதுவாகக் கேட்டாள்.

"ம்... நான் இப்ப உன்னோட செல்லமான அடிமையாச்சே நீ என்ன சொல்றியோ, அதைத்தானே கேட்டாகணும்" என்றான், குறும்பாக!

இட்லியும், சட்னியும், பொங்கலும் வைத்து எடுத்துப் போனபிறகுதான் வலக்கையில் அடிபட்டிருப்பதால் அவனால் எடுத்துச் சாப்பிட முடியாதே என்ற ஞாபகமே வந்தது.

அப்போது "நான் வரலாமா?" என்றபடி உள்ளே வந்தாள், விந்தியா.

"என்னண்ணி தட்டைக் கையில வச்சிக்கிட்டு அப்படியே நிக்கிறீங்க? அண்ணாவுக்கு ஊட்டிவிடுங்க" கண்சிமிட்டியபடிக் கூறினாள்.

"இல்லை! ஒரு 'ஸ்பூன்' இருந்தாக் கொடு. நானே சாப்பிட்டுக்கிறேன்."

நரேன் கூறவும், உடனே சென்று எடுத்து வந்தவள்– இட்லியை மட்டும் சிறு துண்டுகளாக்கி எடுத்து வைத்தாள்.

அவன் சாப்பிட்டு முடித்ததும் மாத்திரை– தண்ணீர் எல்லாவற்றையும் அருகிலிருந்து கொடுத்தாள்.

பிறகு, அவனுக்கு ஏதாவது வேண்டுமா என்று கேட்க வந்தபோது "நீ இப்பவும் 'செஸ்' விளையாடுவியா நித்தி?" ஆவலுடன் கேட்டான், நரேன்.

"ம்..." என்று கூறிவிட்டு சதுரங்கப் பலகையை எடுத்து அடுக்கி வைத்துவிட்டு விளையாட தொடங்கினாள், அவள்.

கடைசியில், அவனே வெற்றி பெற்றுவிட்டாலும், ஏனோ தோற்றுப்போன ஒரு உணர்வே அவளுக்கு வரவில்லை.

சிறுவயதில் மூவரும் சேர்ந்து கேரம், 'செஸ்' என்று விளையாடியது, நிழலாய் ஞாபகத்தில் வந்தது.

அந்தக் கனவு நாட்களை எண்ணி, மனம் இப்போது ஏங்கியது.

பிறகு, மதியம் சாப்பிட்டு ஓய்வெடுத்துவிட்டு, மாலையில் விந்தியா சீட்டுக்கட்டை எடுத்துக்கொண்டு வந்தாள்.

"நான் எப்படி விளையாடுறது? ஒரு கையில புடிச்சிக்கத்தான் முடியும். எப்படி எடுத்துப்போடுறது?" நரேன் கிண்டலாகக் கேட்டான்.



# 15

**வி**ந்தியா உடனே நித்தியிடம் திரும்பினாள்.

"ஏன்– உங்க ஆசை மனைவி எதுக்கு இருக்காங்க? நீங்களும், அவங்களும் ஒரு பக்கம்! நான் தனி! அவங்க சீட்டைப் பிடிச்சிக்கட்டும். அதைப் பார்த்து நீங்க எடுத்துப்போட்டு விளையாடுங்க" என்றாள்.

"இல்லை– அத்தைக்கு சமையல்லே உதவிபண்ணணும். நான் போறேன்" என்று எழுந்தவளை நரேன் தடுத்தான்.

"ஏன் நித்தி... காலையில மாதிரித் தோத்துடுவோம்னு பயமா? நான் இருக்கேன். வா" என்றதும், தயக்கத்துடன் பார்த்தாள்.

கட்டில் ஓரத்தில் அவள் அமர்ந்தபோது, நகர்ந்து இடம் கொடுத்தவன் ஆவலுடன் விளையாடத் தொடங்கினான்.

அவள் சீட்டுக்களைப் பிடித்திருக்க, ஒவ்வொரு முறையும் அவளிடம் மெல்லிய குரலில் கலந்து ஆலோசித்துவிட்டு அவன் சீட்டை இறக்க, பெரும்பாலும் நித்தியே ஜெயித்தாள்.

கடைசிச் சுற்றில் "போங்கண்ணா... நீங்க எப்படி இருந்தாலும் அண்ணியை ஜெயிக்க வச்சிடுறீங்க" சலுகையாகக் கூறினாள், விந்தி.

"உங்க அண்ணி தோத்துப்போனா எனக்குப் பிடிக்காது. அதுதான்" என்ற நரேனின் குரலில் புரியாத ஒரு செய்தி!

அன்று மாலையில் அவன் மெதுவாக ஊன்றுகோலின் துணையுடன் குளியலறைக்குச் சென்று வந்தபோது லேசாகத் தடுமாறவே, ஓடிவந்து தாங்கிப் பிடித்துக்கொண்டாள், நித்தி.

வேகமாக விலகியவனிடம், "பார்த்து... மெதுவா... ஏன் இவ்வளவு வேகம்?" என்றாள், அக்கறையுடன்.

"நித்தி! தயவுசெய்து வேண்டாம். நான் தனியா சமாளித்துக்கொள்வேன்" என்று தடுத்தான், அவன்.

"ஏன்... எனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லை... நான் பிடிச்சிக்கிறேன்."

"வேண்டாம்! உனக்குப் பிடிக்காத எதையுமே எனக்காக செய்ய வேண்டாம்."

"உங்களுக்கு உதவுறது பிடிக்கலைன்னு நான் எப்ப சொன்னேன்?"

இயல்பாகக் கேட்டவளிடம், "தொட்டா அருவருப்பா இருக்குங்கிறதுக்கு உன் அகராதியில ரொம்பப் பிடிச்சிருக்குன்னு அர்த்தமா நித்தி?" தாழ்ந்த குரலில் கேட்டான், அவன்.

ஒரு கணம் செயலற்று நின்றவளுக்கு, தன் வார்த்தைகளை அவன் திருப்பிப் படிப்பது புரிந்தது.

"அன்னிக்கு ஏதோ ஒரு கோபத்துல வாய் தவறி..."

அவள் முடிப்பதற்குள், "மனசுல இருக்கிறதுதானே வார்த்தைகளா வரும் நித்தி?" ஒரு மாதிரிக் குரலில் கூறினான்.

அவள் அதை உடனே மறுத்தாள்.

"இல்லை... சிலநேரங்களிலே கோபத்துல பேசற வார்த்தைகளுக்கு பொருளே இருக்கிறதில்லை. தாங்கமுடியாத கோபம், அர்த்தமே புரியாத சொற்களா சிலநேரத்துல வெளிவரும். அதைப் பெரிசா எடுத்துக்கிறது சரியில்லை!" படபடவென்று கூறி முடித்தாள்.

நரேனும், சிறிது நேரம் மவுனமாக இருந்தான்.

பிறகு, "நானும் அதேதான் சொல்றேன் நித்தி! அன்னிக்கு நானும் அதேமாதிரிதான் அளவுக்கு மீறின கோபத்துல இருந்தேன். அதெல்லாம் நான் மனசாரப் பொருளறிஞ்சு பேசின வார்த்தைகள் இல்லை. கண்ணு மண்ணு தெரியாத கோபத்துல உளறினதுன்னுகூட வச்சிக்கலாம். தயவுசெய்து அதை மறந்திடு நித்தி!" மென்மையான குரலில் யாசித்தான்.

இதயத்தை யாரோ கசிக்கிப் பிழிவது போல் ஒரு வலியெழுந்துவிட, அந்த நிமிடம் 'ஓ'வென்று அழவேண்டும் போல் ஒரு உணர்வு!

தனிமையை நாடித் தோட்டத்திற்குச் சென்று யோசித்தபோது, அவனும் கோபத்தில் தன்னைப் போலவே பொருளுணராது பேசி இருப்பானோ என்ற உண்மை முகத்தில் அறைந்தது.

சூரிய அஸ்தமனத்தைப் பார்த்தபோது, மனதில் சொல்லொணாத ஏதோ ஒரு உணர்வு உதயமாகியது.

விழிகளில் மெல்லிய நீர்ப்படலம் உற்பத்தியாகிவிட, இறுகிப்போய் அமர்ந்திருந்தாள்.

அப்போது, "அண்ணி!" என்று மெல்லிய குரலில் அழைத்தபடி

எதிரில் வந்து நின்றாள், விந்தியா.

நித்தியின் விழிகள் கண்ணீருடன் பளபளப்பதைக் கண்டதும் பதறிப்போனாள், அவள்.

"என்னண்ணி... ஏன் அழறீங்க? ரொம்ப தைரியசாலின்னு நினைச்சேன்! அண்ணாவுக்கு சரியாயிடும்" என்றாள், ஆதரவான குரலில்.

தர்மசங்கடத்துடன்கூடிய சிறு முறுவலுடன் நித்தி நிமிர்ந்தாள்.

"உங்களோடு தனியா பேசலாம்னுதான் தேடி வந்தேன். உங்ககிட்ட ஒரு விஷயம் கேக்கணும். கொஞ்சம் 'பர்சனல்'! தப்பா நினைக்கமாட்டீங்களே?" கேட்டுவிட்டு தயக்கத்துடன் நின்றாள், விந்தியா.

அவளை அருகில் அமர்த்திக்கொண்டவள், "என்ன பேசணும் சொல்லு" என்றாள்.

"எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு அண்ணி! கல்யாணமான புதுசுல நீங்களும், அண்ணாவும் எவ்வளவு மகிழ்ச்சியா இருந்தீங்க... என்னால்தானே உங்களுக்குள்ளே பிரச்சினை? எனக்காக நீங்க கிஷோர்கிட்டப் பேசப் போயி அதனாலதானே அண்ணா உங்களைத் தப்பா நினைச்சி கடுமையாப் பேசிட்டார். இப்பெல்லாம் நீங்க ரெண்டு பேரும் சிரிச்சிப் பேசியே நான் பார்க்கிறதில்லை. ஏதோ ஒரு விலகல் தெரியுது! அதுக்காகத்தான் ஏதாவது கிண்டல் பண்ணி உங்க ரெண்டு பேரையும் மாத்தலாம்னு என்னென்னவோ செஞ்சி பார்க்கிறேன். முடியலை!

நீங்க ரெண்டு பேரும் உங்களை சுத்தி தனித்தனியா ஒரு கூடு கட்டிட்டு வாழ்ந்திட்டிருக்கீங்க. அதைவிட்டுட்டு வெளியே வரமாட்டேன்றீங்க. ரெண்டு பேரும் இப்படி இருக்கிறது என்னால்தானேன்னு ரொம்ப உறுத்தலா இருக்கு அண்ணி! இதோடு நான் எப்படி கிரியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியா இருக்க முடியும்? சொல்லுங்க" கண்ணீருடன் கேட்டாள்.

நித்திக்கு உடனே அவளைச் சமாதானப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

அவளறியாமல், "நீ நினைக்கிற மாதிரி இல்லை விந்தி! தொடக்கத்தில் இருந்தே நாங்க ரெண்டு பேரும் மகிழ்ச்சியான கணவன்– மனைவியா வாழலை! நண்பர்களாகத்தான் இருக்கோம்" உளறி முடித்தபிறகுதான் உதட்டைக் கடித்துக் கொண்டாள், அவள்.

விந்தியா, பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஏன்... அண்ணனை உங்களுக்குப் பிடிக்கலையா?" தவிப்புடன் கேட்டாள்.

"ஊஹூம்... உங்க அண்ணனை என் பதினைஞ்சாவது வயசுல இருந்து... என்னிக்கு எனக்கு சீர்செஞ்சு ஓலை முடைஞ்சாரோ அன்னிலேருந்து, என் உயிரா நேசிக்கிறேன். ஆனா, அவர்தான் என்னைப் புரிஞ்சிக்கலை."

தன் மனதையும், தாராவின் செயல்களால் அவன் பாதிக்கப்பட்ட விதத்தையும், தங்களுடைய முதலிரவில் அவன் கூறியதைப் பற்றியும் மெல்லிய குரலில் விவரித்தாள், நித்தி.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு இடிந்துபோய் அமர்ந்திருக்க– விந்தியாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"அண்ணி! இப்ப அந்தப் பிரச்சினைக்கு அப்புறம் நீங்க அண்ணாவை வெறுத்திடலையே?"

"இல்லை... நான்கூட அவரை வெறுத்திட்டதாதான் நினைச்சிட்டிருந்தேன். ஆனா, அவருக்கு விபத்துன்னவுடனே செத்துடலாமான்னு ஆச்சு. அப்புறம்தான், என் மனசே எனக்குப் புரிஞ்சுது. அவரை மன்னிக்கவே முடியாதுன்னு வீம்பா இருந்த எனக்குள்ளே– இப்ப யோசிக்கிறப்ப அவரை என்னால் வெறுக்க முடியாதுங்கிறது இன்னும் தெளிவாகுது. ஆனா, இவ்வளவு நடந்ததுக்கு அப்புறம், உண்மையான நேசமில்லாம கடமைக்கு அவரோடு இணைஞ்சு வாழ என்னால் முடியாதுன்னும் தோணுது. ஒவ்வொரு நிமிடமும் முள்ளிலே நிக்கிற மாதிரி தவிப்பா இருக்கு... குழப்பமா இருக்கு."

உணர்வுப் பிழம்பாய் உருகினாள், நித்தி.

"அண்ணி! நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. அண்ணா உங்களை ரொம்ப விரும்புறாரு. ஆனா, வெளியே சொல்லறதுக்கு முடியாம ஏதோ ஒண்ணு அவரைத் தடுக்குது– அது சுயகவுரவம்னு நினைக்கிறேன்... இல்லை நீங்க நிராகரிச்சிடுவீங்களோ என்கிற

பயமாகக்கூட இருக்கலாம். தயவுசெய்து பேசிப் பாருங்க அவரு உங்களைப் பார்க்கிற பார்வையிலேயே அவரோட அன்பும், தவிப்பும் தெரியுது" விந்தியா கெஞ்சினாள்.

"விந்தி! உனக்குக் கல்யாணமாகப்போகுது... நீ இப்ப மகிழ்ச்சியா இருக்கணும். இப்படித் தேவையில்லாத கவலையெல்லாம் மனசுல போட்டு குழப்பிக்கிட்டு இருக்காம, கிரிஅண்ணாவை மட்டுமே நினைச்சிட்டு ஜாலியா இருக்கணும்"

நித்தி மெதுவாக சமாளித்தாள்.

"இல்லை... முடியாது அண்ணி! அப்புறம் இந்தக் கல்யாணமே வேண்டாம்னு கிரிகிட்டச் சொல்லிடுவேன்! நீங்களும், அண்ணாவும் ஒண்ணுசேரணும். மகிழ்ச்சியா இருக்கணும். அதுதான் எனக்கு முக்கியம்! அண்ணாகிட்ட நான் போய் பேசவா?" என்றதும் பதறிப்போனாள்.

"வேணாம் விந்தியா! எனக்காக யாரும் பேசவேண்டாம் இது வழக்கு இல்லை. வாழ்க்கை! அன்பையும், காதலையும் யாசகமாப் பெற எனக்குப் பிடிக்கலை... பார்ப்போம்! அவரா மனசு மாறி வரட்டும். நான் காத்திருப்பேன்" என்றாள், வானில் மிதந்த மேகங்களைப் பார்த்தபடி!

"அப்புறம்... அண்ணி நீங்களும் தாராவைப் பார்த்ததா அன்னிக்கு சொன்னீங்களே... எப்போ?" ஆவலுடன் கேட்டாள்.

தாராவைப் பற்றிய விபரங்களைக் கூறியவள், "அவளோட தனிப்பட்ட தகவல்களைக்கூட எனக்கு அம்மா வீட்டில் இருந்தப்ப அனுப்பி வைச்சா! உங்க அண்ணாகிட்ட வேலையைப் பத்தி கேக்க தயக்கமா இருக்கு. அவருக்கு அவ மேல இன்னும் கோபம் இருக்குமே? என்ன செய்யறது?" பெருமூச்சுடன் கூறினாள்.

"அந்த விவரங்களை என்கிட்ட கொடுங்க. என் தோழியோட அண்ணாகிட்ட கேட்டுப் பார்க்கிறேன்."

"சரி வா! உள்ளே போகலாம்" என்றபடி விந்தியாவை அழைத்துச் சென்றாள், நித்திலா.

**தொ**டர்ந்து வந்த நாட்கள் நரேனுக்கும், நித்திக்கும் இடையே மெலிதான ஒரு பிடிப்பையும், நெருக்கத்தையும் ஏற்படுத்தி இருந்தன.



அவனுடனேயே அருகிலிருந்து, ஒரு தாய் தன் குழந்தையைக் கவனிப்பது போல் பார்த்துக்கொண்டாள், நித்திலா.

நரேன் சீக்கிரமே குணமடையத் தொடங்கினான்.

இடுப்பு 'பேண்டேஜ்' அகற்றப்பட்டு, இப்போதெல்லாம் ஊன்றுகோல் உதவியின்றி தானாக நடக்கத் தொடங்கினான்.

இப்போதெல்லாம் அவள் தாங்கிப்பிடித்தால் அவன் தடுப்பதில்லை.

மாலையானதும் அவனைப் பார்க்க நண்பர்கள் வர, சிறிது நேரம் அவளைக் காணவில்லை என்றாலோ தவித்துப்போய் தேடத் தொடங்கியிருந்தான்.

**"பெண்ணின் கோபம் வைரத்தின் ஜொலிப்பு! அது பிரகாசிக்கும்... ஆனால் எரித்துவிடாது!"**

பெண்களைப் பற்றிய 'தாகூரின் வரிகள்தான் ஞாபகம் வந்தன.

விந்தியாவும் அவ்வப்போது அவர்களைக் கிண்டல் செய்து சீண்டிவிட்டு, அவர்களின் நெருக்கத்திற்கு வழி வகுத்துக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் திடீரென்று 'போன்' செய்த தாரா, நித்திக்கு மிகவும் நன்றி கூறினாள்.

"நித்தி, நன்றி! உன் கணவரோட நண்பர் திடீர்னு ரெண்டு நாள் முன்னாடி எங்க விடுதிக்கு 'போன்' பண்ணி நேர்காணலுக்கு வரச்சொன்னாரு. நேத்து போனேன். இன்னிக்கு வேலைக்கான கடிதம் வந்துடுச்சி. எனக்கு இவ்வளவு சீக்கிரம் வேலை கிடைக்கும்னு நான் நினைக்கவே இல்லை. உன் கணவருக்கு நன்றி சொல்லிடுடி!" நெகிழ்ச்சியுடன் கூறிவிட்டு வைத்தாள்.

நரேனுக்கு தாரா விஷயம் எப்படித் தெரியும் என்று யோசிக்கும்போது இது விந்தியாவின் வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்பது புரிந்தது.

யோசனையுடன் அறைக்குள் சென்றபோது "யார்கிட்ட இருந்து 'போன்' நித்தி?" என்று கேட்டான்.

"ம்.. என் தோழிகிட்ட இருந்து" என்றவளுக்குள், தாராவிற்கு

உதவிய விஷயத்தில் அவனுக்கு எப்படி நன்றி கூறுவது என்ற தவிப்பும், யோசனையும் படர, மவுனமாக அமர்ந்திருந்தாள்.

நொடிக்கொருமுறை சந்தித்து மீள்கின்ற பார்வைகளின் விளைவாய், மனதிற்குள் அவன் அடக்கிய புன்னகையின் நீட்சியை, குறும்புடன் விரிந்த உதடுகளின் ஓரத்தில் அவள் விழிகள் கண்டுபிடித்தன.

"என்ன தாராவா?"

அவன் மெல்லக் கேட்டபோது, மவுனச் சிரிப்பில் அவன் உடல் குலுங்குவது புரிய, நித்தி பொய்க் கோபத்துடன் நிமிர்ந்தாள்.

"தாராவுக்காக, உங்க நண்பர்கிட்ட சிபாரிசு பண்ணியிருக்கேன்னு என்கிட்ட ஏன் சொல்லலை?"

"உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சியா இருக்கட்டும்னுதான்! விந்தியா எல்லாம் சொன்னா. உனக்காக இதைக்கூடவா நான் செய்யமாட்டேன், நித்தி?"

பூஞ்சிறகாய் வருடிய குரலில் மனம் படபடக்க, உடனே குனிந்துகொண்டாள், அவள்.

"இதுக்கு நீ 'நன்றி' சொல்லணும்! ஏன் நித்தி... என்கிட்ட நன்றி சொல்லக்கூட உனக்குப் பிடிக்கலையா?" ஏக்கத்துடன் கேட்டான், அவன்.

"ம்... நன்றி!"

திக்கித் திணறி அவள் கூறியதும், "ம்... இவ்வளவுதானா? நான் வேற எதிர்பார்த்தேன்" செல்லமாகச் சிணுங்கினான்.

பதற்றத்துடன் அவள் நிமிர்ந்தபோது, உதட்டைக் குவித்து அவள் ஒற்றைக்கண் சிமிட்டி குறும்புடன் நகைத்தான்.

முகம் சிவந்துவிட வேகமாக எழுந்து வெளியே ஓடிவிட்டாள் நித்திலா!

'தூரத்துக் கானல் நீர் தாகம் தீர்க்குமா? என் பக்கத்தில் வந்தாலே பத்தியம் என்கிறாயே... தேவதையே ஏன்?'

அவனுடைய மனம், ஊடல் கொண்டு செல்லமாய் சிணுங்கியது.



## 16

**வி**ந்தியாவின் திருமண நாளும் நெருங்கி வந்தது.

நரேனின் கைக் கட்டும் பிரிக்கப்பட்டு, வேலைக்குச் செல்ல தொடங்கியிருந்தான்.

மாலை நேரங்களில் நித்தி கார் ஓட்ட, இருவருமாகச் சென்று பத்திரிகை கொடுக்கும் வேலையைக் கவனித்தனர்.

கல்யாண காரியங்கள் வேகமாக நடக்க, கிரி- விந்தியா திருமணம் விமரிசையாக நடந்து முடிந்தது.

கூடவே தோழிப் பெண்ணாகவும், மாப்பிள்ளைத் தோழனாகவும் இருந்த நரேனுக்கும், நித்திக்கும் நெஞ்சப் பரப்பிற்குள் சுகமாய் பழைய' நினைவுகளின் அணிவகுப்பு!

மறுவீட்டு அழைப்புக்கு வந்திருந்தபோது- தேனிலவிற்கு நரேனும், நித்தியும் வந்தால்தான் தாங்களும் போவோம் என்று விந்தியா கூறிவிட்டாள்.

மறுவாரமே விடுப்பு எடுத்துக்கொண்டு நரேனும் தயாரானான்.

நால்வரும் ஒரே காரில் கிளம்பி கொடைக்கானல் சென்றனர்.

விடுதி அறையை நெருங்கும் முன்பு, விந்தியா பின்புறம் திரும்பினாள்.

"அண்ணா! இங்கே வந்தாவது ரெண்டு பேரும் மனசுவிட்டுப் பேசி முடிவுபண்ணுங்க. சீக்கிரமே நான் அத்தையாகணும்" என்றாள், குறும்புடன்.

"அதை நீ உன் அண்ணிகிட்ட சொல்லு!" நரேன், நித்தியையே பார்த்தபடிக் கூறினான்.

"ம்... நீங்க சுத்த மோசம்ண்ணா! அண்ணி என்கிட்ட ...ல்லாமே சொல்லிட்டாங்க" என்றதுமே- "உஷ்- விந்தி!" என்று ...த்தி அவளை வேகமாகத் தடுத்தாள்.

சட்டென்று அவள் முகம் சிணுங்கிவிட, கன்னங்களில் ...ரு டியூலிப் மலர்கள் இளஞ்சிவப்பாய் மலர்ந்தன.

"என்ன நித்தி! ஏன் அவளைத் தடுக்கிறே? அவ என்ன

சொன்னாள்னு நீ சொல்லு, விந்தி!"

கிரி ஊக்கப்படுத்த– போட்டு உடைத்துவிட்டாள், அவள்.

"அண்ணா! நீங்க ஓலை முடைஞ்சு சீர் செஞ்சீங்களாமே, ஏழு வருடத்துக்கு முன்னாடி. அன்னியிலிருந்து அண்ணி உங்களை விரும்பத் தொடங்கினாங்களாம். இத்தனை காலமா உங்கக் காதலுக்காக மவுனமாக் காத்திட்டிருக்காங்க" கூறிவிட்டு திரும்பிக்கொண்டாள்.

அதுவரை இருட்டாக இருந்த தன் உலகம் அந்த நிமிடம் பிரகாசமாய் மாறியதை உணர்ந்த நரேனுக்குள் அவளின் வார்த்தைகள் தேனாகப் பாய்ந்தன.

காதலெனும் சோலையில் சுகமாய் மிதந்த மனதிற்குள், அவளுடைய உயிரில் கரைய ஆசை வந்தது.

நரேனின் பார்வைகள் அவளைத் திருடிச் செல்ல, தங்களுக்கிடையே கிடைக்கப்போகும் தனிமைக்காகத் தவமிருக்க தொடங்கினான், நரேன்.

அறையில் வேகமாகக் கதவை மூடியவன், மனைவியிடம் மின்னலாய் திரும்பினான்.

"நித்தி, இங்கே வா."

அவன் மென்மையாக அழைத்ததும், மெதுவாக அருகில் சென்றாள்.

"விந்தி சொன்னது உண்மையா? நீ என்னை முன்னாலேயே விரும்பினியா?"

நம்பமுடியாத மகிழ்ச்சிப் பிரவசத்துடன் அவன் கேட்க– வெட்கத்துடன் குனிந்தபடி தலையசைத்தாள்.

"நித்தி... இதை ஏன் முன்னாடியே என்கிட்ட சொல்லலை?" பரிதவிப்புடன் நரேன் கேட்க–

"அப்ப நீங்க என்னை விரும்பலையே?" மெல்ல முணுமுணுத்தாள், நித்தி.

இத்தனை நாள் அவனுக்காகத் தவமிருந்து, அவனுடைய நேச வார்த்தைகளுக்காகக் காத்திருந்த வலி, அவள் வார்த்தைகளில் ஏக்க முணுமுணுப்பாய்!

உடலெங்கும் பொங்கிப் பர்விய பரிதவிப்பும், ஏக்கமும் அவளை அசைவின்றி வேரோடச் செய்தன.



# 17

நரேனின் புருவங்கள் வியப்பில் உயர்ந்தன.

"யார் சொன்னது? நம்ம முதலிரவில் அவசரப்பட்டு என் மனசைப் பத்தி புரிஞ்சிக்காம சொன்னது அது! மறுநாளே என் ஆழ்மனசுல நீ இருக்கிறதைப் புரிஞ்சிக்கிட்டு, ஏன் உன்கிட்ட அப்படிச் சொன்னோம்னு வருத்தப்பட்டு உன்னை நெருங்கி வந்தப்பல்லாம் என்னைவிட்டு நீ விலகி விலகிப்போனே!" ஆதங்கத்துடன் கூறினான், நரேன்.

வியப்புடன் நிமிர்ந்த நித்திக்கோ எதையுமே நம்ப முடியவில்லை.

"இல்லை... எனக்காக பொய் சொல்றீங்க?" செல்லமாகச் சிணுங்கினாள்.

"இல்லைடா நித்தி... சத்தியமா! எப்படிச் சொல்லி உன்கிட்ட என்னை நிரூபிக்கிறது. ம்... நான் உன்னை என் உயிருக்கு மேல விரும்பத் தொடங்கி ரொம்ப நாளாச்சு! தொடக்கத்திலேருந்து சொல்றேன். அப்பதான் உனக்கு புரியும்.

முதல்தடவை எனக்காக விந்திகிட்ட பரிஞ்சு பேசின பாரு... அப்பவே ரொம்ப மகிழ்ச்சியா இருந்தது. வீட்டில எல்லாரோடயும் இயல்பாப் பழகின நீ, சமையல் செய்யறப்ப அப்பாவைக்கூட உங்களோடு ஒண்ணா சேத்துக்கிட்டு மகிழ்ச்சியா இருந்தப்ப, என்னை மட்டும் ஏத்துக்கலையேன்னு வந்த ஏக்கம் கோபமா மாறிச்சி!

இரவு எனக்காக நீ முழிச்சிருந்து கவனிச்சிட்டப்ப... என் வேலையில பங்கெடுத்துக்கிட்டப்ப... இவதான் என் துணை... எனக்காகவே பிறந்த ஒரு தேவதை இவள்னு மனசுல ஆணித்தரமா ஒரு எண்ணம் வந்தது...

சினிமாவுக்கு 'டிக்கெட்' எடுத்துட்டு வந்ததுமே விந்தியோட போகலாம்னு கேட்டதும், என்னைவிட அவ உனக்கு முக்கியமான்னு ஒரு பொறாமை உணர்வை ஏற்படுத்தினே பார்... அன்னிக்கே நான் என்னை முழுசா உணர்ந்துட்டேன்.

குலதெய்வம் கோவிலுக்கு போனப்ப உன் கன்னக் காயத்துக்கு ருந்து தடவினப்ப வெறுப்பா நீ திரும்பிட்டியே... அப்போ

என் மனசுல பெரிய அடி! ஆனா, ஒவ்வொருதடவையும் எனக்குள்ளே நீ ஆழமாப் பதியத் தொடங்கி என் உயிரில் கலந்துட்டே நித்தி...

எல்லாத்துக்கும் மேல விந்தியாவுக்காக நீ செய்த தியாகங்கள்... ஆனா, அது எனக்குத் தெரியலை! யாரோ ஒருத்தனோட ஓட்டல்ல நீ தனியா உக்கார்ந்து பேசி ஒரு சூட்கேசை எடுத்துட்டு தோல்பையை வாங்கினே பாரு... அந்த நிமிடம் நான் சுக்கல் சுக்கலா உடைஞ்சு சிதறிட்டேன்...

ஆனா, நான் செய்யவேண்டிய கடமையை நீ செய்யறேன்னு தெரிஞ்சிருந்தா, சத்தியமா அப்படி பேசியிருக்கமாட்டேன். நீ எனக்கு மட்டும்தான் உரிமையானவள்னு ஒரு சுயநல எண்ணம் வந்து மனசில புகுந்து, உடனே என்னை கோரத் தாண்டவமாட வெச்சிடுச்சி! அதுக்கப்புறம் என்னையே நான் வெறுக்கத் தொடங்கினேன்.

சாரிடா நித்தி! ஆனா, அப்புறம்கூட என் விருப்பத்தைச் சொன்னப்புறம், நீ என்னை நிராகரிச்சிட்டா என்ன செய்யறதுங்கிற பயம்தான் என்னைப் பேசவிடாம செஞ்சுது. 'ஐ லவ் யூ'டா நித்தி..."

தவிப்பும், ஏக்கமுமாய் தன் மனதை வெளிப்படுத்தியவனை– காதலும், பிரமிப்பும் விழிகளில் இரண்டறக் கலந்துவிட, வெட்கத்துடன் ஏறிட்டாள், நித்திலா.

நரேனின் ஒற்றைக்கை உயர்ந்து– 'என்னிடம் வருவாயா?' என்ற ஏக்க அழைப்புடன் தவித்து நிற்க, மறுநொடியே ஓடிவந்து அவனிடம் சரண் புகுந்தாள், அவள்.

தன் நீண்ட காலத் தவம் இன்று மெய்ப்பட்டது, அவளுக்குப் புரிந்தது.

மகிழ்ச்சியும், நம்ப முடியாத தவிப்பும், போட்டி போட்டு அவளை அலைக்கழிக்க– உடனே அவளைத் தன்னுடைய வளாக்கிக்கொண்டான், நரேன்.

பிறகும், பிரிய மனமின்றி வெகுநேரம் தன் அணைப்பிலேயே அவளை வைத்திருந்தவன், களைப்பில் தன் மார்பில் விழி மூடி அவள் உறங்கும் அழகை மெல்லிய விளக்கொளியில் ரசித்துக்கொண்டிருந்தான்.

அந்த நிமிடம் அவளைப் பார்த்தபோது தன் வாழ்வை விடியச் செய்வதற்கென்றே பிறந்தவளாய்... தன் உலகத்தை



அழகாக்கியவளாய் தோன்றியது.

இமைகளில் கனவுகளை சுமந்ததால், ஏனோ உறக்கம் வர மறுத்தது.

ஒரு பெரும் பிரபஞ்சமாய் அவனுக்குள் வியாபிக்க தொடங்கியிருந்தாள், அவள்.

## 18

விடியல், பூமிக்கு வெளிச்சத்தைப் பரிசளிக்க தொடங்கியது.

விழிப்பு வந்து உசுப்பி எழுப்ப சோம்பலுடன் இமைகளைப் பிரித்தாள், நித்தி.

எதிரே கண்கொட்டாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்த நரேனின் சிவந்த விழிகள், ரகசியச் சுருங்கலுடன் பூபாளம் பாடின.

அவனுடைய மென்மையான காதல் உணர்வை, புதுக் கவிதையாய் வெளிப்படுத்தின அவன் விழிகள்!

"ஏங்க... அதுக்குள்ளே முழிச்சிட்டீங்க..."

கேட்டபடி எழுந்தவளை நரேன் மெல்லச் சிறை செய்தான்.

"முடிச்சிட்டீங்களாவா..." எங்கே தூங்கினேன்... என் தேவதை எப்ப கண்முழிச்சி வரம் தருவாள்னு காத்துட்டு இருந்தேன்."

"ஓ..." பொய் சிணுங்கலுடன் அவன் மார்பில் செல்லமாகக் குத்தியவளை இறுக அணைத்தான்.

"ஏய்... நான் அதைச் சொல்லலை... என் மனசுல இருந்ததையெல்லாம் நான் சொல்லிட்டேன்... நீ மட்டும் இன்னும் நான் கேக்க விரும்புற அந்த வார்த்தையைச் சொல்லவே இல்லையே... அந்த வார்த்தைகளுக்காக உன் முகத்தையே... அந்த செப்பு உதடுகளையே ஏக்கமாய் பார்த்திட்டுருந்தேன்."

குறும்புடன் கூறியபடி அவளுடைய முன் நெற்றிச் சுருளை செல்லமாய் ஒதுக்கிவிட்டான்.

"ம்... நீங்க எங்கே என்னை சொல்லவிட்டீங்க..." நித்தியும் சலுகையாகக் கொஞ்சினாள்.

"ஏங்க... நான் உங்களை என்ன பண்ணேன்... தடுத்தேனா?" குறும்புடன் கேட்டு அவளை சிவக்க வைத்தான், நரேன்.



மெதுவாக எழுந்து அமர்ந்தவளை, தன் தோள்களில் சாய்த்துக்கொண்டவன், "இப்ப சொல்லு!" என்றான் மென் குரலில்.

"ம்... முதல் முதலா நீங்க எனக்கு ஓலைத்தட்டி முடைஞ்சு வச்சிட்டு, அந்த ஓலை இடுக்கு வழியா என்னைப் பார்த்தீங்களே... அந்த நிமிடமே என் மனசு சொல்லாமலே இடம் பெயர்ந்து போயிடுச்சி... உங்களுக்காகவே மனசு காத்திருக்க தொடங்கியது.

தாராவுக்குப் பாத்த மாப்பிள்ளை நீங்கதான்னு மண்டபத்துல தெரிஞ்சப்ப உடைஞ்சுபோன நான், உங்களை எனக்குன்னு முடிவு பண்ணின உடனே நம்ம கனவு நனவாயிடுச்சேன்னு ரொம்ப மகிழ்ச்சி அடைந்தேன். ஆனா, அப்புறம் உங்க வார்த்தைகளே என்னை வீழ்த்திப் போட்டுடுச்சு... சரி, ஒரு தோழியாவது நம்மை ஏத்திட்டிருக்காரேன்னு– என் காதல், இத்தனை வருடத் தவம் மெய்யப்படணுமேன்னு மவுனமா காத்திருக்க தொடங்கினேன்.

நீங்க சொன்னீங்களே... அந்த நேரமெல்லாம் நானும் தவிப்போடுதான் இருந்தேன். சொல்லப்போனா மனசு முழுக்க மூச்சுமுட்ட நேசத்தை மட்டும் சுமந்துட்டு அமைதியா இருந்தேன்.

அப்பதான் விந்தியாவோட பிரச்சினை வந்தது. ஆனா, அந்த வார்த்தைகள் என்னை ஆழமாத் தாக்கி– மாறாத ரணமாயிடுச்சி!"

அவள் முடிப்பதற்குள், "என் செல்லம்... சாரிடா..." மீண்டும் மன்னிப்புக்கோரினான், நரேன்.

அவன் குரலில் நெகிழ்ச்சி இருந்தது.

"ஆனா அது வீண் சந்தேகத்தினாலன்னு நினைச்சேனே தவிர, என்மேல கொண்ட காதல்தான் அதுக்குக் காரணம்னு எனக்கு சத்தியமாய் புரியலை... ஆனா, அப்புறமும் என்னால உங்களை வெறுக்க முடியலை... வெறுத்த மாதிரி நடிச்சேன்! எந்த நேரத்துலேயும் உங்களை என்கிட்ட நெருங்கவிடக் கூடாதுங்கிறதிலே உறுதியா இருந்தேன். அதுவும் ஒருவித சுயநலம்தான்!

ஆனா, உங்களுக்கு விபத்து நடந்து, அன்னிக்கு என் உயிரைத் தொலைச்சுட்டு நான் தேடினப்பதான், பதினைஞ்சு வயசுல



துளிர்விட்ட காதல் வாடவில்லை, விருட்சமாகி இருக்குன்னு புரிஞ்சுக்கிட்டேன்.

நான் ரொம்ப தவிச்சுப்போன நாட்கள் எது தெரியுமா? உங்களுக்கு உடம்பு சரியில்லாம இருந்தப்ப உதவி செஞ்ச அந்த நிமிடங்கள்தான்...

மனசு முழுக்க நேசத்தை சுமந்துட்டு, உங்க அருகாமையையும் தவிர்க்க முடியாம, உங்க பேச்சுகள் வேற என்னை ரொம்பப் பாதிக்க, சங்கடத்தை வெளிப்படுத்திடாம இருக்கறதுக்கு நான் ரொம்ப கஷ்டப்பட்டேன்...

ம்... அப்பப்பா... எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கு..." பெருமூச்சுடன் நிறுத்தினாள். புயல் கடந்து மீண்ட நிம்மதி தெரிந்தது, அதில்!

"இப்ப அந்தக் கனவு முடிஞ்சி, நாளும் தவமிருந்து நீ கேட்ட வரம் மெய்ப்பட்டுடுச்சு இல்லையா? அன்னிக்கு ஒரு நாள் தாரா விஷயத்துல நீ என்கிட்ட நன்றிக்கடன் பட்டப்ப, நான் ஒரு கோரிக்கை வச்சேனே... அதை நீயா நிறைவேத்தவேமாட்டியா நித்தி?"

குறும்புடனும், ஏக்கத்துடனும் உதட்டை ஒரு விரலால் சுட்டியபடிக் கேட்டான், நரேன்.

நித்தியின் முகம் செந்தாமரையாய் சிவந்துவிட, வெட்கத்தில் குறுகுறுத்த விழிகளை இமைகளுக்குள் புதைத்தவள்– மெதுவாக உயர்ந்து அவள் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டாள்.

நரேனுடைய விழிகளில், சொர்க்கத்தின் திறப்பு விழா!

வெளியே சூரியனும், இரவுக் கன்னியின் அணைப்பிலிருந்து வெட்கத்துடன் விடுபட்டு கிழ்வானத்தையே சிவப்பாக்கியபடி உதயமாக தொடங்கியிருந்தான்.

சூரியக் காதலனின் வரவை எதிர்பார்த்து, பனிச் சாரலில் நனைந்து சிலிர்த்திருந்த ரோஜா மொட்டுகள், வேகமாகத் தன் இதழ்களை விரிக்கத் தொடங்கின.

**(முடிந்தது)**

ராணிசிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.